கல்கி

குடும்பத்துடன் படிக்க...

KALKI
19.8.2007 ரூ.8.00
80 பக்கங்கள்



கேபிள் பிடி சண்டை!
கை விட்டுப் போகும் 500 கோடி!



எதிர்காலத்தின் அபூர்வ காட்சி...?

Team
Health Shoppe
For Wellness

சென்னையில், டீம் ஹெல்த் ஷாப்பின் 4வது கிளை திறப்பு - புரசைவாக்கத்தில்

ஆலோ வேரா அருந்துங்க ஜோரா

ஆலோ வேரா ஜூஸ்...

நம் உடலின் நோய் எதிர்ப்பு சக்திக்கு தேவையான இன்றியமையாத அமினோ ஆசிட், விட்டமின், மினரல் மற்றும் என்சைம் ஆகியவற்றை கொண்ட ஆலோ வீரா தற்போது இயற்கையான ஜூஸ் வடிவில்...

- Cold press மூலம் பதப்படுத்தப்பட்டது.
- தரமான, சுத்தமான இலைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது.
- தேவையான சத்து பொருட்களை காக்க 100% stabilize செய்யப்பட்டது.

டீம் ஹெல்த் ஷாப்பின் இதர பொருட்கள்

• டீம் சோடியம் அல்லாத உப்பு • டீம் அரை உப்பு • டீம் நல்லெண்ணெய்
• டீம் தேங்காய் எண்ணெய் • கற்றாழை - சருமம் மற்றும் மேனிப் பராமரிப்பு பொருட்கள் • தேன் வகைகள் • டீம் எனர்ஜி வாட்டர் • பனைப்பொருட்கள்
• மரபு முறை, கைகுத்தல் உணவுப் பொருட்கள் • கொடைக்கானல் மலை தைலம்

ஸ்பெஷல் ஆஃபர்*

அனைத்து ஆலோவீரா தயாரிப்புகளுக்கும் 5 முதல் 10% தள்ளுபடி. இச்சலுகை குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே



www.teamhealthshoppe.com



TEAM EUBIO CARE

(Division of CAL)

வண்டலூர்: - போன்: 2275 0502

இந்திரா நகர்: - போன்: 4269 5115

அண்ணாநகர்: - போன்: 4269 3332

புரசைவாக்கம்: 23B, கீழ்தளம், பிரின்ஸ் டவர், (அபிராமி மால் எதிரில்), புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-10. போன்: 4542 8898

For bulk requirements, Contact :
Team House - GST Road, Vandalur, Ch - 48
Fax : 22750860 (or)
E-mail: teamhealthshoppe@drraoholdings.com

OPEN ON ALL DAYS





மணலில் ஒரு கறுப்பு தாஜ்மஹால்!

"இன்று உலகமெங்கும் மணல் சிற்பக்கலை மிகவும் பிரபலமாக விளங்குகிறது. இந்தக் கலையில் உலக அளவில் ஆண்டுதோறும் சாம்பியன் ஷிப் போட்டிகள் நடைபெறுகின்றன. கடந்த வருடம் சீனாவில் நடந்த போட்டியில், எனக்கு உலக சாம்பியன்ஷிப் பரிசு கிடைத்தது. மணலில் நாற்பது அடி உயரம் கொண்ட தியான நிலையில் அமர்ந்திருக்கும் புத்தர் சிற்பத்தை நான் உருவாக்கினேன்'' என்கிறார் சுதர்சன் பட்னாயக். ஒரிசா மாநிலம் கடற்கரை நகரான பூரியைச் சேர்ந்த இருபத்தெட்டு வயது இளைஞர். ஆக்ராவில், உலகப் புகழ்பெற்ற தாஜ்மகாலுக்குப் பக்கத்தில், யமுனை நதியின் கருமை நிற மணலைக் கொண்டு ஒரு கறுப்பு தாஜ்மகாலை இவர் உருவாக்கியபோது, உலக அளவில் இவருக்குப் பாராட்டுக் கிடைத்தது.

''உங்களுக்கு இந்தச் சிற்பக் கலையில் எப்படி ஆர்வம் ஏற்பட்டது?''

''இந்தியாவிலேயே மணல் சிற்பங்களுக்குப் பெயர் பெற்றது பூரிதான். எனக்குச் சிறுவயது முதலே ஓவியம் வரைவதில் ஆர்வம் உண்டு. பூரி ஜகன்னாதன் அருளால்தான், எனக்கு இந்தத் திறமை கிடைத்திருப்பதாக நான் நினைக்கிறேன். எங்கள் வீடு பூரியில் கடற்கரைக்கு மிக அருகில் உள்ளது. எனவே, அடிக்கடி கடற்கரைக்குப் போய் மணலில் என் கற்பனையில் உதித்த மனித முகங்களையும், கடவுள் முகங்களையும் உருவாக்குவேன். அதனை, கடற்கரைக்கு வரும் மக்கள் ரசித்துப் பாராட்டுவார்கள். ஒருமுறை துர்கா பூஜையின்போது நான் உருவாக்கிய துர்காதேவியின் முகம் மிக அற்புதமாக அமைந்தது. அதனை பத்திரிகைகள் புகைப்படத்துடன் வெளியிட்டன. அதுதான் எனக்குக் கிடைத்த முதல் மீடியா பப்ளிசிட்டி. அதன்பின் வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகள் வாங்





கியபோது, எல்லோரும் என்னைக் கவனிக்கத் தொடங்கினார்கள்.''



✱ சுதர்சன் பட்னாயக்

நாட்டு நடப்புக்கு ஏற்ப இவர் மணல் சிற்பங்கள் வடிப்பதுண்டு. சுனாமி தாக்கியபோது கடல் அலையில் மூழ்கிய பெண் ஒருவர் கண்ணீர் விடுவது போல மணல் சிற்பம் செய்தார். பக்கத்திலேயே 'சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுங்கள்' என்று எழுதி வைத்தார். துர்கா தேவியையும், மகிஷாசுரனையும் மணலில் உருவாக்கிய சமயத்தில், வீரப்பன் அதிரடிப் படையால் கொல்லப்பட்ட செய்தி வந்தது. உடனே மகிஷாசுரனை, வீரப்பனாக உரு மாற்றியபோது அத்தனை டி.வி. சேனல்களும் அதனை ஒளிபரப்பி பரபரப்பூட்டின!

மணல் சிற்பங்களை உருவாக்குவதில் உலக சாதனைப் புரிந்து, கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிப்பது இவரது லட்சியம். பூரியில், சுதர்சன் பட்னாயக் நடத்திவரும் மணல் சிற்பக்கலை பயிற்சி மையத்தில் ஐம்பது மாணவர்கள் வரை படிக்கிறார்கள் என்பது சந்தோஷ செய்தி.

சந்திப்பு:எஸ்.சந்திரமௌலி





கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி
தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்
ஆசிரியர் குழு :
சா.ஜெயராஜ், ஆரணி யுவராஜ்
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்
தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324
தொலைநகல் :
044 - 22251021
மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com
சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 440/-
ஆறு மாதம் : ரூ. 220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ்.டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.



நாடு தழுவிய சோகம்!

எதிர்காலத்தின் அபூர்வ காட்சி?

பிறந்தநாட்டையும், பேசும் மொழியையும் போற்றுவதற்கு உருவமாகத் தாயைக் குறிப்பிடுகிறோம்- நமது பாரதத் திருநாட்டில். ஆனால் அத்தகைய மதிப்புமிக்க தாய்மை ஸ்தானத்துப் பெண்பால் சிசுக்கள் இந்தியாவில் கொல்லப்பட்டு வருகின்றனர். ஒரிஸா, மத்தியப் பிரதேச மாநிலங்களிலும் தமிழ்நாட்டிலும் இப்படிப்பட்ட மகாபாவங்கள் தொடர்ந்து வருகின்றன.

நெஞ்சைக் கனக்கச் செய்யும் இந்த அவலத்தைப் பற்றிப் பல்துறை வல்லுநர்களின் கருத்துகளைக் கேட்டறிந்தோம்.

“தமிழ்நாட்டில் தொட்டில் குழந்தைத் திட்டம் இருந்தாலும், வறுமையில் உழலும் பெண்கள், 'நமக்கே இந்த நிலை, நமது பெண் குழந்தை என்ன பாடுபடுவோளோ?' என்னும் எண்ணத்தில் பெற்ற குழந்தையையே கொல்லத் துணிகின்றனர்'' என்று கூறும் டாக்டர் ஷ்யாமா, பிர்லா ஃபௌண்டேஷன் உதவியுடன் மதுரை, தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் பெண் சிசுக் கொலைகளைப்

பெண் சிசுக் கொலை –



* உ. நிர்மலா ராணி

இன்றைக்குச் சமூகத்தில் ஆண்கள் மற்றும் பெண்களின் மனதிலும் ஒரு சமூக நோயாகப் பரவி வரும் பெண் சிசுக் கொலை குறித்து, அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் மாநில நிர்வாகி உ. நிர்மலா ராணியிடம் பேசினோம். ஆக்கப்பூர்வமான பல கருத்துகளை நம்மோடு பகிர்ந்துகொண்டார்.

தேசிய அளவில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைந்து வருவதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றனவே, இந்த நிகழ்வு செயற்கையானதுதானே?

''இது முற்றிலும் செயற்கையானதே. மக்கள் தொகையில் ஆண் - பெண் விகிதம் என்பது 1000 ஆண் குழந்தைகளுக்கு 971 பெண் குழந்தைகள் பிறக்க வேண்டும். பெண் சிசுக் கொலைகள் மற்றும் கருக்கொலைகள் என்று நிகழ்ந்து வருவதால், மக்கள்தொகையில் பெண்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்துகொண்டே வருகிறது. யுனிசெஃப்



பற்றி ஆராய்ச்சி செய்தவர்.

"சேலம் போன்ற பகுதிகளில் மருத்துவ மனையில், பெண் குழந்தை பிறந்திருப்பது தெரிந்தவுடன் அங்கேயே தூக்கமாத்திரையைப் பொடித்து, குழந்தைக்குக் கொடுத்து, தூக்கத்திலேயே உயிர் பிரிய வைத்து விடுகிறார்களாம்! சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பு பெண் சிசுக் கொலையைத் தடுக்கவும், அது தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் பல தொண்டு நிறுவனங்கள் களத்தில் இறங்கின. இப்போது, அந்த நிறுவனங்கள் எய்ட்ஸ் பிரசாரம் செய்வதில் முனைந்து விட்டன. அதற்குத்தான் மத்திய, மாநில, உலக அளவிலான அமைப்புகள் ஏராளமாக நிதி உதவி செய்கின்றன. பெண் சிசுக் கொலைத் தடுப்பு என்பது ஆதரவற்று நிற்கிறது" என்றார் ஷ்யாமா.

ஒரு மனநோய்!

இதை உறுதி செய்துள்ளது. இந்தியாவில் மட்டும் ஆண்டுக்கு ஐந்து லட்சம் பெண் குழந்தைகள் கருக்கொலை வாயிலாகவும் அழிந்து போகின்றன."

இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் யார் தான் பொறுப்பு?

"நம்முடைய ஒட்டுமொத்த சமூகம்தான் இக்கொடுமைகளுக்குத் தார்மிகப் பொறுப்பு; இங்கு பெற்றோர்கள் ஆண் குழந்தைகளையே பெரிதும் விரும்புகின்றனர். ஆண் - பெண் குழந்தை விருப்பம் என்பது சமத்துவத்தில் நிலைக்க வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்பு டெல்லியில் தேசிய பெண்கள் ஆணையம், நடத்திய பெண் சிசுக் கொலைகள் தடுப்பது குறித்த கருத்தரங்கில் அனைத்து மதத் தலைவர்களும் கலந்துகொண்டு பெண் சிசுக் கொலைத் தடுப்பு குறித்துப் பேசினார்கள். அவர்களது முழக்கங்களினால் மட்டுமே இந்தக் கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட முடியாது. பெண்களுக்குப் பாதகமாக அமையும் தவறான மத நம்பிக்கைகளையும், மதச் சடங்குகளையும் கடைபிடித்து வாழ்ந்துவரும் பெரும்பான்மை மக்களின் மனநிலை மாற்றங்களினால் மட்டுமே இவற்றுக்குத் தீர்வுகாண இயலும்."

பெண் சிசுக் கொலைகளைச் சட்டப்படியும் சமூக அளவிலும் தடுப்பது



எப்படி?

"அரசியல் சட்டம் இயற்றியபோது பின்வரும் காலங்களில் பெண் சிசுக் கொலைகள் அதிகரிக்கும் என்று எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அதனால், இருபாலருக்கும் பொதுவாக உயிர் வாழும் உரிமைகள் மட்டுமே சட்டமாக இயற்றப்பட்டன. பெண் சிசுக் கொலைகள் இ.பி.கோ 302-இன் கீழ் கொலைக் குற்றமாகப் பதிவு செய்யப்படுகிறது. அதிலும் குழந்தையின் தாய் மீது மட்டுமே வழக்குப் பதிவாகிறது. பெண் கருக்கொலை, சிசுக்கொலை மற்றும் கருவிலே பாலினத் தேர்வு போன்ற மூன்று நிகழ்வுகளுக்கும் தனியான பிரிவுகளில் கடுமையான சட்டங்கள் கொண்டு வர வேண்டும். சமூக நடவடிக்கை என்பதில் மருத்துவமனை ஸ்கேன் மையங்கள் மற்றும் தனியார் ஸ்கேன் மையங்களின் பங்குகள் மிக முக்கியமானது. ஸ்கேன் மையங்கள் அரசிடம் பதிவு செய்யப்பட வேண்டும். ஸ்கேன் மையங்களின் தகவல்களின் அடிப்படையிலேதான் பெண் சிசுக் கொலைகள் பரவலாக அரங்கேறி வருகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை."

பெண் கருக்கொலைகளும் சிசுக் கொலைகளும் தொடர்ந்து நிகழுமேயானால், எதிர்காலத்தில் ஆண்-பெண் இயல்பு வாழ்க்கை என்னவாகும்...?

"சமூகவியலாளர் அமித்தாய் எட்ஸியோன் கூற்றுப்படி, சமச்சீரான பெண் பிறப்பு விகிதம் கெடுகிறபோது கோடிக்கணக்கான ஆண்கள் பாலியல் குற்றவாளிகளாக

"பெண்சிசுக் கொலைக்கு வரதட்சணை போன்ற எதிர்கால அச்சங்கள் மட்டுமே காரணம் என்று சொல்ல முடியாது. ஆணின் பொறுப்பின்மையும்கூட அவனுடைய குழந்தை கொல்லப்படுவதற்கு ஒரு முக்கிய காரணம்" என்று கூறும் கௌதமன், ஒசூரில் உள்ள சேவாபாரதி என்னும் தொண்டு நிறுவனத்தின் சார்பில் 'ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்தை நடத்தி வருபவர்.



"அண்மையில் எங்கள் பகுதியில் நடந்த நிகழ்ச்சி இது! காதல் திருமணம் செய்து கொண்ட ஒரு பெண். கையில் இரண்டு வயதில் ஒரு பெண் குழந்தை. இரண்டாவதாக கர்ப்பமாகியிருந்தார். இரண்டு லட்ச ரூபாய் கடனை வாங்கி வைத்து விட்டு கணவன் ஓடிப்போய் விட்டான். அந்தப் பெண் வேறு வழியின்றி குழந்தையோடு தற்கொலை செய்ய விஷம் குடித்தாள். அந்த இரண்டு வயதுக் குழந்தை பிழைத்து விட்டது. இப்படிப் பாவம் செய்ய நிர்பந்தப்படுகிறாள் பெண்" என்றார் கௌதமன்.

இக் கொடுமை கிராமப்புறங்களில் மட்டுமல்ல; நகரங்களில் தொடர்கிறது. கடந்த இருபது ஆண்டுகளில் நாடு முழுவதிலுமாக ஒரு கோடி பெண் சிசுக்கள் கொல்லப்பட்டிருக்கின்றன என்று ஓர் உத்தேசமான புள்ளி விவரத்தை அளித்திருக்கிறது மத்திய அரசு.

தமிழ்நாட்டில் ஒன்று முதல் ஆறு வயதுள்ள பிரிவினரில் 1991-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது 1000 ஆண் குழந்தைகளுக்கு 948 பெண் குழந்தைகள் இருந்தன. 2001-ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் பெண் குழந்தைகள் 939-ஆகக் குறைந்துள்ளன. ஹரியானா, பஞ்சாப் மாநிலங்களில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 800 பெண் குழந்தைகளே பிறக்கின்றனர்.

"பஞ்சாப், ஹரியானா மாநிலங்களில், ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பே சிசுக்

மாறிவிடக்கூடும். அல்லது பிரம்மச்சாரிகளாகவே காலம் தள்ளுவர். இல்லையேல் ஒரு பெண் பல ஆண்களை மணந்து கொள்ளக் கட்டாயப்படுத்தபடுவாள். அல்லது பெண்கள் கடத்தப்படுவார்கள். பஞ்சாப், ஹரியாணா போன்ற மாநிலங்களில் ஆண்களைவிட பெண்களின் பிறப்பு விகிதம் இயல்பிலேயே குறைவு. அந்த மாநில ஆண்களுக்காக இந்தியாவின் கிழக்கு மாநிலங்கள் மற்றும் வங்காள தேசத்திலிருந்தும் ஏழைப் பெண்கள் கடத்தி வரப்படுகிறார்கள்!

போலியோ நோய்த் தடுப்பில் முழு அளவில் வெற்றி பெற்று விட்டோம். அதுபோல பெண் சிசுக்கொலை மற்றும் கருக்கொலைத் தடுப்புகளில் முழுவெற்றி காண இயலாதா...?

போலியோ நோய்த் தடுப்பில் நாம் வெற்றி பெற்றோமெனில், அது உடல் சார்ந்த நோய். குறிப்பிட்ட நபரையும் அவஸ்தைகளுக்கு ஆளாக்கி, குடும்ப உறுப்பினர்களையும் பல கஷ்டங்களுக்கு ஆளாக்கி வந்தது போலியோ. அதனால் போலியோவை இல்லாது ஆக்கிட வேண்டும் என்கிற மன எழுச்சி எல்லோரிடமும் ஏற்பட்டது. ஆனால், பெண் சிசுக் கொலைகளும் கருக்கொலைகளும் இந்தச் சமூகத்தின் மனம்சார்ந்த நோய். இதில் சமூகப் பொருளாதாரச் சிக்கல்கள் பலவும் பின்னிப் பிணைந்துள்ளன. அதனால், சமூகத்தில் உள்ள அனைவரிடத்திலும் மனநிலை மாற்றம் நிகழ்வதால் மட்டுமே இதனைத் தடுத்து நிறுத்திட முடியும்.''

சந்திப்பு : **ஸ்ரீ அரசு**

படங்கள் : **திருச்சி விஜய்**


* வசந்திதேவி

கொலைகள் துவங்கிவிட்டன. அதனால், அங்கே பல குடும்பங்களில் இன்று பெண் குழந்தைகளே இல்லாத நிலைமை! உத்திரப் பிரதேசம், பீஹார் மாநிலங்களைச் சேர்ந்த ஏழைப் பெண்களை பஞ்சாப், ஹரியானா மக்கள் விலை கொடுத்து வாங்குகின்றனர். அந்தப் பெண்கள் ஒரே குடும்பத்திலுள்ள ஆண்கள் பலருக்கும் போகப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றனர். ஒரு கட்டத்துக்குப் பிறகு இவர்கள் விபசாரத்துக்குத் தள்ளப்படுகிறார்கள். ஆண் வர்க்கத்தின் பெண் வேட்டை தொடரும் போது, பெண் என்பவள் அஃறிணை உயிரினமாகி விடுவாள்'' என்று எச்சரிக்கிறார் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வசந்திதேவி.

அரசாங்கம் மற்றும் தனியார் சமூக அமைப்புகள் இக் கொடூரத்தை அடியோடு ஒழிக்க எடுக்கும் முயற்சிகளில் பொது மக்களும் உணர்வுடன் ஒத்துழைக்க வேண்டும். இது விஷயமாக மக்களுக்கு விழிப்புணர்வூட்ட பிரபலங்களும் மத அமைப்பு தலைவர்களும் முன்வர வேண்டும். இவர்கள் சொன்னால்தான் மக்கள் செவி கொடுத்து கேட்பார்கள். அப்படியெல்லாம் செய்யாது, இந்நிலை தொடருமானால், சிவிகித்தில் பெண்களைக் கொண்ட ஆரோக்கியமான சமூகச் சூழல் எதிர்காலத்தில் அபூர்வ காட்சியாகிவிடும்.


* கௌதமன்

– **அர்ஜுன்**

அட்டைப்படம் : **ஸ்ரீஹரி**

மாடல் : **ஸ்ருதி, காயத்ரி சந்திரசேகர்**

கிரேஸியைக் கேளுங்கள்



★ கே.வெங்கட், விழுப்புரம்

சாத்தான் உங்கள் முன் தோன்றி என்ன சாபம் வேண்டும் என்று கேட்டால்...?

ஏழு வயது அண்ணங்காரன் தனது ஐந்து வயது தங்கச்சிப் பாப்பாவை விளையாட்டாகப் பயமுறுத்த, முகமூடி அணிந்து வந்தானாம். ''அய்யோ... பூதம்'' என்று ஏமாந்த தங்கை பயந்து அழ, அண்ணங்காரன் மூகமூடியைக் கழட்டி, ''அசடே... இப்ப பாரு'' என்றானாம். ''ஹைய்யா... அண்ணன்'' என்று சந்தோஷமாகச் சிரித்தபடி தங்கை அண்ணனைக் கட்டித்தழுவினாளாம். நிற்க... கேள்விக்கு வருவோம். ஏமாந்துபோக நான் ஐந்து வயது தங்கை அல்ல... ஐம்பது வயது தடியன். முகமூடியைக் கழட்டாமலேயே நான் புரிந்துகொள்வேன். கேள்வியில் வந்த சாத்தான், மாறுவேடத்தில் வந்த கடவுள்தான் என்று... So அந்தப் பெரியண்ணனிடம், ''எனக்குத் தெரிந்த பதில்களுக்கு ஏற்ற மாதிரியான கேள்விகளை அடுத்த வாரம் வரும்படி பார்த்துக்கோங்க அண்ணே!'' என்ற வரத்தைக் கேட்பேன்...

★ த.சத்தியநாராயணன், அயன்புரம்

ஏன்தான் ஆம்பளையாய்ப் பொறந்தோம்னு வருத்தப்பட்டதுண்டா...?

மனைவியுடன் பட்டுப்புடைவை வாங்க மாம்பலம் நல்லிக்குச் சென்றிருந்தேன். பாஞ்சாலிக்காக, பரந்தாமன் கண்ணன் புடைவையாகச் சொரிந்த 'வில்லி பாரதம்' எழுதிய வில்லியபுத்தூரார், அதையே பனகல்பார்க் பெஞ்சில் அமர்ந்து எழுதியிருந்தால் சத்தியமாக அதற்கு, 'நல்லி பாரதம்' என்றுதான் பெயர்ச் சூட்டியிருப்பார். கொட்டிக் கிடக்கும் கலர்கலரான சேலைகளைப் பார்க்கும்போது, இவைகளைக் கட்டி அனுபவிக்க நாம் 'பொண்ணாப் பொறக்கலையே' என்ற ஆதங்கம் பிறட... அதற்கு மேட்சிங்காக ஸாரிஸாரியாக வந்த அழுகையை அடக்கிக் கொள்ள வேட்டி நுனியால் முகத்தைப் பொத்திக் கொண்டேன்...

★ ஸ்ரீமதி, சென்னை

ஆபாசம் இல்லாமல் ஒரு 'ஏ' சமாச்சாரம்

மாறு வேடத்தில் வந்த கடவுள்!

சொல்ல முடியுமா...?

'A' FOR ADAM AND 'ஏ' FOR 'A' FOR ANACODA (பாம்பு) வசியத்தில் மயங்கி, 'A' FOR APPLEஐ சாப்பிட... அதனால் வந்த விபரீதம் "A" FOR ADULTS ONLY...

★ **திவ்யா, டெல்லி**

கந்தையானாலும் கசக்கிக்கட்டு என்கிறார்களே...?

கந்தையாகும் அளவுக்குத் துணியை ஏன் வெறித்தனமாகக் கசக்குகிறீர்கள்...? நிதானமாகத் துவைத்து நிழலில் உலர்த்துங்கள்... நெடுநாள் கட்டலாம்.

★ **மைத்ரேயி, ஸ்ரீரங்கம்**

சனிப் பெயர்ச்சியாமே கிரேஸி...?

இரண்டு நாட்களாக மூச்சுவிட முடியாமல், சரியாகத் தூங்குமுடியாமல் இருந்தேன். ஜோஸ்ய நண்பனைக் கேட்டபோது காரணம் 'சனி' என்றான். குடும்ப டாக்டரைக் கேட்டபோது நெஞ்சில 'சளி' என்று கூறி, மருந்து தந்தார். குணமான கையோடு ஜோஸ்ய எதிரியை ஸாரி நண்பனைப் பார்த்தேன். ''ஸாரிடா மச்சான்... நீ கேட்ட அன்னிக்கு எனக்கு செம்ம ஜலதோஷம், சரியா பேச முடியலை. நான் 'சளி'னு சொன்னது உன் காதுல 'சனி'னு விழுந்துருக்கும். எனக்கு அன்னிக்கு நாக்குல 'சனி'னு வருத்தப்பட்டான். தெய்வம் தீங்கு செய்யாது. தீங்கு செய்தால் அது தெய்வமாக இராது. சனி பகவான் தெய்வம்.

★ **ஜெகா, கும்பகோணம்**

ஜி.பி.எஸ். செயற்கைக் கோள் மூலம் இருப்பிடம் அறியும் வசதி பற்றி...?

மைலாப்பூர் மாடவீதியில் வெற்றிலை சீவல் கடை வாசலில், இருபத்தி நாலு மணி நேரமும் புகையிலையைக் குதப்பிய படி ஒரு ஜி.பி.எஸ். உண்டு. இந்த ஜி.பி.எஸ், மைலாப்பூரில் 'யார் யார் எங்கு இருக்கிறார்கள், அவர்கள் எப்படிப்பட்டவர்கள், தற்சமயம் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்' என்று போற - வர்றவனிடமெல்லாம், இன்னாரது ஜெனரல் - பர்சனல் - சென்சேஷனல் தகவல்களை வத்திவைக்கும் 'இயற்கைக் கோள்' மூட்டி. இன்னாரது இருப்பிடம் அறிய இவரிடம் கேட்டால் போதும். ''லெப்டுல போய், ரைட்டுல போய், காணம போய், கெட்டுப் போய், செத்துப் போய்''னு அட்ரஸை மிகத் துல்லியமாகக் கூறி, இன்னாரைப் பற்றிய கிசுகிசுவையும் கூறிவிடுவார். எல்லா ஏரியாக்களிலும் இதுபோன்ற ஜி.பி.எஸ்கள் இருப்பதாக, செயற்கை கோளே படம்பிடித்துப் பதிவு செய்திருப்பதாக நம்பத்தகாத வட்டாரங்களில் பேசிக் கொள்கிறார்கள்.

★ **லெமூரியன், திருவண்ணாமலை**

சினிமாவின் ஆதிக்கம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்...?

அந்தக் காலத்து சினிமா 'ஹரிச்சந்திராவை' பல ஆத்மாக்கள் பார்த்தன. அதில் ஒன்றுதான் ''மகாத்மா'' ஆனது.

நான் பொல்லாதவனா?

தனுஷ்



“ஆம். நான் பொல்லாதவன்தான். ஆனா, நல்லவன். பொல்லாதவன் படத்தோட மையக்கரு இதுதான். இந்தப் படத்துல பல விசேஷங்கள் இருக்கு. 'திருவிளையாடல் ஆரம்பம்' ரீமிக்ஸ் பாட்டான 'என்னம்மா கண்ணு' எனக்கு ஏகப்பட்ட பாராட்டுகளை அள்ளிக் கொடுத்துச்சு. அதோட தொடர்ச்சியா பொல்லாதவன்லயும் 'நினைத்தாலே இனிக்கும்' படத்துல வந்த 'எங்கேயும் எப்போதும்' பாடலை ரீ மிக்ஸ் பண்ணி அசத்தியிருக்கார் ஜி.வி.பிரகாஷ்குமார். இந்தப் பாடலும் எனக்கு மைல்கல்லா அமையும். இது மட்டுமில்ல, இந்தப் பாடல் முன்னாடி படமாக்கப்பட்ட ஏவி.எம்.லதான் இப்பவும் படமாக்கப்படுது. இருபத்

அனுபவிச்சவங்கள்ல நானும் ஒருத்தன். கடவுள் ஆசியால இப்ப நடிகனாயிட்டேன். ரெண்டு படம் நல்லா போயிருக்கு. அடுத்து நாலு படம் புக் ஆயிருக்கு. 'பொறுக்கி' (படத்தோட பேரே



“ஓர் இயக்குநரோட கஷ்டம் சாதாரணமானதில்ல. ஒரு நடிகர்கிட்ட மட்டும் கதைசொல்லி ஓ.கே. வாங்கினா போதாது. அவரோட அத்தை, மாமா, தங்கச்சி, ஏன் சமயத்துல டிரைவர்கிட்ட கூட சொல்ல வேண்டியிருக்கும். ஓ.கே. வாங்கினாலும் சட்டுனு ஆரம்பிச்சுட முடியாது. ஹீரோ டயத்துக்க வரமாட்டார். ஹீரோயின் பந்தா பண்ணுவாங்க. இப்படிப் பலவித சிரமங்கள

இனி படம் இயக்க மாட்டேனா?

சுந்தர்.சி

ஐஞ்சு வருஷத்துக்கு முன்னாடி 'பொல்லாதவன்' படத்துக்காக ரஜினி சார் பயன்படுத்தின காரைத்தான் இந்தப் படத்துக்காக நான் பயன்படுத்துகிறேன்.

முக்கியமா, 'பொல்லாதவன்' இயக்குநர் வெற்றிமாறன் பத்தி சொல்லணும். ரொம்ப சுறுசுறுப்பானவர். பாலுமேந்திரா சாரோட அசிஸ்டென்ட். முதல் படம் மாதிரி இல்லாம, அனுபவமுள்ள நபரா ஒர்க் பண்றார். 'குத்து' படத்துல நடிச்ச ரம்யா, பேர் மாத்தி 'திவ்யா'ங்கிற பேர்ல எனக்கு ஜோடியா நடிக்கறாங்க. பொல்லாதவன் பொறுப்பானவனா வளர்ந்து வர்றான்!''

அதாங்க! ஷக்தி சிதம்பரம் டைரக்ஷன். 'பெருமாள்', வின்சென்ட் செல்வா பண்றார். 'தீ'ன்னு கிச்சா இயக்கத்துல ஒரு படம். இதுல எனக்கு ஜோடியா மலேசிய அழகிப் போட்டியில ஜெயிச்ச ராகினின்னு ஒரு பொண்ணு, போலீஸ் அதிகாரியா நடிக்கிறேன். அநீதி செய்ற ஆட்களுக்கு நான்தான் எமன். இன்னொரு படம் பேசிட்டிருக்கேன். இப்படித் தொடர்ச்சியா பண்றதால அடுத்து டைரக்ஷன் பண்ண நேரமே இல்ல. இப்போதைக்கு எதுவும் நான் செய்யப்போறதில்ல. நடிக்கறது ரொம்பப் பிடிச்சிருக்கு. காலைல போனா சாயந்திரம் திரும்பிடலாம். டைரக்ஷன் மாதிரி சதா சர்வ காலமும் மண்டையைப் பிச்சுக்கிட்டு அலைய வேண்டிய தொல்லை இல்ல. நிம்மதியா இருக்கேன்!''

நானாவின் தமிழ்க் காதல்...

பாரதிராஜா



''நான் இயக்கி வரும் 'பொம்மலாட்டம்' படத்தில் அர்ஜுனுடன் இந்தி நடிகர் நானா படேகரும் முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார். இந்தி மற்றும் தமிழில் தயாராகி வருகிறது. கர்நாடகா மாநிலத்திலுள்ள பதாமி என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் படப்பிடிப்பு நடைபெற்றபோது, முதலில் இந்தியில் காட்சிகளை படமாக்கி விட்டு பிறகு தமிழில் இயக்கினோம். நானாவுக்குத் தமிழ் மொழி தெரியாததால் சிரமப்பட, நான் 'நீங்கள் இந்தியிலேயே பேசுங்கள். நான் டப்பிங்கில் சரிசெய்து கொள்கிறேன்' என்றேன். மறுத்த நானா, ''நான் இப்படியாவது தமிழ் பேச ஆசைப் படுகிறேன். என் தாய்மொழி மராத்திக்குப் பிறகு எனக்குப் பிடித்த மொழி தமிழ்தான். தமிழ்ப் படங்கள்ல அதுவும் 'பொம்மலாட்டம்' மாதிரி நல்ல படங்கள்லயாவது நான் தமிழ் பேசி நடிக்கணும்னு ஆசைப்படுறேன்'' என்றார்.

'தமிழனைத் தவிர மற்ற எல்லோருக்குமே தமிழ் மீது மரியாதை இருக்கிறது' என்று புரிய, அவருக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்து நடிக்க வைத்தோம்!''

– நிதர்ஸனா

எல்லாமே இருக்கு,



ஹலோ வாசகர்களே! இந்தப் பகுதியில் நீங்களும் இடம் பெறணுமா? உங்களோட புகைப்படம் + தொலைபேசி அல்லது கைபேசி + உங்கள் முகவரியை எழுதி 'தித்திக்கும் திங்கள்' என குறிப்பிட்டு அனுப்புங்க. திங்கள்கிழமை நாங்களே உங்களைத் தொடர்பு கொள்வோம். ஓகே! இந்த வார தித்திப்பைப் பார்ப்போம் வாங்க!

சென்னை - ஆர்.ஜானகி ரங்கநாதன் அவர்களின் பரவசம்!

''குருக்ஷேத்ரம் தொடர் படிக்கும்போதே சிலிர்ப்பா இருக்கு. குரு மன்னரைப் பற்றியும் சரஸ்வதி ஆறு குறித்தும் சொல்லியிருக்கிற தகவல்கள் இதுவரைக்கும் எனக்குத் தெரியாத ஒண்ணு. கல்கியை என்னை மாதிரி வயசானவங்க மட்டும் படிக்கறதில்லீங்க. ஒருமுறை நான் பஸ்ல போயிட்டிருந்தப்ப என் கையில் இருந்த கல்கியைப் பார்த்து ஒரு டீன்ஏஜ் பொண்ணு கேட்டு வாங்கி ரொம்ப ஆர்வத்தோடுப் படிச்சாங்க. கல்கியில எல்லாமே இருக்கு, நல்லாவே இருக்கு!



* ஆர்.ஜானகி ரங்கநாதன்



* மா.உலகநாதன்


கோயம்புத்தூர் - ஜே.ஜெய்சிங் அவர்கள் சுவைத்த நவரசம்!

''கல்கியில சமீபகாலமாவே நல்ல மாற்றங்கள் தெரியுது. நந்தி கிராமம் பற்றி தலையங்கம், சிறுநீரகம் தொடர், அரசியல் கட்டுரைகள், ஓவியர் ஸ்யாமின் ஜொலிப்பில் வர்ற 'பார்த்திபன் கனவு'ன்னு ஆண்டு மலரிலிருந்து களைகட்டுது. துணுக்கு, ஜோக்ஸ்களை அதிகம் போடுங்க. நாலு பக்கம் ஐந்து பக்க

நல்லாவே இருக்கு!



* ஜே.ஜெய்சிங்



* உமரி.பொ.கணேசன்

கும்பகோணம் - மா.உலகநாதன் அவர்களின் அறிவுரை!

''பதினைந்து வருஷமா கல்கியைப் படிக்கிறேன். மற்ற பத்திரிகைகளையும் பல வருடங்களா கவனிக்கிறேன். கல்கி மட்டும்தான் தன்னோட தரத்திலிருந்து கொஞ்சமும் மாறாமல் இருக்கு. தராசு பதில்களில் அரசியல் குறித்த பதில்கள்தான் பெரும்பாலும் இருக்கு. அப்படி இல்லாம கலை, இலக்கியம் என்று பல்வேறு கேள்வி பதில்கள் கலந்து வந்தா நல்லது. மன்னர் புறமுதுகிட்டு ஓடற ஜோக்ஸ் படிச்சுப் படிச்சு சலிச்சுப் போச்சு. அதுமாதிரி ஜோக்ஸை பில்டர் பண்ணுங்க. தொழில்வளம் குறித்த எளிமையான கட்டுரைகளை எதிர்பார்க்கிறோம்.''

மும்பை - உமரி.பொ.கணேசன் அவர்களின் அறிவுரை!

''இந்த வாரம் கனிமொழியின் பேட்டி சிறப்பாக இருந்தது. தினம்தினம் நாளிதழ்களில் அவரோட பேட்டிகளைப் பார்த்தாலும் கல்கியில் கேட்கப்பட்ட கேள்விகள் புதிய கோணத்தில் இருந்தன. டைட்டானியம் தொழிற்சாலை வர்றது அவசியம்தான். நந்திகிராமம் பற்றின தலையங்கம் கல்கிக்கே உரிய தனித்தன்மையைக் காட்டுது. சிலர் சினிமா பகுதிகள் வேண்டாம்னு சொல்றதா தித்திக்கும் திங்கள் பகுதியில படிச்சேன். சினிமாவையோ, சினிமா செய்திகளையோ ஒதுக்கவேண்டிய அவசியமில்லை. பொழுதுபோக்கில் முக்கிய பங்கு வகிப்பது சினிமாதான். அதைச் சுவையோடு கொடுக்கறது தப்பில்லே.''

தித்திக்கும் திங்கள்



கதையெல்லாம் படிக்க இப்ப யாருக்கும் டைம் இருக்கறதில்லே. அதனால ஒரு பக்க, அரைப்பக்க கதைகளைப் போடுங்க. வட்டமேஜை பகுதியிலே ரெண்டு வரியில அருமை, நன்றுன்னு போடறதுக்குப் பதிலா எங்களோட விரிவான கருத்துகளை வெளியிட்டா நல்லது.''



கல்கி



2007 ஆகஸ்ட் 19
சர்வஜித் ஆவணி 2
மலர் : 66
இதழ் : 3

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா

- பாரதியார்


அமெரிக்காவுடன் அபாய ஒப்பந்தம்!


அமெரிக்காவில்கூட, அணுமின் நிலையங்களைத் தங்கள் பகுதியில் நிறுவுவதைப் பல்வேறு பகுதி மக்களும் பலமாக எதிர்க் கிறார்கள். ஆனால் நாமோ, அமெரிக்காவுடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு அணுமின் உற்பத்தி ஆலைகள் பெருக வழிசெய் துள்ளோம்.

அணு ஆயுதங்கள் மட்டுமின்றி அவற்றின் உற்பத்தியும் அணுமின் சக்தியின் உற்பத்தியும்கூட மிக அபாயகரமான செயல் முறைகள். அணுமின் அல்லது ஆயுத உற்பத்தி ஆலைகளில் பணி புரிவோருக்குக் கதிரியக்க பாதிப்பினால் உடல்நலக்கேடு அல்லது நிரந்தர குறைபாடுகள் விளையும் வாய்ப்புகள் அதிகம். இவ் வாலைகளில் நிகழக்கூடிய விபத்துகளோ, சுற்றுவட்டார மக்களை மட்டுமின்றி அவர்களது சந்ததியினரையும் பாதிக்கவல்லவை. தவிர, அணு ஆலைக் கழிவுகளினாலும் சுற்றுச்சூழலுக்கும் மனித குலத்துக்கும் பேரபாயம் விளையக்கூடும்.

அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந்தம் அமலுக்கு வருவ தால், அணுமின் உற்பத்தி ஆலைக்கான எரிபொருள் மற்றும் உப கரணங்கள் இந்தியாவுக்கு இடைவிடாது கிடைக்க அமெரிக்கா வழிசெய்கிறது. இதன் மூலம் மேலே விவரித்த அபாயங்கள் பல மடங்கு பெருகவும் வழி பிறக்கிறது.

ஆனால், கம்யூனிஸ்டுகளும் அ.தி.மு.க. தலைவியும் ஒப்பந் தத்தை எதிர்ப்பது இந்தக் காரணத்தினால் அல்ல; இந்திய இறை யாண்மையை இவ்வொப்பந்தம் அமெரிக்காவிடம் அடகு வைத்து விட்டது என்பதால்தான் எதிர்க்கிறார்கள்! மின் உற்பத்திக்காக





அமெரிக்கா வழங்கும் எரிபொருளை அணு ஆயுத உற்பத்திக்கு இந்தியா பயன்படுத்தக் கூடாது என்பதுடன், அணு ஆயுதப் பெருக்கத்திலும் அதற்கான புதிய ஆராய்ச்சிகளிலும் ஈடுபடக்கூடாது என்றும் தடை விதிக்கிறது- இந்த ஒப்பந்தம். இதைத்தான் கம்யூனிஸ்டுகள் கடுமையாக ஆட்சேபிக்கிறார்கள். மத்திய அரசுக்கு ஆதரவு தொடர்வதை மறுபரிசீலனைக்கு உட்படுத்தவும் முற்பட்டிருக்கிறார்கள்.

மத்திய அரசு, இவ்வொப்பந்தத்தை இறுதி செய்யும்முன் அனைத்துக் கட்சிகளுடனும் விரிவாகக் கலந்தாலோசித்திருக்க வேண்டும். குறிப்பாக, அரசியல் சித்தாந்த ரீதியாகவே அமெரிக்காவை எதிர்க்கும் கம்யூனிஸ்டுகளின் ஆதரவுடன் ஆட்சியில் இருக்கிறபோது, அவர்களைக் கலந்தாலோசியாமல் போனது பேதைமை! அரசியல் ஆதரவு மட்டுமின்றி, விஞ்ஞான ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் அனுபவஸ்தர்களின் அங்கீகாரத்தை இவ்வொப்பந்தத்துக்குப் பெற்றிருக்க வேண்டும். இப்போது அரசுப் பணியிலிருக்கிற விஞ்ஞானிகள் ஆதரிக்கும் இவ்வொப்பந்தத்தை, அதே பணியிலிருந்து ஓய்வுபெற்ற அனுபவஸ்தர்கள் எதிர்க்கிறார்கள்! யுரேனியம் இறக்குமதிக்குச் செலவழிப்பதற்குப் பதிலாக, நம் நாட்டிலேயே தாராளமாகக் கிடைக்கும் தோரியம் கனிமத்தை மாற்று எரிபொருளாக்கும் ஆராய்ச்சிக்குச் செலவுசெய்வதே அறிவுடைமை என்கிறார்கள்.

மொத்தத்தில், அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் நம்மை அமெரிக்காவைச் சார்ந்து நிற்கும் நிலைக்குத் தள்ளுகிறது. இங்கே மத்திய அரசுக்கு அரசியல் எதிர்ப்பு எழுந்துள்ளதைப்போல, நாளை அமெரிக்க அரசுக்கு எதிர்ப்பு எழுந்தாலோ, அல்லது அங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலோ இவ்வொப்பந்தத்தின் குறைந்தபட்ச அனுகூலங்களையும் நாம் இழக்க நேரலாம்.

இதைப் போன்றதோர் ஒப்பந்தத்தைத் தயாரிக்கவும் அதைத் தொடர்ந்து அணுமின் உற்பத்தி செய்யவும் ஏராளமான சிந்தனை, பொருள், மனிதவளம் முதலீடாகிறது. அதையே சூரிய சக்தியைக் கொண்டு மின் உற்பத்தி செய்யும் ஆராய்ச்சியில் முதலீடு செய்வதும் மாற்று எரிபொருள்களை நாடுவதும்தான் மக்களின் பாதுகாப்புக்கும் நாட்டின் முன்னேற்றத்துக்கும் இறையாண்மைக்கும் ஒருங்கே நல்லது. ●

மங்கையர் மலர் அழைக்கிறது!



இலை மீறிய பூ!

வே.ராமசாமி

செம்பூக்களை உடைய
பெருமரம்
அறுத்துச் சாய்க்கப்பட்டபோது
கட்டிக்கொண்டழ நீயில்லை

மேகத்தின் ஈரச்சுவையுணர்ந்த
கூதல்பொழுதில்
தேநீர் துணைக்கு வரவும்
தவறிவிட்டாய்

நெருஞ்சிமுள் தைத்து
நொண்டும் மைனாக்குஞ்சின்
ரத்தங்கன்றிய கால்களுக்கு
கண்ணீர் ஒத்தடமிட்டே
கழிகிறதென் தனிமை

நெல்லின் அளவு குழிவிழும்
உன் கேந்திப்பூ கன்னத்தில்
குமிழியிட்டுக் குமிழியிட்டு
உடைகிறதென் காதல்

என் நினைவை விட
உன் நினைவு அதிகமான
வெள்ளத்தில் மூழ்கினேனானாலும்
குற்றம் எனதல்ல

முல்லைப்பூஞ்செடியில்
சிலசமயம்
இலைகளைவிட
பூக்கள் அதிகமாய்
பூத்திட்ட இயற்கை இது
யாரென்ன செய்ய?



புதுப்புது அவதாரங்கள்!




இறைவனின் பொறியியல் அறிவுக்கு இணையற்ற எடுத்துக்காட்டாகத் திகழ்வது... இதயமே...! சிறுநீரகமே...! இப்படியொரு தலைப்பில் பட்டிமன்றம் நடத்தினால் தீர்ப்பு என்னவாக இருக்கும். நடுவர் இருக்கையில் அந்த இறைவனே வந்து அமர்ந்தாலும், இதயத்தைக் கழற்றி வைத்துவிட்டு தீர்ப்புச் சொல்லவேண்டிய அவசியம் இருக்காது. சிறுநீரகங்கள் 'வடிவமைப் பின் உச்சம்' (Ultimate Design) என்று உலகம் முழுவதும் உள்ள உடற்கூறியல் விஞ்ஞானிகள், ஒட்டுமொத்தமாய் ஒப்புக் கொண்ட உண்மை.

அப்படிப்பட்ட எங்கள் வீட்டின் வரவேற்பறையான அயிலம் வரை வந்து எட்டிப் பார்த்துவிட்ட நீங்கள், இன்னும் ஓர் எட்டு வைத்து உள்ளே வாருங்கள். இரத்தத்தை வடிகட்டும் ஒவ்வொரு கட்டத்திலும் எங்களின் இரத்த நாளங்கள் எடுக்கிற புதுப்புது அவதாரங்களைப் பார்த்தால், பத்து கெட்-அப் போட்டு நடிக்கிற 'தசாவதாரம்' கமல்கூட தடாலெனத் தலை வணங்குவார். அதுபோகட்டும்! இதயத்திலிருந்து அயிலம் வழியாக எங்கள் வீட்டுக்குள் பாய்ந்து வரும் இரத்த வெள்ளத்தில் சர்க்கரை, உப்புக்கள், தாதுக்கள், புரதம், வெள்ளை அணு, சிவப்பணு ஆகியவை மிதந்தபடி உள்ளே வருகின்றன. இவற்றில் ஏதாவது ஒரு வாகனத்தின் மீதேறி ஒயிலாக அமர்ந்து கொள்ளுங்கள். அடுத்து?! 'அயிலேசா! அயிலேசா!' என்று உற்சாகமாகப் பாடிக்கொண்டே உங்களது சிறுநீரகச் சுற்றுலாவைத் தொடங்குங்கள்.

ஜகஜ்ஜால ஜோடி 3

சீக்ரெட் ஆஃப் சிறுநீரகம்



நீங்கள் துடுப்புப் போட வேண்டிய அவசியம் துளிகூடக் கிடையாது. காரணம் தெரியுமா?

மருத்துவ அறிவியல் அபாரமாய் வளர்ந்துவிட்ட இந்த நவயுகத்திலும், இன்னும் உங்களை எட்டாத அந்த ரகசியத்தைச் சொல்கிறோம்; கொஞ்சம் காதைக் கொடுங்கள். உங்களின் மொத்த உடலுக்கும் எவ்வளவு வேகத்தில் இரத்தம் பாய வேண்டும் எனும் இரத்த அழுத்த அளவை (Blood Pressure Level) முடிவு செய்வது நாங்கள்தானே தவிர இதயம் அல்ல. எனவே, நாங்கள் நிர்ணயித்த அழுத்தத்தோடு சீராகப் பாய்கிற ரத்தம், காட்டாற்று வெள்ளமாய் மாறி உங்களைக் கவிழ்த்துவிடும் என்ற கவலையும் தேவையில்லை. எங்கள் இரத்தக் குழாய்களின் வழியே சறுக்கி விளையாட துடுப்பும் தேவையில்லை. என்னது! உப்பின் மீதேறி உலாவைத் தொடங்கப் போகிறீர்களா? நல்லது! அதற்கு முன் இரத்த நரம்புகளைப் பற்றி கொஞ்சம் பேருக்குக் குழப்பம் இருக்கிறது. முதலில் அதைப் போக்கிவிடலாம். அப்போதுதான் பாதை மாறாத பயணமாக இது அமையும்.

ஆங்கிலத்தில் ஆர்ட்டரி (Artery) என்று குறிப்பிடும் இரத்தக் குழாய்களை, தமிழறிஞர்கள் மகிழும்படியான தனித் தமிழில் 'தமனி' என்று அழைக்கிறார்கள். நீங்களும்கூட தமனி என்ற சொல்லைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்தத் தமனிகள் அதாவது ஆர்ட்டரி, இரத்தக் குழாய்கள் அனைத்தும் இதயத்திலிருந்து உடல் முழுவதும் இரத்தத்தை எடுத்துச் செல்லும் வேலையைச் செய்கின்றன. வீராணம் ஏரியிலிருந்து சென்னை நகர முழுவதும் தண்ணீர் எடுத்துச் செல்லும் புதிய வீராணம் குழாய்களைப் போன்றவை இந்தத் தமனிகள்.

அடுத்து, வெயின் (Vein) என்று அழைக்கப்படும் இரத்தக் குழாய்களை, 'சிரை' என்கிறோம். இந்தச் சிரைகளின் வேலை அப்படியே உல்டா! அதாவது உடலில் உள்ள இரத்தத்தை இதயத்துக்கு எடுத்துச் செல்வது. ஆர்ட்டரி இரத்தக் குழாய்களை சிவப்பு நிறத்திலும், வெயின் இரத்தக் குழாய்களை நீல நிறத்திலும் கற்பனை செய்துகொள்ளுங்கள். உங்கள் பயணம் இன்னும் எளிமையாகிவிடும்.

இதயத்திலிருந்து தொடங்கும் மெகா இரத்தக் குழாயான அயோட்டாவும் ஓர் ஆர்ட்டரிதான். அயோட்டாவிலிருந்து எங்களுக்கு இரத்த சப்ளை செய்ய பிரிந்து வரும் ஆர்ட்டரிதான் ரீனல் ஆர்ட்டரி. அதாவது சிறுநீரகத் தமனி. நாங்கள் வடிகட்டிச் சுத்தம் செய்த இரத்தத்தை இதயத்துக்கு எடுத்துச் செல்வது ரீனல் வெயின். அதாவது சிறுநீரகச் சிரை. ரீனல் ஆர்ட்டரி எங்களுக்கு இன்புட் (Input) என்றால், ரீனல் வெயின் அவுட்புட் (Output). எங்களுக்கு மற்றொரு முக்கியமான அவுட்புட் வழியும் உண்டு. அதுதான் யூரேட்டர் (Ureter).

■ டாக்டர் பி.ரவிச்சந்திரன்

வைரவிழா சிந்தனை



தீரர் சத்தியமூர்த்தி



"ஒரு பணியை வெள்ளைக்காரன் செய்தால் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம். அதையே இந்தியன் செய்தால் இரு நூறு ரூபாய் தான். இந்த அநீதியை எதிர்த்து பதிலடி கொடுப்போம்." - தார்மீகக் கொதிப்புடன் பேசி வீராவேசம் உண்டு பண்ணிய தலைவர் சத்தியமூர்த்தி.

1919இல் திலகர், சீனிவாச சாஸ்திரி கொண்ட காங்கிரஸ் தூதுக்குழுவுடன் இரு முறை இங்கிலாந்து சென்றவர். விடுதலைப் போராட்டத்தில் நான்குமுறை சிறை சென்றவர். சட்டசபை உறுப்பினர் என்கிற முறையிலும் சரி, காங்கிரஸ் கட்சியின் செயல் துணைத்தலைவர் என்கிற தகுதிகளிலும் சரி... பிரிட்டிஷ் அரசாங்கத்தை திகைக்க வைக்கும் கேள்விகள் கேட்டுத் திணறடித்தவர். மொழிப்புலமை, சொல்லாற்றல், கலையார்வம் என பல்திறன் படைத்த முழுமையான மனிதராக நிறைவான வாழ்வு வாழ்ந்தவர்.

நமக்கே நமக்கான நற்றமிழில் அதனை 'சிறுநீர் குழல்' என்று சொல்கிறார்கள். இரத்தத்திலிருந்து நாங்கள் பிரித்தெடுத்த வேண்டாத கழிவுப் பொருட்களை, சிறுநீர்ப்பைக்கு (Bladder) குட்பை சொல்லி அனுப்பி வைப்பது இந்த யூரேட்டர்கள் தான்.

அய்யோ! உங்கள் கண்களில் என்ன நீரோட்டம்! எங்கள் பணியை எளிமையாகப் புரியவைத்ததில் உணர்ச்சிவசப்பட்டுக் கலங்கிவிட்டீர்களா? இதற்கே இப்படியென்றால் நமது நெடும் பயணத்தில் இன்னும் எத்தனைமுறை ஆனந்தக் கண்ணீர் விடுவீர்களோ தெரியவில்லை! சரி கண்களைத் துடைத்துக்கொண்டு நாங்கள் சொல்வதைக் கவனியுங்கள். போகிற ஊருக்குச் சரியான வழி தெரிய வேண்டும், எனவே, இரத்தத்தையும் அதில் உள்ள பொருட்களையும் நாங்கள் எவ்வாறு வடிகட்டிச் சுத்தம் செய்கிறோம் என்பதை, நான்கு எளிய நிலைகள் மூலம் முதலில் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறோம்.

முதல் நிலை: ரீனல் ஆர்ட்டரி மூலம் எங்கள் உள்ளே வரும் இரத்தம், சின்னச் சின்ன இரத்தக் குழாய்களின் வழியே பயணப்பட்டு, நெப்ரான்கள் (Nephron) எனப்படும் வடிகட்டும் சாதனங்களை (Units) அடைகிறது.

இரண்டாவது நிலை: நெப்ரானின் வடிகட்டும் அமைப்பில் முதலாவதாக வருவது கிளாமருலஸ் (Glomerulus). இந்தக் கிளாமருலஸ், இரத்தத்தை நுட்பமாக வடிகட்டி வேண்டாத கழிவுப்பொருட்கள் அடங்கிய திரவத்தைத் தனியே பிரிக்கிறது.

மூன்றாவது நிலை: வேண்டாத கழிவுப் பொருட்களிலிருந்து விடுதலை பெற்ற இரத்தம், இப்போது ரீனல்வெயின் வழியாக இதயத்துக்குத் திரும்பிச் செல்கிறது.

நான்காவது நிலை: கிளாமருலஸ் வடிகட்டிய கழிவுப் பொருட்கள் அடங்கிய திரவம், நெப்ரானின் எஞ்சிய குழாய் பகுதிகள் வழியே, சிறுநீராக உருமாறி சிறுநீர் குழல் மூலம் சிறுநீர்ப்பையை அடைகிறது.

தேர்ந்த சுற்றுலாப் பயணியின் கையில் ரூட் மேப் கட்டாயம் இருக்கும். உங்களுக்கும் இப்போது ரூட் க்ளியர் என்றாலும் உங்களைச் சில்லிட வைக்கிற வளைவுகள், தலைகுப்புற கவிழ்த்துவிடும் இரத்த நீர் வீழ்ச்சிகள், எதிர்பாராத மின்சாரத் தாக்குதல்கள், ஹார்மோன்களின் திடீர் அணிவகுப்பு என்று திக்குமுக்காட வைப்போம். இந்தப் புதுமைப் பயணத்துக்கு நீங்களே தயாராகிவிட்ட பிறகு நாங்கள் தயங்கி நிற்போமா? ரெடி! ஒன்...டூ...த்ரீ... தொபீர்!

(இன்னும் பேசுவோம்)

புனிதப்



அம்மாவின் அன்புத் தொல்லை தாளாமல் வேகாத வெயிலில் மவுண்ட் ரோடை நோக்கிக் கிளம்பினேன்.

ஸ்பென்ஸருக்கு எதிர்வாடையில் ஒரு ட்ராவல் ஏஜெண்ட் பெயர்ப் பலகை கண்ணில் பட்டது. பிஸ்மில்லா என்று சொல்லிப் படியேறினேன்.

மனசைக் குளிர்விக்கிற மாதிரி ஒரு முகம் கண்ணில்பட்டது.

'ஜான்ஸன்.'

திருச்சி ஜமால் மஹம்மது காலேஜில் என்னோடுப் படித்தவன். இவன் மெட்ராஸுக்கு வந்ததும் தெரியாது; டிராவல்ஸ் ஏஜெண்ட் ஆனதும் தெரியாது. கிட்டத் தட்ட அஞ்சு வருஷத்துக்குப் பிறகு சிநேகிதனைப் பார்க்கிற சந்தோஷம் முகத்தில் பிரதிபலிக்க, மெல்ல அவனுடைய ஆசனத்துக்கு அருகில் போய் தாழ்வான குரலில், "டேய் ஜான்ஸா" என்றதும் நிமிர்ந்து பார்த்து முகம் மலர்ந்தான்.

"டேய் நீயா, நீயும் மெட்ராஸ்லதான் இருக்கியா? எத்தன வருஷம் ஆச்சுடா நாம மீட் பண்ணி! இது என்னோட ஆஃபீஸ்னு தெரிஞ்சுதான் வந்தியா?"

"எனக்கு இப்ப ஒரு டிராவல் ஏஜெண்ட் தேவை. போர்டப் பாத்துட்டு உள்ள வந்தேன். வந்து பாத்தா நீ இருக்க. வாட் லக்!"

"வெரிகுட் வெரிகுட். என்ன விஷயமா ட்ராவல் ஏஜெண்டத் தேடற?"


"டிராவல் பண்ணத்தான்."

"அபுதாபியா, அமெரிக்காவா?"

"அங்கெல்லாம் இல்ல ஜான்ஸா. பக்கத்துல இருக்கிற பாகிஸ்தான். எங்கம்மா ஒரே நச்சரிப்பு. பாகிஸ்தானுக்குப் போய் அங்க உள்ள தர்காவையெல்லாம் பாத்துட்டு பிரார்த்தனை பண்ணிட்டு வரணும்னு. எங்கம்மாவ நான் தான்டா கூட்டிட்டுப் போகணும். தெரிஞ்ச டிராவல் ஏஜெண்ட் யாரும் இல்ல. சரி எவனாவது ஒருத்தனப் பிடிப்போம்னு மவுண்ட் ரோடுக்கு வந்தேன். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நீ தான்டா ஜான்ஸா டிக்கட், விஸா எல்லாம் ஏற்பாடு பண்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசு ரூ.5000 பெறும் கதை!

ஏ.ஏ.ஹெச்.கே.கோரி



பயணம்

ணனும்.''

''பண்ணிட்டாப் போச்சு. சரி.., வெவரமெல்லாம் எழுதிக் கொடு.''

எழுதிக் கொடுத்தேன்.

நான் எழுதித் தந்ததை வாசித்துக் கொண்டிருக்கும்போதே ஓர் இடம் வந்ததும் தலை நிமிர்ந்தான்.

''என்னடா, 'உர்து ஸ்பீக்கிங் முஸ்லிம்'னு எழுதியிருக்க, நீ தமிழ் ஸ்பீக்கிங் ஆச்சே?''

''அப்படியே போடு ஜான்ஸா. உர்து ஸ்பீக்கின்னா ஒரு வெய்ட் இருக்கும்ல? நான்தான் உர்து நல்லா பேசுவேனே!''

இருந்தாலும், பொய் சொல்லக் கூடாதுல்ல பாய்.''

''ஆயிரம் பொய்யச் சொல்லியாவது ஒரு கல்யாணத்தப் பண்ணுங்கற மாதிரி, புனிதப் பயணம் போகும்போதும் பொய்ச் சொன்னாத் தப்பில்லடா.''

''இன்னிக்குத் தேதி ரெண்டு. எட்டாந் தேதி பாம்பே கராச்சி ஃப்ளைட்ல ரெண்டே ரெண்டு ஸீட் இருக்கு. அத பிளாக் பண்ணிர்றேன். அத விட்டா மூணு வாரத்துக்கு ஃப்ளைட் எல்லாம் ஃபுல்.''

''எப்படிடா ஃப்ளைட் இன்ஃபர்மேஷன் எல்லாம் விரல் நுனியில வெச்சிருக்க?''

''எல்லாம் இன்னொரு பார்ட்டிக்காகச் சேகரிச்ச தகவல். அந்த அம்மா வரல. வந்திருந்தா, அவங்களுக்கு ஒரு ஸீட் போயிருக்கும். அப்புறம் உங்க அம்மாவ விட்டுட்டு நீ தனியாத்தான் புனிதப் பயணம் போகணும்.''

என்னுடைய அதிர்ஷ்டத்தை நான் மட்டும் திரும்பவும் வியந்துகொண்டிருந்த போது, ''தம்பி, நான் திருச்சிலயிருந்து வர்றேன்'' என்று பக்கவாட்டில் ஒரு குரல் கேட்டது. குரலுக்குச் சொந்தக்காரர் எழுபதைக் கடந்த ஓர் எளிமையான பெண்மணி. அந்தத் தாயை ஏறெடுத்துப் பார்த்த ஜான்சன், பிறகு உதட்டைப் பிதுக்கியபடி, என்னைப் பார்த்தான்.

''தம்பி, நான் பாக்யலட்சுமி, உங்ககூட ஃபோன்ல பேசினேன்...''

பாக்யலட்சுமியைப் பொருட்படுத்தாமல் ஜான்ஸன், என்னிடம் குசுகுசுத்தான்.

''நான் சொன்னேனே பாகிஸ்தான் பார்ட்டி, அது இவங்கதான்டா.''

பிறகு அவன் நம்பிக்கையோடு அந்த அம்மாவைப் பார்த்தான்.

''ஒக்காருங்க பெரியம்மா. நீங்க ரொம்ப லேட் பண்ணிட்டீங்களே. பன்னிரெண்டு மணிக்கு வர்றதாச் சொன்னீங்க. இப்ப மணி ரெண்டு.''

''மன்னிச்சுக்கங்க தம்பி. இப்பத்தான் முதல் தடவையா மெட்ராஸுக்கு வர்றேன். தொணக்கி யாரும் கெடையாது.''

''நீங்க பாம்பே போய் கராச்சி ப்ளேன்ல ஏறணும். தொணை இல்லாம எப்படிப் போவீங்க?''

''போயிடுவேன் தம்பி. நீங்க எப்படியாவது ஏற்பாடு பண்ணிக் குடுத்துருங்க. முப்பத்தாறு வருஷமாக் காத்திருக்கேன். இப்பத்தான் பாகிஸ்தான் அரசாங்கம் அனுமதிக் குடுத்துருக்கு. அதையும் லேட் பண்ணிராதீங்கய்யா'' என்றபோது அந்தத் தாயின் குரல் உடைந்தது.

'உக்காருங்க பெரியம்மா' என்று ஜான்ஸன் அந்தத் தாயை உட்கார்த்தி வைத்தான்.





வீர மராட்டிய சிங்கம்



விசாரணைக் கூண்டிலிருந்தபடி, "எங்கள் பாரதம் சுயராஜ்ஜியம் பெற ஒவ்வொரு இந்தியனும் சத்தியாகிரஹத்தில் ஈடுபட்டிருக்கும்போது, நான் மட்டும் உங்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு வேண்டியவனாக மாறிவிடுவேனா?" என்று வீர முழக்கம் செய்தவர். விளைவு: திலகருக்குப் பதினெட்டு மாதங்கள் கொடுஞ்சிறை வாசம். அவரைச் சிறையில் சந்தித்து மனத்தை மாற்ற முயன்றார் ஓர் ஆங்கில அதிகாரி. "உங்கள் நிபந்தனைக்கு உட்படுவதும், மன்னிப்பு கேட்பதும் கேவலம். கொடுஞ்சிறையில் மடிந்தாலும் பரவாயில்லை. வந்தவழியே திரும்பி போய் விடுங்கள்" என்று அவரை அனுப்பி விட்டார். 'சுயராஜ்ஜியம் எமது பிறப்புரிமை' என்று முழங்கியவர் வேறெப்படி பேசியிருக்க முடியும்.

"முப்பத்தாறு வருஷம் காத்திருந்தவங்க இப்ப உடனே போணும்ங்கறீங்க! பாகிஸ்தான்ல யாரப் பாக்கப் போறீங்க, உங்களுக்கு யார் இருக்கா அங்க?"

ஜான்ஸனின் இந்தக் கேள்விக்குப் பாக்யலட்சுமி அம்மாவிடமிருந்து வந்த பதில், ஜான்ஸனை மட்டுமல்லாது என்னையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது.

"பாகிஸ்தான்ல எம் புருஷன் இருக்கார் தம்பி."

ஜான்ஸனும் நானும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம்.

"உங்கள திருச்சில விட்டுட்டு கராச்சில உங்க புருஷன் முப்பத்தாறு வருஷமா என்ன பண்ணிட்டிருக்கார் பெரியம்மா?"

"அவர் கராச்சிலதான் இருக்காரோ; வேற எந்த ஊர்ல இருக்காரோ; நான் போய்த்தான் தேடணும் தம்பி" என்றார் பாக்யலட்சுமியம்மா.

"என்னது போய்த்தான் தேடணுமா?"

"ஹ்ம்... அது ஒரு பெரிய சோகக் கதை தம்பி."

நாங்கள் இரண்டு பேரும் கதைகேட்க சுவாரசியமானோம்.

"அவர் மிலிட்டரில இருந்தார் தம்பி" என்று கதை ஆரம்பமானது.

"எழுபத்தி ஒண்ணாம் வருஷம் பங்களாதேச விவகாரத்துல இந்தியா -பாகிஸ்தான் சண்டை வந்துச்சே, அப்ப எம் புருஷனும் சண்டைக்குப் போனார். அப்பத்தான் கடைசியா நான் அவரைப் பார்த்தது. சண்டையில பாகிஸ்தான்காரங்க இவரைக் கைதியாக் கொண்டு போய்ட்டாங்கன்னு சொன்னாங்க. இவரோட கைதாகிப் போன பல பேர் விடுதலையாகி வந்துட்டாங்க. ஆனா, இவர் மட்டும் வரவேயில்லை."

"நம்ம டில்லி அரசாங்கத்துக்கு நான் லெட்டர் மேல லெட்டர் போட்டேன். ஓம் புருஷன் எந்த ஊர் ஜெயில்ல இருக்கார்ன்னு விசாரிச்சிட்டிருக்கோம்னுதான் பதில் வந்துச்சு.

"முப்பத்தாறு வருஷமா விசாரிக்கிறாங்க! அப்புறம், துணிஞ்சு பாகிஸ்தான் கவர்மெண்ட்டுக்கே எழுதிப் போட்டேன். பத்து நாளக்கி முன்னாலதான் நீயே வந்து தேடிப் பாத்துக்கன்னு பதில் வந்துருச்சி. அதோட அவங்க நாட்டுக்கு வர்றதுக்கு அனுமதிக் கடிதமும் அனுப்பியிருக்காங்க. நான் போய் அவர் எந்த ஊர்ல இருந்தாலும் தேடிப்புடிச்சிக் கையோட கூட்டிக்கிட்டு வந்துருவேன். நீங்க மட்டும் எனக்கு ஒத்தாச பண்ணுங்க தம்பி."

ஜான்சன் தலையைச் சொறிந்தான்.

"இந்தச் சமாச்சாரமெல்லாம் நீங்க ஃபோன்ல சொல்லவேயில்லியே பெரியம்மா... இப்ப டிக்கட் கையவுட்டுப் போயிருச்சே..."

"அப்படிச் சொல்லாதீங்க தம்பி. அந்த டிக்கட் எடுத்தவங்க விலாசத்த குடுங்க. இந்தியாவுல அவங்க எங்க இருந்தாலும்

வைரவிழா சிந்தனை



தமிழும் தேசியமும்



திரு.வி.க. என்றாலே நவசக்தி இதழ் நினைவு வரும். ஆனால், அந்தப் பணியையெல்லாம் செய்வதற்கு முன் அவர் வேலை பார்த்தது... 'ஸ்பென்சர்' கம்பெனியில்! தேசபக்திக் கனல் அவரையும் பற்றிக்கொள்ள, அங்கிருந்து வெளியேறி தமிழாசிரியராக சிறிது காலம் பணியாற்றினார் திரு.வி.கல்யாணசுந்தரனார். வ.வே.சு. அய்யரின் 'தேச பக்தன்' பத்திரிகைக்கு ஆசிரியராகப் பொறுப்பேற்றார். மகாத்மா காந்தியின் தமிழகச் சுற்றுப் பயணங்களின்போது அவரது ஆங்கில சொற்பொழிவுகளைத் தமிழாக்கியவர் திரு.வி.க. காங்கிரஸ் மாநாடுகளில் பங்கேற்று விடுதலை இயக்கத்துக்குத் தம் பங்களிப்பை வழங்கியவர். தமிழ் வளர்ச்சிக்கு இவர் செய்திருக்கும் தொண்டுகள் மிகப் பெரியது. கல்கி கிருஷ்ணமூர்த்தி நவசக்தியில் தமது பத்திரிகைப் பணியைத் துவங்கியபோது அவருக்குக் குருவாக இருந்து வளர்த்தவர்.

தேடிப் புடிச்சி, அவங்க கால்ல விழுந்து டிக்கட்ட நான் மாத்தி வாங்கிக்கிறேன்.''

ஜான்ஸன் சங்கடமாய் என்னைப் பார்த்தான். அந்தத் தாயின் சோகக் கதையில் அவன் நெகிழ்ந்துபோய், எப்படி உதவுவது என்று புரியாமல் விழிப்பதும் தெரிந்தது.

'ஜான்ஸன், இந்த அம்மாட்ட நான் ஒரு கேள்வி கேக்கட்டுமா' என்று அவனிடம் அனுமதி வாங்கிக் கொண்டு, கொஞ்சம் தயக்கத்தோடு என் கேள்வியை முன் வைத்தேன்.

''பெரியம்மா... வந்து... முப்பத்தாறு வருஷம் ஆயிருச்சே, உங்க புருஷன் பாகிஸ்தான்ல உயிரோட இருப்பார்னு நம்பிக்கை இருக்கா...''

''அப்படியெல்லாம் அசம்பாவிதமாப் பேசாதீங்க தம்பி''- சொன்ன பெரியம்மாவுக்கு கண்ணீர் முட்டிக்கொண்டு நின்றது.

''என்ன வுட்டுட்டு அவர் போகவே மாட்டார். அவர் கட்டுன தாலியோட பலம் உங்களுக்குத் தெரியாது.''

''போர்க் கைதியாப் போன ஒருத்தர, வெளிநாட்ல போய் எப்படித் தேடிக் கண்டுபிடிப்பீங்க பெரியம்மா?''

''கண்டுபிடிச்சிருவேன் ராசா. சாமி தொணையோட கண்டுபிடிச்சிருவேன்.''

அந்தத் தாயின் நம்பிக்கையும் உறுதியும் எனக்குள்ளேயும் ஓர் உறுதிக்கு வித்திடுவதை உணர்ந்தேன்.

''சாமி மட்டுமில்ல பெரியம்மா. நானும் உங்களுக்குத் தொணையா இருக்கேன்'' என்றேன்.

நான் என்ன சொல்கிறேன் என்று புரியாமல் அந்தத் தாயும், ஏதோ அரைகுறையாய்ப் புரிந்த குழப்பத்தில் என்னைப் புதிராய்ப் பார்க்க, நான் புதிரை அவிழ்த்தேன்.

''ஜான்ஸன்... எங்க அம்மாவுக்கு டிக்கட் எடுக்க வேண்டாம்...''

''அப்ப... நீ... புனிதப் பயணம் போகலியா?''

''போறேன். எங்க அம்மாவோட இல்ல. இந்த அம்மாவோட. இதுகூட ஒரு புனிதப் பயணம்தான்.''


'யூ ஆர் கிரேட் டா' என்று நெகிழ்ந்து போன ஜான்ஸன், என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று புரியாமல் விழித்துக் கொண்டிருந்த பாக்யலட்சுமியம்மாவுக்கு எல்லாவற்றையும் விவரமாய் விளக்கினான்.

''அப்படியா, ரொம்ப சந்தோஷம் தம்பி'' என்று பூரித்துப்போன பாக்யலட்சுமியம்மா என்னிடம் ஒரு சந்தேகம் கேட்டாள்.

''ஆனா தம்பி, உங்கம்மா இதுக்கு ஒத்துக்குவாங்களா?''

ஒரு புன்னகையோடு அந்தச் சந்தேகத்தை நான் போக்கினேன்.

''நிச்சயமா ஒத்துக்குவாங்க பெரியம்மா. உலகம் பூரா அம்மாக்கள் ஒரே மாதிரிதான் இருக்காங்க.'' ●



சமீபத்தில் குஜராத்தில் மட்டும் சுமார் 300 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர்!

"எங்கள் விவசாயிகள் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலிகள். அவர்கள் வசதியுடன் வாழ்கிறார்கள். பலரிடம் சொந்தமாகக் கார் இருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.''- முகத்தில் பெருமிதம் பொங்க பூரிப்புடன் செய்தியாளர்களிடம் அறிவித்திருக்கிறார் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி.

சொந்தமாகக் கார் இருக்க வேண்டுமென்றால் அந்தக் காரை பார்க் செய்ய, நிச்சயம் ஒரு வீடு இருந்தாக வேண்டும். அதுவும் காம்பவுண்ட் கேட் உள்ள பெரிய வீடு. விவசாயிகள் அந்த அளவுக்கா செழிப்படைந்துவிட்டார்கள். அப்படி எதைத்தான் விவசாயம் செய்தார்கள்.

பார்ப்போமே... இதென்ன கிராமம்? வாட்லி. சரி, நடந்து செல்வோம். கண்ணில் தென்படும் விவசாயி ஒருவரிடம், ''நண்பரே, இப்படி வாருங்கள். உங்கள் முதல்வர் சொன்னதைக் கேட்க மகிழ்ச்சியாக இருக்கிறது. கார் வைத்திருக்கிறீர்களாமே! வாழ்க வளமுடன்.'' சொல்லிவிட்டு நகர்வதற்குள் அந்த விவசாயி, தம் செருப்பைத் தூக்கிக் காட்டுகிறார். தேய்ந்து, பொத்தலாகிப்போன செருப்பு. இனி ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாது என்ற பலவீனத்தை அறிவிக்கும் செருப்பு. என்ன ஆனது? நடுங்கும் குரலில் அவர் சொல்கிறார். ''விவசாயம் பொய்த்துவிட்டது. கழுத்தை நெறிக்கும் கடன் தொல்லையால் தற்கொலை செய்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை.'' சொல்லிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் நகர்கிறார்.

மோடி விவரிக்கும் கற்பனையை இந்த இடத்தில் ரத்து செய்துவிட்டு, நிஜ குஜராத்துக்குள் பிரவேசிப்போம். ஏதாவது ஒரு வீட்டுக் கதவைத் தட்டுவோம். வெளியே வருபவரிடம் பேசுவோம்.



கொல்லும் குஜராத்

அவர் பெயர் பஹு¬பாய். வயது முப்பத்தைந்து. விவசாயத்தைத் தவிர வேறு தொழில் தெரியாது. தொடர்ந்து சில ஆண்டுகள் விவசாயம் பொய்த்துப் போனது உண்மைதான். ஆனால், பஹு¬பாய் கலங்கிப்போகவில்லை. இந்த ஆண்டு எப்படியும் பிழைத்துவிடலாம் என்று துணிந்து மீண்டும் நிலத்தில் இறங்கினார். அவருக்குத் தெரிந்த நிறைய பேர் நிலத்தை விற்றுவிட்டு அருகில் உள்ள பெருநகரங்களில் கூலி வேலை பார்க்கப் போய் விட்டார்கள்.

பஹு¬பாயின் தன்னம்பிக்கையும் தன்மானமும்தான் அவரைத் தடுத்தாட்கொண்டன. துணிந்து ஐம்பதாயிரம் ரூபாய் கடன் வாங்கினார். மனைவி வஜு¬பென்னை சமாதானப்படுத்தினார். ''கவலைப்படாதே, அரசாங்கம் ஏமாற்றலாம், நாம் விசுவாசத்துடன் வணங்கும் மண் நம்மை ஏமாற்றாது.''

ஆனால், மிகக் கடுமையாக மண் ஏமாற்றியது. அதற்குப் பிறகு பஹு¬பாய் யோசிக்கவேயில்லை. தம் உயிரை மாய்த்துக் கொண்டார். புகார் கொடுக்க வந்த வஜு¬பென்னிடம் பணம் கேட்டு விரட்டியடித்து இருக்கிறார்கள் காவல்துறை அதிகாரிகள்.

ராஜ்காட்டுக்கு அருகிலுள்ள சரப்தார் கிராமத்தில் ரமேஷ் என்பவர் தூக்கு மாட்டிக் கொண்டு இறந்துபோயிருக்கிறார். ஏதோ குடும்பப் பிரச்னை என்று சொல்லி ஃபைலை க்ளோஸ் செய்துவிட்டார்கள்.

இன்னும் கொஞ்ச தூரம் போனால் பனியாதேவ் கிராமம். வல்லப் என்ற எண்பது வயது தாத்தா, தம் மனைவி, மகன், மருமகள் மூவரையும் அழைத்துக் கொண்டு சோமநாதபுரம் அருகில் உள்ள கடலில் குதித்துவிட்டார்.

மிகச் சமீபத்தில் மட்டும் முன்னூறு பேர் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். இது பதிவான எண்ணிக்கை மட்டுமே, 'குடும்பப் பிரச்னை' என்று எத்தனை பேரின் ஃபைலை க்ளோஸ் செய்தார்களோ தெரியாது.

ஏன்...? ஏன்...?

பூச்சிமருந்து, விதை, கருவிகள் விலை எக்கச்சக்கமாக அதிகரித்துவிட்டது. தண்ணீர் கட்டணம் செலுத்திக் கட்டுப்படியாகவில்லை. மின்சாரக் கட்டணம் இரு மடங்காக உயர்ந்துவிட்டது. விவசாயம் மட்டுமே பிழைப்பு என்று கடைசிவரை விடாப்பிடியாக முயன்று பார்க்க விரும்புபவர்கள் பலருக்குத் தற்கொலையை விட்டால் வேறு வழியில்லை.

ஆயிரம் பேர் வேலை செய்யும் கம்ப்யூட்டர் நிறுவனத்தைச் சுலபமாக நடத்திவிடமுடிகிறது. ஆனால், விவசாயம் மட்டும் உயிரைக் குடிக்கும் ஆபத்தான காரியமாக மாறியிருக்கிறது.

ஆனால் என்ன? இப்போதைக்கு, ஒரு ஹைடெக் முதல்வராக மாறவேண்டும் என்பதுதான் நரேந்திர மோடியின் ஆசை, கனவு, வேட்கை. தன் லேப்டாப்பை பிரித்துவைத்துக் கொண்டு மாபெரும் தொழிற்சாலைகள் கட்டுவது பற்றியும், கம்ப்யூட்டர் நிறுவனங்கள் ஆரம்பிப்பது பற்றியும் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார். ஆனால், விவசாயிகள் பிரச்னையைத் தம் லேப்டாப்பிலிருந்து டெலீட் செய்துவிட்டார்! இந்தியாவின் இதர முதல்வர்களும் மோடி மார்க்கத்துக்கு வேகமாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். ●

ஏரோபிளேன்



"தலைவலினு சொல்றீங்களே... தைலத்தைத் தேய்ச்சிட்டுப் படுத்துத் தூங்குங்களேன்..."


"இல்லம்மா, நீ தூங்கினாலே எனக்குச் சரியாப் போயிடும்!"

- லெ.நா.சிவகுமார்

"எதுக்கு டாக்டர் என் சட்டை பாக்கெட், பேண்ட் பாக்கெட்லயெல்லாம் கை விடறீங்க?"

"இதுதான் மாஸ்டர் செக்-அப்ல முதல் வகை...!"

-இடைப்பாடி ஜெ.மாணிக்கவாசகம்






"தலைவருக்கு சாலை மறியல், ரயில் மறியல்னு செஞ்சு அலுத்துப் போச்சாம்!"

"பின்னே என்ன செய்யப் போறார்?"

"ஏரோபிளேன் மறியல் பண்ணனுமாம்."

- என்.உஷாதேவி



சிறியல்!

"என் மண்டையில படிப்பே ஏற மாட்டேங்குது சார்,"

"உங்க அப்பாகிட்டே சொல்ல வேண்டியதுதானே?"

"சொன்னா... அவர் மண்டையில ஏறினாதானே?"







"கைமாத்தா ஐந்நூறு ரூபா வாங்கினியே... என்னாச்சு...?"

"பைசா பாக்கி இல்லாம அன்னைக்கே செலவாகிப் போச்சே... எதுக்குக் கேட்கிறே?"

- பா.து.பிரகாஷ்





"எங்க மானேஜர் படுகில்லாடி... தன்னோட ரூம்ல உட்கார்ந்தபடியே யாராரு வந்திருக்காங்க, வரலைனு கண்டுபிடிச்சிடுவார்."

"எப்படி?"

"அவுங்கவுங்களோட குறட்டைச் சத்தத்தை வச்சுதான்!"

- சீர்காழி வி.ரேவதி

வெற்றிச் சிரிப்பு

ரா. குருராசன்



"ஏண்டா குமார், கம்மாதானே சினிமா பாட்டுக் கேட்டுகிட்டு இருக்கே. எனக்காக தி.நகர் போய் இந்த நகைச்சீட்டைக் கட்டிட்டு வந்துடேன்."

பேரனிடம் கெஞ்சினாள் கோமளம்.

"போ பாட்டி. எனக்கு அடுத்த வாரம் செமஸ்டர் இருக்கு; படிக்கணும்."

கேட்டுக் கொண்டிருந்த எப்.எம்.மை அணைத்தபடி சோகத்துடன் புத்தகத்தை எடுத்தான் குமார்.

"எம்மா, புவனா... நீயாவது காலேஜ் விட்டு வர்றப்போ."

"ஐய்யயோ... எனக்கு எக்கச்சக்கமா நோட்ஸ் எழுத வேண்டிருக்கு."

பேத்தி சுவாரசியமாகப் படித்துக்கொண்டிருந்த சிட்னி ஷெல்டனை சாய்வு நாற்காலியில் சாயவைத்துவிட்டு எழுந்தாள்.

"அம்மா, என்னை ஆபீஸிலே கம்ப்யூட்டர் டிபார்ட்மெண்டுக்கு மாத்திட்டாங்க. கம்ப்யூட்டர் கோர்ஸ் சேர்ந்து படிக்கணும். என்னாலே எந்தப் பக்கமும் திரும்ப முடியாது. நான் கம்ப்யூட்டர் கிளாசுக்குக் கிளம்பறேன்"

நாளேட்டில் இரட்டைக் கொலை ரசித்துப் படித்துக் கொண்டிருந்த மகன் - குடும்பத் தலைவன் எழுந்தான்.

தொலைக்காட்சியில் நகைச்சுவையை நகம் கடித்துப் பார்த்துக் கொண்டிருந்த மருமகள் எழுந்தாள். சோம்பல் முறித்தாள்.

"அத்தே, என்னைக் கட்டாயப்படுத்தாதீங்க. வீட்டு வேலை நிறைய இருக்கு. சமையல்கட்டைச் சுத்தம் செய்யணும்; வீட்டை ஒட்டடை அடிக்கணும்; பழசையெல்லாம் ஒரங்கட்டணும்."

"வயசான காலத்திலே நான் எனக்காக ஒருவேலை செய்யணும்னு சொல்லும் போதுதான் உங்களுக்கெல்லாம் அவரவர்கள் செய்ய வேண்டிய வேலை ஞாபகத்துக்கு வருது. அப்படித் தானே..."

- கோமளம் இப்படிக் கேட்கவில்லை. கோபித்துக் கொள்ளவும் இல்லை.

'நீங்கள் இப்படிச் செய்வீர்கள் என்று தெரிந்துதான் உங்களுக்குத் தெரியாமல் நானே நேற்று போய் நகைச்சீட்டைக் கட்டிவிட்டேன்.

இப்படியே - இந்தச் சுறுசுறுப்போடு நீங்கள் உங்கள் கடமைகளை தினமும் கவனித்துக்கொண்டால் போதும்.' மனசுக்குள் சிரித்துக் கொண்டாள் கோமளம். அது வெற்றிச் சிரிப்பு!



ஒரு வருடத்துக்கு ஐந்நூறு முதல் அறுநூறு கிலோ வரை கிடைத்து வந்த உளுந்து சாகுபடி, சித்திரைப் பட்டப் பயிரான ஆடுதுறை உளுந்தால் 800 முதல் 1000 கிலோ வரை உயர்ந்திருக்கிறது என்று மகிழ்ச்சியில் பூரித்துப்போய் இருக்கின்றனர். தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி சுற்றுவட்டார கிராமப்புற விவசாயிகள். அவர்களுடன் பேசியதிலிருந்து:

"ஒரு வயல்ல வழக்கமா நெல்லு அறுவடைக்கு முன்னாடியே உளுந்து தெளிச்சிவுட்ருறாங்க. அப்புறம் எப்படி நல்ல விளைச்சல் காணும்னு சொல்லுங்க? அதான் இந்தப் பகுதி விவசாயிங்க யோசிச்சுப் பார்த்தோம். எங்கள் பகுதி விவசாய சாகுபடி வல்லுநர் சந்திரமௌலி என்பவரோட ஆலோசனைப்படி, கடந்த சில வருடங்களாகவே எங்களோட வயல்கள்ல ஆடுதுறை உளுந்து அமோகமா விளைஞ்சு வருது!'' என்கிறார் திருக்காட்டுப்பள்ளி அருகேயுள்ள பவனமங்களம் கிராம விவசாயி.

உளுந்தில் டி9, ஏடிடி3, பம்பன், ஏ.டி.டி.5 என்கிற நான்கு ரகங்கள் அதிகப் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. இதில் ஏ.டி.டி.5 எனப்படுவதே ஆடுதுறை உளுந்து ஆகும். இந்த ரக உளுந்தின் சிறப்பம்சம், ஏனைய ரகங்களைவிட அதிக அளவில் இட்லி மாவு பொங்கும் தன்மை கொண்டது எனக் கூறப்படுகிறது. இதுதான் மல்லிகைப்பூ இட்லிக்கு உகந்த உளுந்து.

வயலில் அறுவடை முடிந்த பின்னரே ஆடுதுறை உளுந்து சாகுப்படிக்கான வேலைகள் துவங்க வேணும். கதிர் அறுத்தவுடனே வயலை இரண்டு உழவு ஓட்டி, ஒரு மாதம் சும்மா போட்டு வைக்கணும். பங்குனி இறுதியில் வயல்ல தண்ணீர் விட்டு சித்திரை முதல் வாரத்துக்குள் இரண்டு முறை உழவு ஓட்டணும். விதை உளுந்து தெளிப்பதற்கு முன்பாக, அதனை தண்ணீரில் நான்கு மணி நேரம் நன்கு ஊற வைக்கணும். இரண்டாம் உழவுக்குப் பின்னர் வயலில் விதை உளுந்து தெளித்துவிட்டு, ஈரப்பதம் இருக்கும்போதே மூன்றாம் உழவும் ஓட்டிவிட வேணும்.

விதை தெளித்த மூன்றாம் நாளில் வயலில் கைத்தெளிப்பான் மூலமாக களைக்கொல்லி தெளிக்க வேண்டும். விதை நட்டதிலிருந்து முப்பது நாள் கழித்துத்தான் வயலில் மீண்டும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

அதிக வருவாய் தரும் ஆடுதுறை உளுந்து!

செடி வளர்ந்து வரும் சமயத்தில் பூச்சித் தொந்தரவுகள் இருந்தால், கைத் தெளிப்பான் மூலம் பூச்சி மருந்து தெளிக்கணும். இயற்கை மழை பெய்தால் வயலுக்குத் தண்ணீர் விட வேண்டியதில்லை. இல்லையேல் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் விட்டால் போதும். சுருக்கமாகச் சொல்லப் போனால், ஒரு ஏக்கர் நெல் சாகுபடிக்கு தேவைப்படும் தண்ணீரை, பத்து ஏக்கர் உளுந்து சாகுபடிக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

''மூன்று மாத சாகுபடிப் பயிரான ஆடுதுறை உளுந்தை சித்திரை முதல் வாரம் தெளித்தால், ஆனி கடைசி வாரம் அறுவடைக்கு வந்துவிடும். என்னுடைய எட்டு ஏக்கரில் ஆடுதுறை உளுந்து தெளித்திருந்தேன். ஒரு ஏக்கருக்கு தொள்ளாயிரம் கிலோ விளைந்திருக்கிறது. மூன்று மாதத்தில் ஆடுதுறை உளுந்து சாகுபடி மூலமாக ஒரு ஏக்கருக்கு இருபதாயிரம் ரூபாய் லாபம் கிடைத்துள்ளது. இதற்குச் செலவு குறைவு. சாகுபடி முறைகளும் எளிமையானவை. மேலும், ஆடுதுறை உளுந்து, சந்தை விற்பனையிலும் சிரமம் இல்லாதது!'' எனக் கூறுகிறார் சந்திரமௌலி.

கடந்த பல வருடங்களுக்கு முன்பாக, எங்கள் பகுதி விவசாயிகள் பலரும் கோடை காலத்தில் என் சாகுபடி செய்து பல கஷ்டங்களுக்கு ஆளாகிப் போயினர். ஒரு வருடம் சுமாராக விளையும். இன்னொரு வருடம் கோடை மழை குறுக்கே புகுந்து பயிர்களை அழித்து விடும். அப்போதுதான் உளுந்து பயிரிட்டால் என்ன என்கிற எண்ணம் எங்களிடையே உருவானது. கோடை காலத் தனிப்பயிராக இதனைச் சாகுபடி செய்யத் தொடங்கினோம். கை மேல் பலன் கிட்டியது. என் போட்டு வந்த பலரும் படிப்படியாக உளுந்து விவசாயத்துக்கு மாறி வந்தனர். எண்ணி எண்பத்தைந்தாவது நாளில் லாபம் கண்டு விடலாம். இந்த வகை உளுந்தில் இரட்டை மகசூல் வேறு கிடைத்து வருகிறது. திருக்காட்டுப்பள்ளி, சுற்று வட்டார பகுதிகளில் ஆண்டு தோறும் ஐந்தாயிரம் ஏக்கருக்கு மேல் ஆடுதுறை உளுந்து பயிரிடப்பட்டு வருகிறது!'' எனச் சொல்கிறார்கள் அப்பகுதி விவசாயிகள்!



* சந்திரமௌலி

– ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

சரித்திர ருசி!



* 'பார்த்திபன் கனவு' திரைப்படத்தில் ஜெமினிகணேசன், வைஜெயந்தி மாலா

ஒரு திரைப்படத்தின் வெற்றியைத் தீர்மானிப்பதில் பாதிப் பங்கு நடிகர், நடிகையருக்கு உண்டு. எந்தக் கதாபாத்திரத்துக்கு யாரைத் தேர்ந்தெடுக்கிறோம், அவர் எப்படி நடிக்கிறார் என்பதைப் பொருத்துதான் அந்தக் கதாபாத்திரம் வெற்றி பெறும். ஒரு திரைப்படத்துக்கான நடிகர்கள் தேர்வே இரண்டு அல்லது மூன்று மாதங்கள் அவகாசம் எடுத்துச் செய்ய வேண்டிய பணி. சரித்திரப் படங்களுக்கு இன்னும் கவனம் தேவை.

'பார்த்திபன் கனவு' போன்ற காலத்தை வென்ற படைப்புக்கு இன்னும் அதிகமாகவே கவனம் தேவை. நாவலை எழுதிய போது நிச்சயம் கதாசிரியர் தம் மனத்தில் ஒவ்வொரு கதாபாத்திரத்துக்கும் ஒரு பிம்பத்தை அளித்திருப்பார். நாவலைப் படித்த ஆயிரக்கணக்கான வாசகர்களின் உள்ளங்களும் கதை மாந்தர்களுக்கு உருவத்தைக் கொடுத்திருக்கும். இத்தனைக்கும் ஈடு கொடுக்கும் விதமாக நடிகர்கள் தேர்வு அமைய வேண்டும்.

முன்பே சொன்னதுபோல எழுபதுகளுக்குப் பிறகு சரித்திரப் படங்களின் வருகை படிப்படியாகக் குறைந்து. பிறகு நின்று போனதால் இன்றைய கையிருப்பு நடிகர் நடிகைகளிடம் சரித்திரம் குறித்த ஆர்வம் இல்லை. அதனால் சரித்திரப் படத்தில் நடிக்க யாருமே இல்லாததைப் போன்ற தோற்றம் காணப்படுகிறது. ஒன்றிரண்டு படங்கள் கொடுத்து விட்டால் ஆர்வம் ஏற்பட்டு விடும்.

'இம்சை அரசன் 23-ம் புலிகேசி' படத்தை எடுத்தபோது முதல் சில நாட்கள்தான் சிரமமாக இருந்தது. வடிவேல், இளவரசு போன்றவர்கள் வசனத்தை உச்சரிக்க சிரமப்பட்டார்கள். பிறகு அந்தக் கதாபாத்திரமாகவே மாறி சிறப்பாக நடித்தனர். நாசர், மனோரமா போன்றவர்கள் அந்தக் காலத்துக்கே சென்று வாழ்ந்தார்கள். அதற்குக் காரணம் ஆர்வம்தான். அந்த ஆர்வத்தை ஒருமுறை ஊட்டி விட்டால் போதும். பிறகு அவர்களாகவே சரித்திர நாயகர்களை உணர்ந்து அனுபவிக்க ஆரம்பிப்பார்கள்.

இன்றைய நடிகர்களுக்கு அந்த ருசியை முதலில் உணர்த்த வேண்டும். அந்த அற்புத ருசியைக் கொடுக்க வேண்டிய கடமை திரைப்படத் துறைக்கு இருக்கிறது. திரைத்



துறைக்கும், ரசிகர்களுக்கும் நாம் செலுத்த வேண்டிய நன்றிக் கடன் இதுதான்.

'**பா**ர்த்திபன் கனவு' போல எத்தனையோ சரித்திர நாவல்கள் நம்மிடம் இருக்கின்றன. தமிழ்ப் பாரம்பரியம் மிக நீண்டது; எண்ணற்ற சாதனைகளின் விளை நிலம் அது. எத்தனையோ விஷயங்களில் உலகுக்கு முன்னோடியாக விளங்குகிறது. எடுக்க எடுக்க குறையாத சுவாரஸ்யங்கள் கொண்டது. ஆவணங்களும் ஆதாரங்களும் நிறையவே உள்ளன. ஒரு முறை ருசியை உணர்த்தி விட்டால் போதும். பிறகு சமைப்பவர்களின் எண்ணிக்கையும் கூடும்; சுவைப்பவரின் எண்ணிக்கையும் அதிகமாகும்.

அமரர் கல்கியின் படைப்புகளை ருசித்துத் திளைத்தவர்களில் நானும் ஒருவன். அந்த ருசியைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பளித்த கல்கிக்கு நன்றி. இன்றைய தலைமுறை வாசகர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது ஒன்றுதான்.

பீட்ஸாவில் தொடங்கி எத்தனையோ நவீன உணவுகளை நீங்கள் சுவைத்தாலும், சிறுவயதில் அம்மா அல்லது பாட்டி கையால் கொடுக்கப்பட்ட நமது பாரம்பரிய உணவின் சுவை அடி மனத்தில் இருக்கும். அதை மீண்டும் ருசிக்கும்போது கிடைக்கும் ஆனந்தத்துக்கு அளவே இருக்காது. உடலுக்குத் தீங்கு விளைவிக்காத, வலு சேர்க்கும். அத்தகைய உணவையும் அடிக்கடி உண்ணுங்கள். ஒருமுறை ருசித்து விட்டால் உங்களால் மீள முடியாது. ருசிப்போம், வாருங்கள்!

தொகுப்பு : **ஆரணி யுவராஜ்**

பார்த்திபன்களே வாங்க! வாங்க!
போட்டி முடிவு அடுத்த இதழில்...



'பார்த்திபன் கனவு' குறித்து இயக்குநர் சிம்புதேவன் விரிக்கும் சிந்தனை மடலின் தொடர்ச்சி...

5. மாரப்ப பூபதி



வாசலில் குதிரையில் வந்திறங்கியவன் திடகாத்திரமுள்ள யௌவன புருஷன்; வயது இருபத்தைந்து இருக்கும். ஆடை ஆபரணங்கள் உயர்ந்த ராஜரீக பதவியைக் குறிப்பிட்டன. ஆசாபாசங்களிலும் மதமாச்சரியங்களிலும் அலைப்புண்ட உள்ளத்தை முகக்குறி காட்டியது.

"சேனாதிபதி வரவேணும்" என்று சொல்லிக் கிழவன், வந்தவனை வரவேற்று உள்ளே அழைத்துக்கொண்டு வந்தான்.

"இனிமேல் என்னை அப்படிக் கூப்பிடாதே! நான் சேனாதிபதி இல்லை; நான் மாரப்ப பூபதி இல்லை; நான் என் தகப்பனுக்குப் பிள்ளையே இல்லை!" என்று சொல்லிக் கொண்டு மாரப்ப பூபதி உள்ளே வந்தான். முற்றத்தில் ஏற்கெனவே கிழவன் உட்கார்ந்திருந்த பீடத்தில் அமர்ந்தான்.

"யுவராஜா ரொம்பக் கோபமாய் இருப்பது போல் தெரிகிறது!"

"யுவராஜாவா! யார் யுவராஜா? நானா? நேற்றுப் பிறந்த அந்தப் பரதைப் பயல் அல்லவா யுவராஜா? இளவரசர் விக்கிரம சிங்கர் வாழ்க! ஜய விஜயீபவ!" என்று பரிகசிக்கும் குரலில் கூறிவிட்டு மாரப்ப பூபதி, இடிஇடி யென்று சிரித்தான்.

சற்றுப் பொறுத்து, "அது போகட்டும்; ஆச்சாரி! உன் சோழி என்ன தெரிவிக்கிறது? அதைச் சொல்லு!" என்றான்.

வீரபத்திர ஆச்சாரி கொல்லு வேலை செய்ததுடன், சோதிட சாஸ்திரத்தில் வல்லவன் என்று பெயர் வாங்கியிருந்தான். சோழிகளை வைத்துக்கொண்டு அவன் கணக்குப் போட்டு ஜோசியம் பார்ப்பது வழக்கம்.

"யுவராஜா! எதற்காக இந்தப் பிரமை உங்களுக்கு...?" என்று ஆரம்பித்தான் கிழவன்.

"அந்தக் கதையெல்லாம் அப்புறம் வைத்துக் கொள்ளலாம். நீ ஏதாவது பார்த்தாயா, இல்லையா? வெறுமனே என்னை அலைக்கழிக்க உத்தேசமா?"

"பார்த்தேன், யுவராஜா! உங்களுக்கு என்ன வேணுமோ, கேட்டால் சொல்லுகிறேன்."

"முக்கியமான விஷயம் சண்டைதான். அதன் முடிவு என்ன ஆகும்? இதைத் தெரிந்து சொல்ல முடியாவிட்டால், உன் ஜோசியத்தினால் என்ன பிரயோஜனம்? கவடிகளையும் சோழிகளையும் தூக்கி நானே காவேரியாற்றில் எறிந்து விடுகிறேன்!" என்றான் மாரப்பன்.

"அப்படியே செய்துவிடுங்கள், யுவராஜா! எனக்கு ரொம்ப அனுகூலமாயிருக்கும். பாருங்கள்! என்னுடைய சொந்த விஷயத்தில் இந்த சாஸ்திரம் பிரயோஜனப்படவில்லை. ஒரே நாளில் குடும்பம் முழுவதும் அழிந்து விட்டது. குலத்தை வளர்ப்பதற்கு ஒரு பெண் குழந்தைதான் மிஞ்சியிருக்கிறது."

"வள்ளி சுகமாயிருக்கிறாளா, ஆச்சாரி!" என்று மாரப்ப பூபதி கேட்டான். அப்பொழுது அவன் முகத்தில் ஒரு விகாரம் காணப்பட்டது.

"ஏதோ இருக்கிறாள்" என்றான் கிழவன்.

"ஆமாம், பொன்னன் சண்டைக்குப் போய்விட்டால் வள்ளி என்ன செய்வாள்?"

"அதற்கென்ன யுவராஜா! வள்ளியைக் காப்பாற்றக் கடவுள் இருக்கிறார்; இந்தக் கிழவனும் இருக்கிறேன்!" என்று அழுத்திச் சொன்னான் வீரபத்திர ஆச்சாரி.

பார்த்திபன் கனவு

அமரர் கல்கி

''ஆமாம், நீ இருக்கும்போது அவனுக்கு என்ன வந்தது? இருக்கட்டும். ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறோம். இந்தச் சண்டையின் முடிவு என்ன ஆகும்? உன் சோழிக்கணக்கில் ஏதாவது தெரிகிறதாயிருந்தால் சொல்லு; இல்லாவிட்டால் உன் ஜோசியக் கடையைக் கட்டு!''

''கடையை அப்போதே கட்டிவிட்டேன், யுவராஜா! உங்களுடைய தொந்தரவினால்தான் மறுபடியும் அதைத் திறந்தேன்!''

''திறந்ததில் என்ன தெரிந்தது?''

''கிரகங்களின் சேர்க்கை ரொம்பப் பயங்கரமான முடிவைக் காட்டுகிறது. சண்டையில் ஒரு பக்கத்துச் சேனை அடியோடு அழிந்து போகும். யுத்த களத்துக்குப் போனவர்களில் ஒருவராவது திரும்பி வர மாட்டார்கள். ஆனால், எந்தப் பக்கத்துச் சேனை என்று எனக்குத் தெரியாது.''

''அது எனக்குத் தெரியும். எந்தப் பக்கத்துச் சேனை அழியும் என்று சொல்லுவதற்கு நீயும் வேண்டாம்; உம் சோழியும் வேண்டாம். திரும்பி வராமல் நிர்மூலமாகப் போகிறது சோழ சைன்யந்தான். அந்தப் பெரும் புண்ணியத்தைத் தான் உங்கள் பார்த்திப சோழ மகாராஜா கட்டிக் கொள்ளப் போகிறார்!''

''யுவராஜா! நீங்களே இப்படிச் சொல்லலாமா? நமக்குள் எவ்வளவு மனஸ்தாபங்கள் இருந்தாலும் பகைவனுக்கு முன்னால்...''

''யார் பகைவன்? பல்லவ சக்கரவர்த்தியா நமக்குப் பகைவன்? இல்லவே இல்லை! சோழ நாட்டுக்கு இப்போது பெரிய பகைவன் பார்த்திபன்தான். இவன் கையிலே வாள் எடுத்து அறிய மாட்டான்; வேல் வீசி எறிய மாட்டான்! இப்பேர்ப்பட்ட வீராதி வீரன் பல்லவ சைன்யத்துடன் போர் செய்யக் கிளம்புகிறான். பல்லவ சைன்யம் என்றால் லேசா! சமுத்திரத்தின் மணலை எண்ணினாலும் எண்ணலாம். பல்லவ சைன்யத்திலுள்ள வீரர்களை எண்ண முடியாது. காவேரியிலிருந்து கோதாவரி வரையில் பரந்து கிடக்கும் பல்லவ சாம்ராஜ்யம் எங்கே? ஒரு கையகலமுள்ள சோழநாடு எங்கே? நரசிம்ம சக்கரவர்த்திதான் லேசுப்பட்டவரா? நூறு யோசனை தூரம் வடக்கே சென்று ராட்சதப் புலிகேசியைப் போர்க்களத்தில் கொன்று, வாதாபியைத் தீ வைத்துக் கொளுத்தி விட்டு வந்தவர். அவருடன் நாம் சண்டை போட முடியுமா? யானைக்கு முன்னால் கொசு...!''

''யுவராஜா! இதையெல்லாம் என்னிடம் ஏன் சொல்லுகிறீர்கள்! மகாராஜாவிடம் சொல்வது தானே?''

''மகாராஜாவிடம் சொல்லவில்லையென்றா நினைத்துக் கொண்டாய், கிழவா? சொன்னதன் பலன்தான் எனக்குச் சேனாதிபதிப் பதவி போயிற்று. மகாராஜாவே சேனாதிபதிப் பதவியையும் ஏற்றுக்கொண்டு விட்டார்! சைனியத்தை அவரே நடத்திக்கொண்டு யுத்த களத்துக்குப் போகப் போகிறாராம்! தாராளமாய்ப் போகட்டும். இந்தப் பிரமாத சேனாதிபதிப் பதவி இல்லையென்று யார் அழுதார்கள்!''

''அப்படியானால் யுவராஜா! நீங்கள்

தெற்கு வானத்தில் திடீரென்று ஒரு நட்சத்திரம் நிலைபெயர்ந்தது. ஒரு வினாடி நேரம் அது பளீரென்று ஒளி வீசி வானவெளியில் அதிவேகமாய்ப் பிரயாணம் செய்தது!

யுத்தத்துக்கே போக மாட்டீர்களோ?''

''நானா? நானா? என்னைக் கூப்பிட்டால் போவேன்; கூப்பிடாவிட்டால் போக மாட்டேன்... கிழவா! சண்டையின் முடிவைப் பற்றிச் சொன்னாயே, அதை இன்னொரு தடவை விவரமாய்ச் சொல்லு!''

''ஆமாம், யுவராஜா! ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் யுத்த களத்தில் அழிந்து போவார்கள். ஒருவராவது உயிரோடு திரும்பி வர மாட்டார்கள்!''

''உயிரோடு திரும்பி வர மாட்டார்களா? பின் உயிரில்லாமல் திரும்பி வருவார்களோ? ஹா ஹா...'' என்று மாரப்ப பூபதி உரக்கச் சிரித்தான். பிறகு, ''ஆமாம் ஆமாம்; நான் யுத்தத்தில் செத்துப் போனால் நிச்சயமாய்ப் பிசாசாகத் திரும்பி வருவேன்; திரும்பி வந்து வள்ளியைப் பிடித்துக்கொண்டு ஆட்டுவேன்!'' என்று கூறி மறுபடியும் பயங்கரமாகச் சிரித்தான்.

சமையலறையிலிருந்து இதைக் கேட்டுக்கொண்டிருந்த வள்ளி தன் இரண்டு கையையும் நெறித்து, ''உன் கழுத்தை இந்த மாதிரி நெறித்துக் கொல்லுவேன்!'' என்று முணுமுணுத்தாள். கொஞ்சம் காது மந்தமுள்ள கிழவி, ''என்ன சொல்லுகிறே, வள்ளி?'' என்று கேட்கவும், வள்ளி அவளுடைய வாயைப் பொத்தி, ''சும்மா இரு!'' என்றாள்.

''உள்ளே யார் பேசுகிறது?'' என்று கேட்டான் மாரப்ப பூபதி.

''யார் பேசுவார்கள்? என்னைப் பிடித்திருக்கிறதோ இல்லையோ, ஒரு கிழப் பிசாசு, அதுதான் தனக்குத்தானே பேசிக் கொண்டிருக்கும்!'' என்றான் கிழவன்.

''சரி, எனக்கு நேரமாச்சு; போகவேணும். என் கிரக பலன்களைப் பற்றி நீ சொன்னதெல்லாம் நிஜந்தானே ஆச்சாரி! பொய் சொல்லி ஏமாற்றியிருந்தாயோ...!''

''தங்களை ஏமாற்றி எனக்கு என்ன ஆக வேணும் யுவராஜா!''

மாரப்ப பூபதி எழுந்து நின்று சுற்று முற்றும் பார்த்தான். முற்றத்தில் அடுக்கி வைத்திருந்த வாள்களையும் வேல்களையும் கத்தி, கேடயங்களையும் பார்த்துவிட்டுச் சிரித்தான். ''ஆஹா! ரொம்ப முனைந்து வேலை செய்கிறாயாக்கும்! கத்தி! கேடயம்! வாள்! வேல்! இந்த வாழைப்பட்டைக் கத்திகளையும், புல் அரியும் அரிவாள்களையும் வைத்துக்கொண்டுதான் பார்த்திப மகாராஜா, பல்லவ சக்கரவர்த்தியை ஜயித்து விடப் போகிறார்? நல்ல வேடிக்கை! ஹா ஹா ஹா!'' என்று உரக்கச் சிரித்துக்கொண்டே ஒரு பக்கத்தில் அடுக்கி வைத்திருந்த வாள்களைக் காலால் உதைத்துத் தள்ளினான். அப்படியே வாசற்பக்கம் போனான்.

உலைக் களத்தில் கிளம்பும் அனற்பொறிகளைப் போல கிழவன் கண்களிலே தீப்பொறி பறந்தது.

6. போர் முரசு

வீட்டு வாசலிலிருந்து குதிரை கிளம்பிப் போன சப்தம் கேட்டதும் வள்ளி முற்றத்துக்கு வந்தாள். மாரப்ப பூபதி உதைத்துத் தள்ளிய கத்திகளில் ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு, "தாத்தா! இந்தக் கத்தி, கேடயம் எல்லாம் நீ செய்து என்ன பிரயோஜனம்? நமது மகாராஜாவைப் பற்றி அப்படிக் கேவலமாய்ப் பேசியவனைச் சும்மா தானே விட்டுவிட்டாய்?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

"ஏன் வள்ளி உனக்கு இவ்வளவு கோபம்! நீ சொன்னதைத்தானே நமது பழைய சேனாதிபதியும் சொன்னார். சண்டை வேண்டாம் என்று!" என்றான் கிழவன்.

"சேச்சே! நான் சண்டை வேண்டாமென்று சொன்னேனா? சண்டை எதற்காக என்று தெரியாமல்தானே கேட்டேன்!" என்று வள்ளி சொன்ன போது அவள் கண்களில் நீர் ததும்பிற்று.

"ஆமாம், வள்ளி! அதை நான் சொல்ல ஆரம்பித்தபோதுதான் இந்தப் பாவி வந்து விட்டான். வாதாபிச் சக்கரவர்த்தி புலிகேசி, தென்தேசத்தின் மீது படையெடுத்து வந்து பல அட்டூழியங்கள் செய்துவிட்டுத் திரும்பப் போனதைச் சொன்னேனல்லவா? அதற்குப் பழிக்குப் பழி வாங்குவதற்காக நரசிம்ம சக்கரவர்த்தி வெகுகாலம் ஆயத்தம் செய்துகொண்டிருந்தார். கடைசியில் ஆறு வருஷத்துக்கு முன்பு அவர் வாதாபியின் மேல் படையெடுத்துச் சென்றார். அப்போது நமது பார்த்திப மகாராஜாவையும் தமது படைகளுடன் வந்து சேர்ந்து கொள்ளும்படி ஓலை அனுப்பினார். அதற்குப் பார்த்திப மகாராஜா அப்படியே செய்வதாகவும், ஆனால், அதற்குப் பிரதியாக அன்றுமுதல் உறையூரிலிருந்து கப்பம் வாங்குவதை நிறுத்தி விட வேண்டுமென்றும், சோழ நாட்டின் புலிக்கொடிக்குச் சம மரியாதை கொடுக்க வேண்டுமென்றும் செய்தி அனுப்பினார். இதை நரசிம்ம சக்கரவர்த்தி கவனிக்கவேயில்லை. மறுஓலைகூட அனுப்பாமல் படை கிளப்பிப் போய்விட்டார். அன்று முதல் பார்த்திப மகாராஜாவும் காஞ்சிக்குக் கப்பம் அனுப்புவதை நிறுத்திவிட்டார். அது காரணமாகத்தான் யுத்தம் வந்திருக்கிறது வள்ளி! இப்போது நீயே சொல்லு. பார்த்திப மகாராஜா முன் வைத்த காலைப் பின் வைத்துச் சக்கரவர்த்தியிடம் சரணாகதி அடைந்து விடலாமா! நமது சிராப்பள்ளி மலையில் போட்ட புலிக்கொடியைத் தாழ்த்திப் பல்லவர்களின் எருதுக் கொடியை மறுபடியும் பறக்க விடலாமா? அந்த அவமானத்தைச் சகித்துக் கொண்டாவது இந்தச் சோழ தேசத்து மக்கள் எதற்காக உயிரை வைத்துக் கொண்டிருக்க வேண்டும்!"

"அந்த நியாயமெல்லாம் எனக்குத் தெரியாது, தாத்தா! நமது பார்த்திப மகாராஜா என்ன



செய்கிறாரோ, அதுதான் சரி. அவருக்கு விரோதமாய்ப் பேசுகிறவர்கள் எல்லாரும் பொல்லாத பாவிகள். அவர்கள் நரகத்துக்குத்தான் போவார்கள். இந்த மாரப்ப பூபதியை நீ சும்மா விட்டுவிட்டாயே என்று எனக்கு இருக்கிறது தாத்தா! நமது மகாராஜா எவ்வளவு நல்லவர் தெரியுமா...?''

''ஆமாம்; நமது மகாராஜா ரொம்ப நல்லவர்தான். ஆகையினால்தான் இந்தக் குலங்கெட்ட மாரப்பனுக்கு இவ்வளவு இடங்கொடுத்துத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடினார்...!''

''என்ன சொல்லுகிறாய், தாத்தா?''

''சரியாகத்தான் சொல்லுகிறேன். இந்த மாரப்ப பூபதி நமது மகாராஜாவின் சொந்தச் சகோதரன் அல்ல. பழைய மகாராஜா ஐம்பது வயதுக்கு மேல் சபலம் தட்டி யாரோ ஒரு மூதேவியைக் கல்யாணம் செய்து கொண்டார். ஊரில் யாருக்குமே அந்தக் கல்யாணம் பிடிக்கவில்லை. அந்த மூதேவியின் பிள்ளைதான் இந்த மாரப்பன். பழைய மகாராஜா செத்துப் போகும்போது பார்த்திபருக்குப் பிள்ளைக் குழந்தையில்லாவிட்டால் இவனுக்குப் பட்டத்தைக் கொடுக்க வேணுமென்று சொல்லிவிட்டுப் போனாராம். விக்கிரம இளவரசர் பிறக்கும் வரையில் இவன்தான் 'யுவராஜா'வாக விளங்கினான். பார்த்திப மகாராஜா எவ்வளவோ இவனிடம் அன்பு காட்டிக் கௌரவம் அளித்துச் சேனாதிபதிப் பதவியும் கொடுத்திருந்தார். இவனோ நன்றி கெட்ட பாதகனாயிருக்கிறான். குலத்தின் குணம் எங்கே போகும்?''

''இவனோடு உனக்கு என்னத்துக்காகச் சகவாசம் தாத்தா? இவனுக்கு நீ ஜோசியம் சொல்லுவது என்ன வேண்டிக் கிடந்தது?''

''உன்னால் ஏற்பட்ட சகவாசந்தான் வள்ளி!'' என்றான் கிழவன்.

வள்ளி திடுக்கிட்டு, ''என்னால் ஏற்பட்டதா? நன்றாயிருக்கிறதே கதை! என்றாள்.

''உன்னால் ஏற்பட்டதுதான், இத்தனை நாளும் உன்னிடம் சொல்லாமல் வைத்திருந்ததை இப்போது சொல்லப் போகிறேன் வள்ளி! காலம் ரொம்ப அபாயமான காலம். நமது மகாராஜாவுக்கு என்ன நேருமோ, ராஜ்யம் என்ன கதியடையுமோ, தெரியாது. இந்த மாரப்ப பூபதி யுத்தத்துக்குப் போக மாட்டான் என்று மட்டும் எனக்கு நிச்சயமாய்த் தெரியும். நீ இவன் விஷயத்தில் ரொம்ப எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.''

''என்ன தாத்தா, ரொம்பப் பயமுறுத்துகிறாய்! இந்தக் கரிமூஞ்சியிடம் எனக்கு என்ன பயம்?'' என்று வள்ளி கேட்டாள்.

''நான் சொல்கிறதைக் கொஞ்சம் கேள் அம்மா! ஒரு காலத்தில் இந்த மாரப்ப பூபதி தனக்கு உன்னைக் கட்டிக் கொடுக்க வேணுமென்று கேட்டுக் கொண்டிருந்தான்.

''அவன் தலையில் இடி விழ!'' என்றாள் வள்ளி.

''அவன் தலையிலே இடி விழவில்லையே, அம்மா! என் தலையிலே அல்லவா விழுந்தது! கிரக சஞ்சார ரீதியாக அப்போது நம் குடும்பத்துக்கு ஏதோ பெரிய விபத்து வரப் போகிறதென்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இந்த மாரப்ப பூபதி தன் ஆட்களை அழைத்துக் கொண்டு வந்து உன்னைத் தூக்கிக் கொண்டு போவதாக இருந்தான். இதுவும் எனக்குத் தெரிந்தது. நீயும் உன் தமையன்மார்களும் அப்போது வீட்டில் இருந்தால் ரத்தக் களரியாகுமென்று எண்ணித்தான் எல்லோரையும் அக்கரையில் நடந்த கல்யாணத்துக்குப் போங்கள் என்று அனுப்பினேன். யமன் நடு ஆற்றில் சூறாவளிக் காற்றாக வந்தான். உன் அண்ணன்மார் எல்லாரும் செத்துப் போனார்கள். சுவாமி உன்னை மட்டும் எனக்குக் கொடுத்தார்...''

"நான் யுத்தத்தில் செத்துப் போனால் நிச்சயமாய்



பிசாசாகத் திரும்பி வருவேன்!"

இப்படிச் சொல்லிவிட்டுக் கிழவன் பெருமூச்சு விட்டான். ஆகாயத்தைப் பார்த்து ஏதோ யோசனையில் ஆழ்ந்தான்.

வள்ளி, "இத்தனை நாளும் சொல்லவில்லையே, தாத்தா? இவன்தானா என் அண்ணன்மார்களுக்கெல்லாம் யமனாக வந்தவன்! அப்புறம் என்ன நடந்தது?" என்று கேட்டாள்.

"நீங்கள் எல்லோரும் படகேறிப் போன பிறகு நான் எதிர்பார்த்தபடியே இவன் தன் ஆட்களுடன் வந்தான். வீட்டில் நீ இல்லை என்று கண்டதும் தம், தம் என்று குதித்தான். அவனைச் சமாதானப்படுத்துவதற்காக நான் சோதிட சாஸ்திரத்தை உபயோகப்படுத்தினேன். 'நீ பெரிய சக்கரவர்த்தியின் மருமகன் ஆகப் போகிறாய், அப்பா! இந்த அற்ப ஆசைகளையெல்லாம் விட்டு விடு' என்று சொன்னேன். அது முதல் இவன் என்னவெல்லாமோ ஆகாசக் கோட்டைகள் கட்ட ஆரம்பித்து விட்டான். ஜோசியம் கேட்பதற்கு அடிக்கடி வந்து என் பிராணனை வாங்கிக்கொண்டிருக்கிறான்."

"இப்போதுதான் அவன் என்னைப் பற்றிப் பேசியதன் அர்த்தம் புரிகிறது, தாத்தா! ஒடக்காரர் யுத்தத்துக்குப் போய் விட்டால் நான் என்ன செய்வேன்! நீதான் என்னைக் காப்பாற்ற வேணும்" என்று சொல்லிக் கிழவனுடைய கையை வள்ளி கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அவளுடைய உடம்பு நடுங்கிற்று.

கிழவன், "பைத்தியமே! ஏன் இப்படி நடுங்குகிறாய்? பொன்னன் சண்டைக்குப் போக மாட்டான். அவனை மகாராஜா அழைத்துக் கொண்டு போக மாட்டார். என் குடும்பத்துக்கு நேர்ந்த பெரிய விபத்து மகாராஜாவுக்குத் தெரியும். என் குலத்தை வளர்க்க நீ ஒருத்திதான் இருக்கிறாய் என்றும் தெரியும். ஆகையால்தான் பொன்னனைச் சண்டைக்கு வர வேண்டாம் என்றார். நிச்சயமாக அழைத்துப் போக மாட்டார்!" என்றான்.

அச் சமயம் வாசலில் முரசடிக்கும் ஓசை கேட்டது. பின்வருமாறு கூவும் குரலும் கேட்டது: "வெற்றிவேல்! வீரவேல்! யுத்தம் வருகுது! யுத்தம் வருகுது! சோழ தேசத்தின் மானத்தைக் காக்க யுத்தம் வருகுது! படையில் சேர்வதற்கு மீசை முளைத்த ஆண் பிள்ளைகள் எல்லோரும் வரலாம். நொண்டி, குருடு, சப்பாணி, ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை இவர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் வரலாம். உடம்பிலே சுத்த ரத்தம் ஓடுகிறவர்கள் எல்லாரும் வரலாம். வெற்றிவேல்! வீரவேல்!" இதைத் தொடர்ந்து முரசின் சப்தம் ஊர் அதிரும்

படியாக எழுந்தது.

இந்தப் போர் முழக்கத்தைக் கேட்ட வள்ளியும் கிழவனும் தெருப் பக்கம் சென்றார்கள். முரசு யானையும் அதைச் சுற்றி சில வீரர்களும் போய்க் கொண்டிருந்தார்கள். முரசும் முரசு அடித்தவனும் அறைகூவியவனும் யானைமேல் இருந்தனர். இந்த ஊர்வலம் தெருக்கோடி போகும்வரையில் பாட்டனும் பேத்தியும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

ஊர்வலம் தெருக்கோடியில் திரும்பியதும் கிழவன் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டுச் சொன்னான். "வள்ளி, உன்னைப் பொன்னனும் பகவானும் காப்பாற்றுவார்கள்! இந்த யுத்தத்தில் சேர்ந்து வீர சொர்க்கம் அடைய என் குடும்பத்திலே வேறு யாரும் இல்லை, நான்தான் போகப் போகிறேன்" என்றான்.

தெற்கு வானத்தில் திடீரென்று ஒரு நட்சத்திரம் நிலை பெயர்ந்தது. ஒரு வினாடி நேரம் அது பளீரென்று ஒளிவீசி வான வெளியில் அதிவேகமாய்ப் பிரயாணம் செய்தது. அடுத்த வினாடி மாயமாய் மறைந்தது.



'சோழ நாடு இந்த அவமானத்தை எத்தனை நாளைக்குச் சகித்துக் கொண்டிருப்பது!'

இதைப் பார்த்த வள்ளிக்கு உடம்பு சிலிர்த்தது.

அதே சமயத்தில் அதே காட்சியைப் பொன்னனும் பார்த்து உடல் சிலிர்த்தான்.

அப்போது அவன் உறையூர் ராஜ வீதிகளின் வழியாகப் போய்க் கொண்டிருந்தான்.

பௌர்ணமிக்கு இன்னும் நாலு தினங்கள்தான் இருந்தன. சுக்கில பட்சத்துச் சந்திரன் வானவெளியில் ராஜ ஹம்சத்தைப் போல சஞ்சரித்து வெள்ளி நிலவைப் பொழிந்து கொண்டிருந்தான். உறையூரின் மாடமாளிகைகளெல்லாம் அந்த வெண்ணிலவில் ஒளியும் மோகனமும் பெற்று சொப்பன லோகம் போல் காட்சியளித்தன.

"ஓடம் வண்டியில் ஏறும், வண்டி ஓடத்தில் ஏறும்" என்று சொல்லுவதுண்டல்லவா? இந்தக் காலத்தில் திருச்சிராப்பள்ளி பெரிய நகரமாயும் உறையூர் சிற்றூராயுமிருக்கிறது. அந்த நாளிலோ உறையூர்தான் தலைநகரம். திருச்சிராப்பள்ளி சிற்றூர். இரண்டு ஊர்களுக்கும் நடுவில் இடைவெளியில்லாமல் கடை வீதிகளும், பலவகைத் தொழில் செய்யும் மக்கள் வாழ்ந்த தெருக்களும் இருந்தன. சிராப்பள்ளி மலையிலிருந்து மகாராஜா இறங்கி வந்து சேர்வதற்கு முன்னால் பொன்னன் அரண்மனை வாசலை அடைந்துவிட விரும்பினான்.

மகாராஜா, சுவாமி தரிசனம் செய்துவிட்டு மலை உச்சியிலிருந்து இறங்கி வரும்போது வழியில் நின்று இளவரசருக்கு என்னத்தைக் காட்டியிருப்பார் என்பது அவனுக்கு ஒருவாறு தெரிந்திருந்தது. அங்கேதான் சோழ வம்சத்தின் அவமானச் சின்னங்கள் இருந்தன. பார்த்திப மகாராஜாவின் தந்தை மகேந்திர வர்ம சக்கரவர்த்தியின் முன்னால், வாளையும் வில்லையும் வைத்து அடி பணிந்து, விதவிதமான இரத்தினங்களையும் ஆபரணங்களையும் காணிக்கையாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளும் காட்சி அங்கே சித்திரிக்கப்பட்டிருந்தது. அதை நினைக்கும்போதே பொன்னனுக்கு இரத்தம் கொதித்தது. "சோழ நாடு இந்த அவமானத்தை எத்தனை நாளைக்குச் சகித்துக் கொண்டிருப்பது? யுத்த களத்தில் பல்லவர்களின் இரத்தத்தைப் பெருக்கி இந்த அவமானத்தைத் துடைத்துக் கொள்ள வேண்டாமா?" என்று எத்தனையோ முறை பொன்னன் சிந்தித்ததுண்டு. அப்படிப்பட்ட சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டிருக்கும்போது, தான் மட்டும் யுத்தத்துக்குப் போகாமல் வீட்டில் முக்காடிட்டுக் கொண்டிருப்பதா? இவ்விதம் யோசித்துக் கொண்டே பொன்னன் விரைவாக நடந்து சென்றான். **(தொடரும்)**

பக்தி

அருள்வாக்கு

எப்போது பார்த்தாலும் காரியம் செய்துகொண்டிருப்பதே நமக்கு இயல்பாகிவிட்டது. உடம்பால் காரியம் செய்யாதபோதும், வாக்கால் பேசி காரியம் செய்யாதபோதும்கூட, நம் மனசு சதா எதையாவது நினைத்துக்கொண்டே இருக்கிறது. இதுவும் காரியம்தான். இந்தக் காரியம் நின்றால்தான், அதாவது மனசில் எண்ணமே தோன்றாமல் இருந்தால்தான், எந்தக் காரியமும் இல்லாத பிரம்ம நிலையை அடைய முடியும். ஆனால், இந்த மனசால் ஒரு கணம்கூட எதையும் நினைக்காமல் இருக்கமுடியவில்லையே! இதை எப்படி நிறுத்தப் பழக்குவது?

இந்தப் பழக்கத்துக்கு வழிதான் பக்தி. காரியமில்லாத பிரம்மத்தை நாமும் காரியமில்லாமல் இருக்கிற நிலையில்தான் அனுபவிக்க முடியும். அது முடியவில்லையா? அதே பிரம்மம் சகல பிரபஞ்சங்களையும் நடத்தி வைக்கிற - அதாவது, காரியத்தைச் செய்கிற ஈஸ்வரனாக இருக்கிறதல்லவா? இந்த ஈஸ்வரனையே சதா சிந்தனை பண்ணு. காரியத்தை எல்லாம் அதற்கே திருப்பு. உடம்பால் நமஸ்காரம், பூஜை, வாக்கால் ஸ்தோத்திரம், மனசால் தியானம்... என்று சகல காரியங்களையும் ஈசுவரனிடம் செலுத்து. அவற்றை ஈஸ்வரன் அங்கீகரித்து, உன்னை பிரம்மஞானத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பான். இப்படிப்பட்ட இடையறாத ஈஸ்வர சிந்தனைக்குத்தான் பக்தி என்று பெயர். இதில் அன்பு ரொம்ப முக்கியம். அன்போடு அவனை நினைப்பதே பக்தி.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்**



> "இடையறாத ஈஸ்வர சிந்தனையே பக்தி. இதில் அன்பு ரொம்ப முக்கியம்!"



கவிதையால்

ராகுல் என்ற சிறுவனுக்கு மாடு கழுவுவதுதான் வேலை. மாட்டை விற்கும்போது, மாட்டின்கூடவே அவனும் புது எஜமான் வீட்டுக்குப் போய்விடுவான். அந்தப் பையன், திருவள்ளூர் மாவட்டம் கசுவா கிராமத்துக்கு வந்தபோது, அந்தக் கிராமத்தின் மற்ற பிள்ளைகள்போல அவனுக்கும் படிக்கும் ஆர்வம் வந்தது. ஆனால், அவனுடைய எஜமானருக்கு அது பிடிக்கவில்லை. பள்ளிக்கூடம் நடத்தி வந்த முரளீதரனை, "பையனைக் கடத்திக் கொண்டு போய்விட்டதாக போலிசில் புகார் கொடுப்பேன்" என்று மிரட்டினார் முரளீதரனோ, "வாருங்கள் தாராளமாகப் போகலாம். இந்தப் பையன் குழந்தைத் தொழிலாளியாக மாடு கழுவ வேண்டுமா, படிக்க வேண்டுமா? என்பதை அவர்களே தீர்மானிக்கட்டும்" என்றவுடன், கடைசியில், அவரே சம்மதித்தார். 'சேவாலயா'வில் பள்ளிக்கூடப் படிப்பை முடித்த ராகுல், கம்ப்யூட்டர் டிப்ளமாவும் முடித்துவிட்டு, ஒரு சாஃப்ட்வேர் கம்பெனியில் வேலை பார்க்கிறான். இப்படிப்பட்ட பின்னணிகளைக் கொண்டவர்கள் சேவாலயாவில் அதிகம்.

1988 ஆம் ஆண்டு, ஐந்து குழந்தைகளுடன் ஒரு சிறு வாடகை வீட்டில் ஆரம்பித்த சேவாலயா, இன்று உயர்நிலைப் பள்ளி, ஆதரவற்ற குழந்தைகள் இல்லம், முதியோர் இல்லம், வேலை வாய்ப்பு பயிற்சி மையம்... என ஆலமரமாக வளர்ச்சி அடைந்து பிரமிக்க வைக்கிறது. யு.டி.ஐ நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த முரளீதரனின் மனைவி தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு, சேவாலயாவின் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்.

"இப்படி ஓர் அமைப்பை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?" என முரளீதரனிடம் கேட்டால், பாரதியார் கவிதைகள்தான் காரணம் என்கிறார். அவரது சரஸ்வதி பற்றிய, வெள்ளைத் தாமரை பூவிலிருப்பாள் கவிதையைப் படிக்க நேர்ந்தது. பூஜை செய்யும் சரஸ்வதி பூஜையைவிட பாரதியார் குறிப்பிட்ட பள்ளியில்லாத ஊரில் பள்ளி ஆரம்பிப்பதே உண்மையான சரஸ்வதி பூஜை என புரிந்துகொண்டேன்.

இஞ்சினியரிங் படிப்பு முடித்துவிட்டு, பெங்களூருக்கு வேலைக்குப் போனபோது அங்கே, தமிழர்கள் வசிக்கும் குடிசைப் பகுதிகளுக்குச் சென்று படிப்புக்கு உதவிகள் செய்தேன். ஆறுமாத காலம் சம்பளத்திலிருந்து சேமித்து, கணிசமான ஒரு தொகை சேர்ந்ததும் ஒரு வாடகை வீட்டில்,

விளைந்த சேவாலயா!

ஐந்தே ஐந்து குழந்தைகளுடன் சேவாலயாவை ஆரம்பித்தேன்.

திருவள்ளூர் மாவட்டம் முழுவதும் செங்கல் சூளைகள் ஏராளம். எனவே, பல ஊர்களிலும் பள்ளி வயது பிள்ளைகளைச் செங்கல் சூளையில் வேலைக்கு அனுப்பி வைத்து விடுவார்கள். அலுவலக விடுமுறை நாட்களில் வீடுவீடாகச் சென்று பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைக்கும்படி கேட்பேன். 'புள்ளைங்க படிக்கப் போயிட்டா, வருமானம் போயிடுமே!', படிக்க வெச்சா நிறைய செலவாகுமே? என்றெல்லாம் சொன்னார்கள். 'எல்லாமே



இலவசமாத் தர்றோம். உங்க குழந்தைய படிக்க மட்டும் அனுப்புங்க' என்றபோது, 'இப்ப இப்படித்தான் சொல்வீங்க! அப்புறமா பத்து ரூபா கொண்டா! இருபதைக் கொண்டான்னு கேட்டா நாங்க எங்க போகறது?' என்று கேட்டார்கள். ஆனால், இன்றைக்கு கசுவா கிராமத்தைச் சுற்றி இருக்கும் பதினைந்து கிராமங்களில் குழந்தைத் தொழிலாளர்கள் என்பதே இல்லை என்று பெருமையோடு சொல்கிறார் முரளீதரன்.

"**நா**ங்கள் பள்ளிக்கூடம் ஆரம்பித்து நடத்தினாலும், அதற்கு அரசு அங்கீகாரம் வாங்க நான்கு வருடங்கள் போராட வேண்டியிருந்தது. அப்போதைய சபாநாயகர் பழனிவேல்ராஜனைச் சந்தித்து எங்கள் பிரச்னையைச் சொன்னோம். எங்கள் நோக்கத்தைப் புரிந்துகொண்டு, உடனடியாக அங்கீகாரம் கிடைக்க வழி செய்தார். கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி, பிளஸ் டுவில் 90% தேர்ச்சி என சாதித்து வருகிறோம்.



சேவாலயாவின் முப்பத்து இரண்டு வகுப்பறைகள். நான்கு ஆய்வுக் கூடங்கள், நூலகம், கம்ப்யூட்டர் மையம் ஆகியவை கொண்ட பள்ளிக்கூடத்தைக் கட்டி முடிக்க ஒரு கோடிக்கு மேல் செலவானது. பலரையும் சந்தித்துப் பேசி, எங்கள் பணியைப் பற்றி எடுத்துச் சொல்லி, நன்கொடை பெற்றுக் கொண்டு ஒவ்வொரு வகுப்பறையாகக் கட்டி முடித்தோம். மேலும் ஆதரவற்றோர் இல்லத்தில் இன்று நூற்று அறுபது குழந்தைகள் உள்ளனர். ஒரு முதியோர் இல்லமும் நடத்தி வருகிறோம். இங்கே படித்து நல்ல மார்க் வாங்கிய மாணவர்கள் இருபதுக்கும் மேற்பட்டவர்கள் இஞ்ஜினியரிங் கல்லூரிகளிலும், விவசாயக் கல்லூரிகளிலும், இதர கல்லூரிகளிலும் ஹாஸ்டலில் சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் மாணவர்கள் நாலைந்து பேருக்கு அண்ணா பல் கலைக் கழகத்தில் இவ்வாண்டு அட்மிஷன் கிடைத்திருக்கிறது. அவர்கள் படிப்புக்கும் பணம் தயார் பண்ண வேண்டும்'' என்று பெருமையுடன் சொல்லும் முரளீதரனின் ஆதர்ஷ புருஷர்கள்: காந்திஜி, விவேகானந்தர், பாரதியார்.

சந்திப்பு: **எஸ்.சந்திரமௌலி**



கௌரவம் தந்த கல்கி

''சூடைக்காரியாய் ஊர் ஊராய் வீதிகளில் அலைந்து வியாபாரம் செய்து என்னைப் படிக்க வைத்தவர் என் அம்மா. காமராஜரின் மதிய உணவுக்காகப் பள்ளிக் கூடம் போய் கல்விக்கண் திறந்துகொண்டவர்களில் நானும் ஒருவன்'' என்கிறார் சோ. சுப்புராஜ். அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 2007-ல் முதல் பரிசு பெற்ற 'துரத்தும் நிழல்' கதைக்குச் சொந்தக்காரர். பி.இ. பட்டதாரியான இவருடைய சொந்த ஊர் விருதுநகர் மாவட்டம், கடம்பன்குளம் கிராமம். தற்போது சென்னைவாசி.

''சிறுவயதிலேயே நாடகங்கள் போட ஆரம்பித்து, எழுதுகிற ஆர்வம் தீவிரமாகி, இன்றைக்குப் பல பத்திரிகைகளில் பரிசுபெறும் அளவுக்கு அது வளர்ந்து நிற்கிறது'' என்று சொல்லும் சுப்புராஜ், கல்கி பரிசை தமக்குக் கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகக் கருதுகிறார்.

இரண்டாம் பரிசுபெற்ற 'அப்பாவுடன் ஒரு நாள்...', சிறுகதையை எழுதியவர் வடுவூர் சிவ.முரளி. ''கல்கி எனக்குச் சிறப்பான அங்கீகாரத்தை அளித்திருக்கிறது. இது எனது எழுத்தார்வத்தை ஊக்குவிக்கும் உற்சாக டானிக். இதன் மூலம் வளரும் படைப்பாளிகளுக்கு வாசற்படியாகத் திகழ்கிறது கல்கி'' என்னும் முரளி, திருச்சி மாவட்டத்தில் தமிழாசிரியராகப் பணிபுரிகிறார்.

மூன்றாம் பரிசுபெற்ற சிறுகதைப் படைப்பான 'புனிதப் பயணம்'. ஏ.ஏ.ஹெச். கே.கோரியின் விலாசத்தை இன்னும் விரிவு படுத்தி இருக்கிறது. முன்னணி இதழ்கள் அனைத்திலும் தொடர்ந்து எழுதி வருபவர்.

''மதநல்லிணக்கம் என் மனதோடு ஒன்றியது. அதை அவ்வப்போது எனது படைப்புகள் மூலம் வெளிக்கொணரும் போது மகிழ்ச்சியடைகிறேன். அது பரிசுபெறும்போது நெகிழ்ச்சியடைகிறேன்'' என்று கூறும் கோரி, தேவ கௌடா தலைமையில் இயங்கும் மதச்சார்பற்ற ஜனதாதளம் கட்சியின் சிறுபான்மைப் பிரிவின் மாநிலத் தலைவராக உள்ளார். அண்மையில்தான் இவரது சிறுகதைத் தொகுப்பு வெளியாகி உள்ளது.

தொகுப்பு: **அனன்யா**

* சோ.சுப்புராஜ்



* வடுவூர் சிவ.முரளி



* ஏ.ஏ.ஹெச்.கே.கோரி



பேய் பிடித்திருக்கிறதா?



எந்த ஒரு விஷயத்திலும் பைத்தியமாக இருப்பவனை குறிக்க 'பேயன்' என்ற சொல் பழகி வந்தது. பேய்ப் பிடித்தவர்கள்தான் நடுராத்திரியில் எழுந்து குளிப்பார்கள். சரசரவென்று எழுதுவார்கள். பௌர்ணமியில் கடற்கரைக்குச் சென்று உரக்கப் பாடுவார்கள். இப்படி மற்றொரு அசாதாரண சக்தி ஒருவனை ஆட்கொண்டால் அவனை பேயன் என்று சொல்லலாம். இப்போதுகூட இந்த வார்த்தை, 'ஃபார்முக்கு வந்துட்டா சேவாக் பேயா அடிப்பான்' போன்ற பிரயோகங்களில் அன்றாடம் வருகிறது. குலசேகர ஆழ்வார் தன் பெருமாள் திருமொழியில் பேயர்களைப் பற்றிப் பேசுகிறார்.

பேயரே எனக்கு யாவரும் யானும்ஓர்
பேயனே எவர்க்கும் இது பேசிஎன்
ஆயனே! அரங்கா! என்றழைக்கின்றேன்.
பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே.

உலகப் பற்று உடையவர்கள் எல்லாம் எனக்குப் பேயர் போலத் தோன்றுகிறார்கள். நானும் அவர்களுக்கு ஒரு பேயன் போலத் தோன்றுவேன். இதைப் பற்றிப் பேசிப் பயனில்லை. 'ரங்கா' என்று அழைக்கிறேன். என் பெருமாளுக்கு நான் பித்தனாகிவிட்டேன்.

மிகுந்த பக்தியும் ஒரு பித்துப் பிடித்த நிலைதான். இதை Trance என்று சொல்வார்கள். ஒரு கட்டத்தில் தன்னையும் தன் சூழ்நிலையையும் மறக்கச் செய்யும்.

நம் வாழ்வில் எப்போதாவது இந்த நிலை ஏற்படலாம். ஒருகணம் நம்மைச் சுற்றியுள்ளவை அனைத்தையும் மறந்துபோய் பகவானுடன் ஐக்கியமடையச் செய்யும். ஒருகணம்தான். மறுகணம் பையைத் தொட்டுப் பார்த்துக்கொண்டு பஸ் பிடிக்க ஓடுவோம்.

○ சுஜாதா

சிதறினால் சிதையும்



“என்னதான் கஷ்டப்பட்டு உழைச்சாலும் முன்னேற்றமே இல்லாத வேலைன்னு இந்த உலகத்துல சிலது இருக்குமில்லியா... அதுல தலையாயது லைட்மேன் தொழில்'' என்று மேகநாதன் சொல்லும்போதே சலிப்பும் அலுப்பும் ஒரு சேர அவரது முகத்தில் மாறி மாறி ததும்புகின்றன.

''நான் இந்தத் தொழிலுக்கு வந்து பதினேழு வருஷமாச்சு. காஞ்சிபுரம் தான் என் சொந்த ஊரு. சென்னைக்குப் பிழைக்க வந்தேன். படிக்கணும்னு கனவு இருந்துச்சு. ஆனா, பணம் இல்ல. கல்வியைத் தூக்கிக் கடாசிட்டு வேலை செய்ய ஆரம்பிச்சுட்டேன். என்னென்னமோ செஞ்சேன். எதுவும் நிலையானதா எனக்குத் தெரியல. அப்பத்தான் ஒரு நண்பர் இந்தத் தொழிலைப் பத்திச் சொன்னாரு. எம் மாமா ஆயிரத்து ஐந்நூறு ரூபா கொடுத்து யூனியன் கார்டு எடுத்துக் கொடுத்தாரு... த்தோ... போயிட்டிருக்கு வாழ்க்கை'' என்ற மேகநாதன் லைட்மேன் தொழில் குறித்து விவரிக்க ஆரம்பித்தார்...

வாழ்க்கை!



"யூனியன்ல மெம்பரா இருந்தாத்தான் வேலை. தனிப்பட்ட சினிமா கம்பெனிகள் சிலது இருக்கு. அவங்க படப்பிடிப்பு சாதனங்களை வாடகைக்கு விடுவாங்க. அந்த கம்பெனிகள்லதான் நாங்க வேலைக்கு இருப்போம். படப்பிடிப்புச் சாதனங்களோடு எங்களையும் ஷூட்டிங்குக்கு அனுப்புவாங்க. ஆனா, எங்களுக்குச் சம்பளத்தை கம்பெனி தராது. ப்ரொடியூசர்தான் தருவார்.

கேமராமேனை ஒட்டிதான் எங்க வேலை இருக்கும். ஷூட்டிங் தொடங்கறதுக்கு முன்னாடியே வந்து அன்னைக்கு எடுக்கப்போற காட்சிகளை அலசும் கேமராமேன், எங்களுக்கும் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் தருவாரு. எப்படிப்பட்ட லைட் வேணும், எங்க வேணும், எந்தவிதமா வேணும்னு எல்லாத்தையும் சொல்லிடுவார். அவர் கேக்கறா மாதிரி தர்றதுலதான் எங்க சவாலே இருக்கு. பலசமயம் ரிஸ்க்கான, லைட் கட்ட இடமே இல்லாத இடத்துல லைட் வேணும்னு சொல்லுவாங்க. அவங்களைத் தப்பு சொல்ல முடியாது. படம் நல்லா வரணும்னுதானே அவங்க மெனக்கெடுறாங்க. அதனால நாங்களும் உயிரைப் பணயம், வச்சி, எப்படியாவது, கேமராமேன் கேக்குற விதத்துல லைட்டை செட் பண்ணிக் கொடுப்போம். பல நேரம் எங்களோட கடினமான வேலைக்குப் பாராட்டு கிடைக்கும். சில நேரங்கள்ல எதுவுமே இருக்காது. எல்லாத்தையும் கடந்து போய்க்கிட்டே இருக்கறதுதான் லைட்மேன் வேலை.

ஒரு லைட்மேனுக்கு முதல் தேவை உடல் ஆரோக்யம். அது இல்லன்னா இந்தத் தொழிலுக்கே லாயக்கில்ல. ரொம்ப வெயிட்டான லைட்டைத் தூக்கிட்டு அங்கயும் இங்கயும் அலையணும்னா சும்மாவா! நல்லா சாப்பிடணும். அதனாலதான் யூனிட்ல யாருக்கு நல்ல சாப்பாடு கிடைக்குதோ இல்லையோ, லைட்மேன்களுக்குக் கறி சோறுதான். எல்லோரும் எங்ககிட்ட கனிவாத்தான் நடந்துக்குவாங்க. அடிமனசுல கஷ்டவாளிங்கன்னு தோணும் போல. அதையும் மீறி எப்பவாச்சும் ஒரு சிலர் எக்குத்தப்பா நடக்கலாம். அதுவும் வேலை சரியா நடக்கலைன்னாதான். சரின்னு நாங்களும் பொறுத்துப் போவோம்.

லைட் தூக்கிட்டுப் போகும்போது கவனம் வேணும். சிதறினா நம்ம வாழ்க்கையே சிதைஞ்சிடும். கொஞ்சம் அசங்குனாலும் தடுமாறி விழுந்து லைட்டும் போயிடும். நாமளும் அவ்ளோதான். இன்னொரு அபாயம் கரெண்ட் ஷாக். அதிகமான வாட்ஸோட கரண்ட் பாயும்போது ரொம்ப ரொம்ப உஷாரா, சிந்தனையை ஒரு புள்ளில குவிச்சு வேலை செய்யணும். எனக்குத் தெரிஞ்ச பல பேர் ஷாக்கடிச்சி, அவதிப்பட்டிருக்காங்க. எனக்கே பல தடவை அடிச்சிருக்கு. ஆனா, எல்லா பாதுகாப்பு ஏற்பாட்டோடதான் ஷூட்டிங் நடக்கும்ங்கறதையும் இங்கே சொல்லியாகணும்.

கேமராமேன் மட்டும்தான் எங்களைக் கட்டுப்படுத்துவார். வேற யார்கூடவும் எங்களுக்குத் தொடர்பு இல்ல. கேமராமேனுக்கும் நமக்கும் நல்லா சின்க் ஆயிட்டா, பணி புரியறது ரொம்ப ஈஸியாயிடும்.

ஆனா மத்த டைரக்ஷன்,



வைரவிழா சிந்தனை


தலைவரான தொண்டர்

விடுதலை இயக்கத்தையொட்டி தமிழ்நாட்டில் நடந்த எல்லா போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர் ம.பொ.சி. என அறியப்படும் ம.பொ.சிவஞானம். மிக எளிய குடும்பத்தில் பிறந்தவர். தமிழ்நாடு காங்கிரஸில் சாதாரணத் தொண்டனாகச் சேர்ந்து, அக் கட்சியின் தலைவர் பதவி வரை உயர்ந்தவர்.

தனிநபர் சத்தியாகிரஹத்தின்போது தீரர் சத்தியமூர்த்தியைக் கைது செய்து சிறைக்கு அழைத்துப் போக இருந்தது காவல்துறை. அச்சமயம் மூன்று பேரிடம் தான் விடைபெற்றுப் போனார் சத்தியமூர்த்தி. மகள் லட்சுமியை தைரியமாக இருக்கும்படி கூறினார். சீடர் காமராஜரிடம் முக்கிய விஷயங்களைத் தெரிவித்தார். ம.பொ.சியை அழைத்து தமிழ்நாடு காங்கிரஸை கவனமாக வழிநடத்தும்படி கூறிவிட்டு போலீஸ் வேனில் ஏறினார்!

'விடுதலைப் போரில் தமிழகம்' என்ற ம.பொ.சி.யின் வரலாறு நூல் சாதனை படைத்த அரிய தொகுப்பு.





ஒளிப்பதிவுத் துறை மாதிரி லைட்மேன் யூனிட்ல முன்னேற்றம் இருக்காது. ஒருத்தன் லைட்மேனா வாழ்க்கையைத் தொடங்கினா கடைசிவரை லைட்மேன்தான். என்ன, சீனியாரிட்டியைப் பொறுத்து சம்பளம் கொஞ்சம் கூடும். அதனாலதானோ என்னவோ, பலர் இந்த ஃபீல்டுக்கு வர்றதில்ல. வேற எந்தத் தொழிலும் தெரியாம, பிழைச்சா போதும்னு வந்தவங்கதான் எங்கள்ல அதிகம்.

சில பேர் எங்கிட்ட கேப்பாங்க, 'என்ன, உங்க பசங்களையும் சினிமாலதான் இறக்குவீங்களா?'ன்னு நான் சிரிச்சுக்கிட்டே அங்கேர்ந்து நகர்ந்துடுவேன். நானே வந்து செக்கு மாட்டு வாழ்க்கை வாழ்ந்துட்டிருக்கும்போது அவங்களும் வந்து கஷ்டப் படணுமா! இன்னொன்னு சினிமாதான் அவங்க விருப்பம்னா, லைட்மேன் தொழில் மட்டும் வேணான்னுதான் சொல்வேன்.''



முன்னெல்லாம் படிப்பு வாசனை இல்லாம இருந்தா கூட பரவால்லைன்னு உடம்புத் திறனை மட்டும் மையமா வச்சு லைட்மேன் ஃபீல்டுக்கு ஆட்கள் வந்தாங்க. ஆனா இன்னைக்கு நிலைமை மாறிடுச்சு. குறைஞ்சபட்சம் பத்தாவது படிச்சிருக்கணும். நாளுக்கு நாள் புதுப் புது லைட்டுங்க வருது. பேரைப் படிக்கத் தெரியணும். இளைஞர்களா வர்ற டைரக்டர், கேமராமேனுங்ககிட்ட பழகத் தெரியணும் இல்லையா, அதுக்குத்தான்.

என்னதான் எதிர்காலம் இல்லாம இருந்தாலும் எங்களை வாழ வைச்சு, இன்னைக்குக் குடும்பத்துக்கு மூணு வேளை சாப்பாடு போட வச்சிருக்குன்னா அதுக்குக் காரணமும் இந்த லைட்மேன் உத்யோகம்தான். அதை மறுக்கறதுக்கில்லை. ஆயிரம்தான் அடி மனகல வருத்தம் இருந்தாலும் தொழில்தாங்க எங்களுக்குத் தெய்வம். குத்தம் குறை இருந்தாலும் பொண்டாட்டிகூட கடைசிவரை குடும்பம் நடத்தறதில்லையா... அது போலதாங்க!''- முத்தாய்ப்பாய் முடிக்கிறார் மேகநாதன்.

சந்திப்பு: **மு.மாறன்**
படங்கள்:
பொள்ளாச்சி சுந்தரம்

இது வாரிசுங்க ஹீரோவாகற காலம். டைரக்டர் பி.வாசுவோட மகன் ஷக்தி. அதாங்க சின்னதம்பி படத்துல சின்ன வயசு பிரபுவா நடிச்சாரே... அவருதான் கதாநாயகனா அறிமுகமாகியிருக்காரு. காதல்தான் கதைக் களம். லவ் பண்ணுன பொண்ணுக்கு வேறொரு இடத்தில் நிச்சயமாக, அவ வீட்டுக்கே போய் அவளை விரும்பி மணக்கறதை மணக்க மணக்க சொல்லியிருக்காங்க. அமுல் பேபி மாதிரி அழகா இருக்காரு ஷக்தி. ஹீரோவுக்கு ஏத்த சண்டை, பாடல், நடிப்பு எல்லாமே நல்லாவே வருது. ரவுடி வீட்லயே புகுந்து ரவுசு பண்ணும்போது ரசிக்க வைக்கிறார். ஒவ்வொருமுறை அவர் அதிரடி பண்ணி காதலிக்கும்போதும் நமக்குக் கதி கலங்குது. ஆனா, சீரியஸான சீனைக்கூட ரொம்ப கேஷுவலா பண்றது காட்சியோட முக்கியத்துவத்தைக் குறைச்சுடுது. சமயங்கள்ல அதுவே 'ஓவரா பண்றாரோ'ன்னு தோண வெச்சிடுது. மொத்தத்துல, இன்னும் டேக்குக்கு ரெடியாகாத ஹீரோவா தோன்றார்.

புதுமுகம் கௌரி, ஷக்திக்கு அக்கா மாதிரி இருக்காங்க. முகத்துல எக்ஸ்பிரஷனே இல்லே. ஹீரோ எல்கேஜின்னா நாயகி ப்ரீ ஸ்கூல்!

ஆனா, ராஜ்கிரண் பாத்திரம் படத்துக்கு மெகா பலம். கம்பீர நேர்த்தி அவர் வர்ற காட்சியெங்கும் விரவிக் கிடக்குது. தப்பு செய்றவங்க தண்டிக்கறதும், நியாயத்துக்குப் பரிஞ்சு காதலுக்கு மரியாதை செய்றதும் கலகச்சிதம். ககன்யாவும் சோடை போகலே. நாசர் நறுக்குத் தெரிப்பு. கிளைமாக்ஸ் கெட்டப்ல வந்து வடிவேலு பண்ற அலப்பறை ஆரவார அழகு.

ஆகாஷ் அசோக்குமாரோட ஒளிப்பதிவுல மும்பை ரம்யமா மனசுல பதியுது. யுவன்ஷங்கர் ராஜா இசையில குத்தும் சத்தமுமா பாடல்கள் பவனி வருது. காதல் அரும்பும் விதம் ரொம்ப ஓல்டு வாசு சார்! முதல் பாதி நத்தை ரெயில்னா, ரெண்டாவது பாதி ஷதாப்தி. காதலுக்கு இடைவேளை போடுறதுக்கு முன்னாடி கத்திரியப் போட்டிருந்தீங்கன்னா, தொடாமலே மலர்ந்திருக்கும் பூ!

– சித்ரா

தொட்டால் பூ மலரும்



இரக்கம் கதவைத் திறக்கும்போது காதல் சந்நிதானத்தைப் பிடித்து விடுகிறது. - புல்லர் லிட்டன்

காதல் சன்னிதானம்!

ஆரம்பமாகிவிட்டது, 'ப்ச்' என்று அலுத்துக்கொண்டான் ரகு.

பக்கத்து வீட்டிலிருந்து வந்த வசவு வார்த்தைகள்தான் ரகுவை இப்படி நினைக்க வைத்தன.

ரகு இந்த வீட்டுக்குக் குடிவந்து ஒரு மாதம்தான் ஆகிறது. குடிவந்த மறுநாளே பக்கத்து வீட்டில் உருண்ட பாத்திர சத்தமும், திட்டுகளும் காதில் விழ, அதிர்ந்து போனான்.

இதில் இன்னொரு வேடிக்கை! பெண் குரல் மட்டும் திட்டும்; ஓலமிடும். ஆண் குரல் ''ப்ளீஸ்... ப்ளீஸ்...'' என்று மட்டும் சொல்லும்.

சண்டை முடிய கால் மணி நேரமாகும். பிறகு, கதவைத் திறந்து, வாசலுக்கு வந்து நிற்பான். பக்கத்து வீட்டு சரவணன் உள்ளே அழுகைச் சத்தம் மட்டும் கேட்கும்!

ரகுவால் பொறுக்க முடியவில்லை, இந்த சஸ்பென்சை! இன்று எப்படியும் கேட்டுவிடுவது என்று முடிவெடுத்தான்.

சத்தம் ஓய்ந்து, சரவணன் வாசலுக்கு வந்து நிற்பது தெரிந்தது.

''ஹலோ சார்'' என்று வணக்கம் சொன்னான் ரகு.

அடுத்து என்ன பேசுவது என்று தயங்கினான்.

''வாங்களேன், நம்ம வீட்டுக்கு என்று வலிய அழைத்தான்.

சரவணனும் பிகு பண்ணாமல் கிளம்பி வந்துவிட்டான்.

''என் மனைவி மகப்பேற்றுக்காக ஊருக்குப் போயிருக்காங்க. முன்னே நாங்க அபிராமபுரத்திலே இருந்தோம். வீட்டுச் சொந்தக்காரர், காலிப் பண்ணச் சொல்லிட்டாரு. உடனே இங்கே குடி வந்தாச்சு!''

சரவணன், தான் எல்.ஐ.சி.யில் வேலை பார்ப்பதைச் சொன்னான்.

''வீட்டுலே யாருக்கும் உடம்பு சரியில்லையா? சத்தம் கேட்டதே?'' என்று நாசூக்காய் விசாரித்தான் ரகு.

சரவணன் மௌனமாய் அவனைப் பார்த்தான். கண்களில் சோகம் தோன்றி மறைந்தது.

''யாரிடமாவது பேசினால் எனக்கும் ஆறுதலாய் இருக்கும்தான்'' என்று மெல்லிய குரலில் சொன்னான்.

ரகு, அவன் கைகளைப் பற்றிக் கொண்டான்.

''நானும், விமலாவும் - அதுதான் என் மனைவி பெயர். காதலித்துக் கல்யாணம் செஞ்சுக்கிட்டோம். காதல் சுகமானதுதான். ஆனால், கல்யாணம் பொறுப்புகளுடன் கூடிய சுமையானது. எங்களுக்குள் நல்ல புரிதலும், அன்பும் இருந்தன. சுஜா பிறந்தவுடன், சொந்த, பந்தங்களற்ற வெறுமை புரிய ஆரம்பித்தது. எங்க பொண்ணு சுஜா, பத்து மாதக் குழந்தை இப்ப தனக்குன்னு குழந்தை பிறந்தவுடனே, தன்னோட அப்பா, அம்மாவை நினைக்க ஏங்க ஆரம்பிச்சுட்டா என் மனைவி. பெற்று வளர்த்த பெற்றோருக்கு, காதல் என்ற போதையில், துரோகம் பண்ணிட்டதாய் ஒரு குறுகுறுப்பு என் மனைவியிடம் அவ கோபத்தையும், ஏக்கத்தையும் வெளிப் படுத்தற வடி

காதல் பொன்மொழிக் கதை

3



காஸ்தான், நீங்க கேட்ட சத்தலும், அழுகையும்'' என்றான் சரவணன்.

அவனைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது ரகுவுக்கு.

''உங்க மனைவியோட பெற்றோர்களைப் போய்ப் பார்க்கலியா நீங்க?''

''சமாதானம் பேச, இரண்டு தரம் போனேன். வீட்டுக்குள்ளேயே விடலே'' என்றான், சரவணன். அவமானத்தை விழுங்கிய வலி தெரிந்தது, முகத்தில்.

சற்றுநேரம் அரசியல் பேசி விட்டுக் கலைந்தோம்.

''ஒரு விஷயம் ரகு. என் மனைவிக்கு என் மேலே இப்பவும் பிரியமும், காதலும் உண்டு. அவ தூக்கி எறியற பாத்திரம் எல்லாம் சுவரைத்தான் தாக்குமே தவிர, ஒரு தரம்கூட என் மேலே பட்ட தில்லை'' என்றான் சரவணன், கிளம்புவதற்கு முன்.

ஒரு வாரம் கழித்து, அலுவலகம் விட்டு திரும்பும் வழியில் ரகுவைச் சந்தித்தான் சரவணன்.

''காஃபி சாப்பிடலாமா?'' என்று வலிய அழைத்தான்.

காபி குடிக்கும்போது கேட்டான்.

''ரகு, நாளைக்கு மாலை எங்க மாமனார் வீட்டுக்குப் போய், பேசிப் பார்க்கலாம்னு இருக்கேன். விமலாவைப் பார்க்கப் பாவமாயிருக்கு'' என்

கிருஷ்ணா

நான்.

சரவணனைப் பார்க்கத்தான் பாவமாயிருந்தது ரகுவுக்கு.

''கூட, நீங்களும் வர முடியுமா? மூன்றாவது மனிதரான உங்களைப் பார்த்தால், ஒருவேளை நான் பேசறதைக் காது கொடுத்துக் கேட்பாங்க'' என்றான் சரவணன்.

''பொண்ணே வேண்டாம்னு தலை முழுகினப்புறம், எதுக்கு இங்க வரணும்? நல்ல மாட்டுக்கு...''

மனிதர்களுக்கு உறவுகளின் அருகாமையும் நெருக்கமும் முக்கியம். என் மனைவிக்கும் மகளுக்கும் அது கிடைக்கட்டும்.

சரவணன் கூடவே ரகு நிற்பதைக் கண்டதும் கொஞ்சம் அடங்கினார்.

சரவணனின் மாமனாருக்குக் கனத்த சரீரம். நல்ல தாட்டியான உயரம்.

ரகு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். அவர் மகளின் ஏக்கத்தையும், அதனால் வெளிப்படும் கோபத்தையும், அவர் பேத்தியின் மழலைப் பேச்சையும், குறும்புகளையும் சொன்னான்.

உள்ளேயிருந்து செருமல் ஒலி கேட்டது. எழுந்து உள்ளே சென்றார். திரும்பி வந்து, ரகுவைப் பார்த்துப் பேசினார்.

''இருபது வருஷம் ஆசையாய் வளர்த்த பொண்ணு, உதறிட்டு ஓடிப் போன சோகமும், அதிர்ச்சியும், அடிபட்டவங்களுக்குத்தான் தெரியும்'' என்றார்.

ரகு தலையசைத்தான், ஆமோதிப்பாய்.

''பாத்திரங்களையுமா தூக்கியடிக்கிறா? டாக்டரிடம் காட்டினாங்களாமா?'' என்றார், தவிப்பாய்.

''உங்க பாசமும், நேசமும்தான் மருந்து உங்க பொண்ணுக்கு'' என்றான், சரவணன்.

''பேசாதே'' என்பதுபோல ஒரு துவேஷப் பார்வையை வீசினார், சரவணனை நோக்கி.

''சரி, என் பொண்ணையும், பேத்தியையும் ஏத்துக்கறேன். ஆனால், வேறு யாரும் கூட ஒட்டிக்கிட்டு 'மாமா', 'அத்தை'ன்னு இந்தப் படி ஏறக்கூடாது; சொல்லிட்டேன்'' என்றார் கறாராய்.

ரகுவுக்கு அவருடைய அந்தக் கடுமையான முகம் அதிர்ச்சியாயிருந்தது. மாப்பிள்ளையாய் மதிக்க வேண்டாம். மனிதனாய்க்கூடவா பார்க்கக் கூடாது.

வீடு திரும்பும் வழியில் கேட்டுவிட்டான்!

''சரவணன், நீங்க இரண்டு பேரும் காதலிச்சீங்க, பரஸ்பர சம்மதத்தோடதான் கல்யாண முடிவை எடுத்தீங்க. ஆனால், இப்ப உங்க மனைவியும் சரி, மாமனார் வீட்டிலும் சரி என்னவோ நீங்கதான் குற்றவாளிங்கற மாதிரி நடத்தறாங்களே...'' என்றான், ரகு பொறுக்க முடியாமல்.

''எப்படி வேணும்னாலும் பார்க்கட்டும் ரகு. இப்ப என் மனைவிக்கு மறுபடியும் பெத்தவங்க பாசம் கிடைச்சுடுச்சு. என் மகளுக்கும் தாத்தா, பாட்டி கொஞ்சல் கிடைச்சுடுச்சு. எனக்குச் சந்தோஷமாயிருக்கு.''

''அதுக்காக, இவ்வளவு அவமானங்களையும் தாங்கிக்கணுமா, சரவணன்?''

சற்று நேர அமைதிக்குப் பிறகு சொன்னான், சரவணன்.


''உறவுகளின் அருகாமையும், நெருக்கமும் முக்கியம். என் மனைவிக்கும், மகளுக்கும் இப்ப அது கிடைச்சது. நிம்மதியாயிருக்கு. என்னைப் பற்றி கவலையில்லை. ஏன்னா, சிறு வயதிலேயிருந்தே நான் வளர்ந்தது அனாதை ஆசிரமத்தில்தான்!''

கொட்டிக் கிடக்கும் முத்துகள்!




எம்.ஜி.ஆர். ஒரு சகாப்தம் - கே.பி. ராமகிருஷ்ணன், விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை -2, ரூ.80/-

அரை நூற்றாண்டு காலம் போல் தமிழ்த் திரையுலகின் பேரரசராக திகழ்ந் தவர் எம்.ஜி.ஆர்! அவரோடு நிழல் போல நெருங்கி இருந்தவர் மெய்க் காப்பாளராக இருந்த கே.பி.ராம கிருஷ்ணன். அவருடைய பார்வையில் எம்.ஜி.ஆர். அப்படியே நம் கண் முன்னால் தெரிகிற முறையில் எழுத்தாக்கி யுள்ளார் 'ரஜத்'. சுவார ஸ்யமான கட்டுரைகள், படப்பதிவு களுடன்.



வாழ்க்கையை வளமாக்கும் சிறுகதை கள் - பாகம் -2, - J.P. வாஸ்வானி தமிழாக் கம்: சா.ஜெயராஜ், கண்ணதாசன் பதிப் பகம், 23, கண்ண தாசன் சாலை, தி.நகர், சென்னை - 17, விலை ரூ.150/-

நாள் ஒன்றுக்கு ஒரு கதை வரிசையில் இது இரண்டாவது பாகம். ஜூலை முதல் டிசம்பர் வரைக்கும் நூற்று எண்பத்து நான்கு கதைகள் உள்ளன. பெரும்பாலான கதைகள் விஞ்ஞானிகள், பல்துறை வித்தகர்கள், ஆன்மிகப் பெருமக்கள் வாழ்க்கையில் நடந்த உண்மைச் சம்பவங்கள். ஒவ்வொரு கதையும் தன்னம்பிக்கையூட்டி நம்மை செயல் வீரர்களாக்குபவை.



மாணிக்க வீணை ஸ்வாமிநாத ஆத்ரேயன், பண்மொழி பதிப்பகம், 12/59, வைத்தியம் அண்ணா மலை தெரு, மயிலாப்பூர், சென்னை -4,

விலை ரூ.100/-

ஆத்ரேயர் மூத்த தலை முறை இலக்கியவாதி, வட மொழியிலும் தமிழிலும் சிறப்பான புலமையுடைய வர். இந்தத் தொகுப்பில் பத்துக் கதைகளும், ஒன்பது கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. முன்னுரை யில் டாக்டர் திருப்பூர் கிருஷ் ணன் கூறியுள்ளபடி அத்த னையும் 'கொட்டிக் கிடக் கும் முத்து' ஆழமான, அர்த்தமுள்ள விஷயங்களில் நாட்டமுள்ளவர்களுக்கு உகந்த நூல்.

- அஞ்சலி

நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம்: மகிழ்ச்சிகரமான வாரம். ஆடை ஆபரண அலங்காரப் பொருட்கள் சேரும். புதிய தொழில் முயற்சிகள் கைகூடும். கல்வி வளம் மேலோங்கும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். குழந்தைகள் வழியில் சுபசெலவு ஏற்படும். நீண்ட கால கடன் தொல்லைகள் விலகும். வீடு/ மனை வாங்க நல்ல தருணம். ராகு / கேது / குரு வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

ரிஷபம்: திருமணக் காரியம் கைகூடும். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் ரெடி. நண்பர் / உறவினர் மூலம் ஆதாயம் ஏற்படும். பூமி மூலமும், தொழில்துறையில் நல்ல வளர்ச்சி ஏற்படும். தாயின் உடல் நலம் சற்று நலிவு ஏற்படும். ராகு / கேது / சனி வழி பாடு செய்து வருதல் நலம் தரும்.

மிதுனம்: புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தடை விலகித் திருமணம் கைகூடும். தெய்வீக பிரார்த்தனை நிறைவேறும். பொருளாதாரம் மேலோங்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வந்து சேரும். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். குருவழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

கடகம்: மன உளைச்சல் தீரும். திருமணம் கைகூடும். நெருங்கிய கூட்டாளிகள் விலகிப் போவார்கள். வாக்கு வன்மை மேலோங்கும். குடும்ப வாழ்வில் நல்ல மாறுதல் ஏற்படும். விலகி போனவர்கள் திரும்பி வருவார்கள். கூட்டுத் தொழில் செய்பவர்கள் அனுசரித்து போவது நல்லது. வேலை பளு அதிகரிக்கும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வருதல் நலம்.

சிம்மம்: திருமணக் காரியம் கைகூடும். தொழில்துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கல்வி வளம் மேலோங்கும். உத்தியோகத்தில் நற்பெயர்க் கிட்டும். சிலருக்கு வேலை மாற்றம் உண்டாகும். கொடுக்கல் வாங்கல் சிக்கல் தீரும். குடும்ப வழியில் அனுசரணை தேவை. சுபச் செலவுகள் ஏற்படும். வாக்கு வன்மை மேலோங்கும். ராகு / கேது / சனி / குரு வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

கன்னி: வேலையில் இடமாற்றம் உறுதி. சுபகாரிய செலவுகள் ஏற்படும். மனபிரம்மை தீரும். உடல் ஆரோக்கியம் சற்றுப் பாதிக்கும். குடும்ப வாழ்வு நன்றாக

பரத்வாஜ் பதில்கள்

● **என்னுடைய பொருளாதாரக் கஷ்டம் எப்போது நீங்கும்?**

– எம்.வெங்கடாசலபதி, சென்னை - 117

நடந்து முடிந்த புதன் தசை, கேது தசை உங்களைத் துயரத்துக்கு ஆளாக்கி உள்ளது. தற்பொழுது சுக்ரதசை ஆரம்பமாகி உள்ளது. இது உங்கள் கஷ்டங்களை விலக்கி நல்லது செய்யும். கவலைப்படத் தேவையில்லை. சுக்ர தசை சந்திரபுத்தியில் பூர்வீகச் சொத்து வந்து சேரும்.

● **என் மகளுக்கு எப்போது வேலை கிடைக்கும்? என் மகன் வாழ்க்கை எப்படி அமையும்?**

– ஜி.வீரராகவன், திருச்சி

உங்கள் மகளுக்கு 2008-ல் ஆசிரியர் வேலை கிடைக்கும்.

உங்கள் மகனுக்கு 36 வயதில் திருமணம் நடக்கும். படித்த, வேலையில் உள்ள வரன் அமையும்.

இருக்கும். எதிர்ப்புத் தொல்லை விலகும். வேலை பளு அதிகரிக்கும். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத்தில் சற்று மந்தநிலை காணப்படும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். நிலம் வாங்க நேரிடும். சனி / குரு வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

துலாம்: வீடு / பூமி மூலம் ஆதாயம் கிட்டும். திருமணக் காரியம் கைகூடும். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் கிட்டும். கணவன் / மனைவி உறவு நன்றாக இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குழந்தைகள் வழியில் மனசந்தோஷம் கிட்டும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ராகு / கேது / வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

விருச்சிகம்: புதிய வியாபாரம் கைகூடும். தடை விலகி திருமணம் நடக்கும். உறவினர்கள் மூலம் ஆதாயம் கிட்டும். குழந்தைகள் மூலம் மன மகிழ்ச்சி ஏற்படும். வெளிநாடு செல்ல வாய்ப்புக் கிட்டும். கல்வி வளம் மேலோங்கும். வராத பணம் வந்து சேரும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். குரு / ராகு / கேது / சனி வழிபாடு செய்துவர நன்மை கிட்டும்.

தனுசு: மகிழ்ச்சிகரமான வாரம். சுப காரியம் கைகூடும். உடல் நலம், இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். வெளியூர் பிரயாணம் வந்து சேரும். முயற்சி செய்யும் காரியம் வெற்றி பெறும். புதிய பதவி கிட்டும். சாதுக்கள் தரிசனம் கிட்டும். வழக்கு வெற்றி பெறும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குரு வழிபாடு செய்து வர நன்மை கிட்டும்.

மகரம்: திருமணக் காரியம் கைகூடும். கொடுக்கல் வாங்கல் எச்சரிக்கை தேவை. யாருக்கும் ஜாமீன் போடக் கூடாது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் சற்று முன்னேற்றம் ஏற்படும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வர நற்பலன் கிட்டும்.

குடும்பம்: வியாபாரத்தில் நற்பெயர் ஏற்படும். நீண்டதூர பிரயாணம் செல்ல நேரிடும். இல்லற வாழ்வில் அனுசரணை தேவை. கொடுக்கல் வாங்கல் சிக்கல் தீரும். வழக்கு வெற்றி பெறும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. பணதட்டுபாடு இருக்காது. மன நிம்மதி ஏற்படும். ராகு/ கேது / குரு / சனி வழிபாடு செய்து வர நலம் தரும்.

மீனம்: வெளிநாடு செல்லும் வாய்ப்பு வந்து சேரும். வழக்கு வெற்றியடையும். பணக்கஷ்டம் இருக்காது. கல்வி வளம் மேலோங்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். புதிய தொழில் கைகூடும். குழந்தைகளால் சுபசெலவு ஏற்படும். மனச் சலனம் தீரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பரிகாரம் தேவையில்லை.

அதெல்லாம் நல்லாதான் சொல்றீங்க.
நான் எப்ப ப்ளாக் பெல்ட் வாங்குவேன்னும் கொஞ்சம் சொல்லுங்க...




''மஞ்சுவுக்குப் பத்து வயது. இரண்டு மூன்று நாட்களாக ஜுரம். தொண்டையில் கடும் வலி. வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள டாக்டரிடம் காட்டியிருக்கிறார்கள். டான்ஸில் பிரச்னை என்று கூறியிருக்கிறார். கொஞ்சம் படித்த அவளது அம்மா, உடனே என்னிடம் கூட்டி வந்து 'இவளுக்கு டான்ஸில் இருக்கு. ஆபரேஷன் பண்ணிடுங்க' என்று நச்சரிக்க ஆரம்பித்துவிட்டார். டான்ஸிலைப் பற்றித் தெரியாமலேயே யார் யாரோ என்னென்னவோ கூறியதை மட்டும் கருத்தில்கொண்டு மஞ்சுவின் அம்மா இப்படிக் கூறியது எனக்கு வியப்பாக இருந்தது'' என்கிறார் காது, மூக்கு, தொண்டை நிபுணரான டாக்டர் துளஸிதாஸ்.

''டான்ஸில் என்பது ஒரு தசைப் பகுதிதான். இது நம் தொண்டையில் மூக்குக்குப் பின்னால் (அடினாய்டு), நாக்குக்கு அடியில், உள்நாக்குக்கு இரு பக்கமும் என மூன்று இடங்களில் இருக்கும். நாம் சாப்பிடும்போது பாதுகாப்பற்ற உணவோ, கிருமியோ, வேண்டாத பொருளோ உடன் வரும்போது, அவற்றைப் பற்றி ஆராய்ந்து உடனே தெரிவிக்கிற வேலையைத்தான் இந்த டான்ஸில்ஸ் செய்கின்றன. வந்திருக்கும் கிருமிக்கு எதிரான சக்தியைத் தயார்ப்படுத்த இது பெரும் உதவியாக இருக்கிறது. ஆனால் 'சாம்பிள்' கிருமிகளை ஆராயும்போது டான்ஸில் முதலில் இந்தக் கிருமிகளால் பாதிக்கப்பட்டு விடும்! ஜுரம், தொண்டை வலி, தொண்டைக் கட்டு உண்டாகும். இதுதான் மஞ்சு விஷயத்திலும் நடந்தது'' என்கிறார் டாக்டர் துளஸிதாஸ்.

'தொண்டைக்கு அருகில் இருக்கிற டான்ஸில்கள் இந்தப் பாதுகாப்பு வேலையைச் செய்கின்றன சரி, மூக்குக்குப் பின்னால் இருக்கிற அடினாய்டின் பணி என்ன டாக்டர்?'

''மூக்கு வழியாக வரும் காற்றில் உள்ள கிருமிகளை அடையாளம் காணுகிற வேலையை இந்த அடினாய்டு தசை



டான்ஸில் ஆபரேஷன்

அவசியமா?

செய்கிறது. இது எல்லோருக்குமே இருக்கும். 'குழந்தைகளுக்கு மூக்கில் தசை வளர்ந்துடுச்சு' என்று இதைத்தான் சொல்லுவார்கள். பிறந்த குழந்தை வளர வளர, இதுவும் கூடவே வளர ஆரம்பிக்கும். ஆறு அல்லது ஏழு வயதை நெருங்கும்போது இந்தத் தசை பெரிதாகக் காணப்படும். இந்தச் சமயத்தில்தான் மூக்கின் பாதையை இந்தச் தசை அடைத்துவிடும். இதனால் வாயால் சுவாசிக்க ஆரம்பிப்பார்கள். இப்படி வாய் வழியாகச் சுவாசிப்பதால் இவர்களது பற்கள் துருத்திக்கொண்டு வளர ஆரம்பிக்கும். இதை அடினாய்டு ஃபேஸ் என்பார்கள். ரொம்ப சீரியஸாக, அவசியமானதாக இருந்தால் மட்டுமே இந்தத் தசையை நீக்க வேண்டும். குழந்தை 12, 13 வயதை நெருங்குவதற்குள் இந்த அடினாய்டின் வளர்ச்சி தானாகவே நின்று, உருவம் சுருங்கி, இருக்குமிடம் தெரியாமல் போய்விடும். இன்றைக்கு 90 சதவிகிதக் குழந்தைகள் இந்த அடினாய்டு பிரச்னையால் பாதிக்கப்படுகிறார்கள்.

நாக்குக்கு அடியில், உள் நாக்குக்கு இரு பக்கங்களிலும் இருக்கிற டான்ஸில்களாலும் பிரச்னை வரும். இவற்றையும் 'எடுத்தோம், கவிழ்த்தோம்' என்று ஆபரேஷன் பண்ணி அகற்றிவிடக் கூடாது. மிகவும் சீரியஸான பிரச்னை இருந்து, அகற்ற வேண்டும் என்றால் மட்டுமே அகற்ற வேண்டும்.

ஆபரேஷன் செய்கிற அளவுக்கு டான்ஸில் பிரச்னை தீவிரமாகிறது என்றால், தொண்டையில் அடிக்கடி இன்ஃபெக்‌ஷன் உண்டாகும் அல்லது சுரப்பிகள் வீங்கிவிடலாம். கழுத்துச் சுரப்பிகளில் டீ.பி.க்கான அறிகுறிகள் தென்படலாம். தோல், மூட்டு சம்பந்தப்பட்ட வியாதிகள் உண்டாகலாம். 'ருமாட்டிக் ஃபீவர்' என்கிற மூட்டு அயர்ச்சிக் காய்ச்சல் உண்டாகலாம்.





■ டாக்டர் துளஸிதாஸ்

சீரான உடல்நிலை இல்லாமல், சதா வாந்தி, பசியின்மை ஏற்படலாம். இப்படிப்பட்ட நிலைகளில் டான்ஸிலை அகற்ற வேண்டியது அவசியம்.

காது வலி, சீழ் வடிதல் போன்ற பிரச்னைகளும் டான்ஸில் தாக்கிய நோய்க் கிருமிகளால் ஏற்பட வாய்ப்புண்டு. அதேபோல் டான்ஸில் பகுதியில் ஏற்படும் டிப்தீரியா, ஸெஃபல்லோ காக்கஸ் போன்ற ஆபத்தான கிருமிகள் காரியராக (Carrier) இருக்கும் பட்சத்தில் டான்ஸில் ஆபரேஷன் உடனே செய்யப்பட வேண்டும்.

டான்ஸில் ஆபரேஷன் இரு விதங்களில் செய்யப்படும். அகற்ற வேண்டிய டான்ஸில் பகுதியை மட்டும் மிக ஜாக்கிரதையாக, மற்ற சதைகளுக்கோ, நரம்புகளுக்கோ எந்தப் பாதிப்பும் உண்டாகாதபடி அகற்றுகிற 'டிசக்‌ஷன்' (Dissection Method) முறை ஒன்று; இன்னொன்று லேசர் சிகிச்சை. இதில் துளியளவுகூட ரத்தம் சிந்த வேண்டியிருக்காது. வலி இருக்காது. ஆபரேஷனுக்குப் பிறகு எந்தப் பின் விளைவுகளும் உண்டாவதில்லை. முக்கியமான விஷயம், மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு டான்ஸில் ஆபரேஷன்கள் செய்யப்படுவதில்லை'' என்கிறார் டாக்டர் துளஸிதாஸ்.

– அனாமிகா

ஜருகண்டியின் முகத்தில் வியப்பு அதிகமாகிக் கொண்டே போனது.

"நாம எங்கோ இருக்கோம்?" என்று கேட்டான்.

இதென்ன கோமாவிலிருந்து கண் விழித்த திரைப்படக் கதாநாயகியைப் போல ஒரு கேள்வி! ராமநாதனுக்கோ கடும் அதிர்ச்சி, கோபம்.

"அண்டார்டிக்கா பகுதிக்கு வந்திருக்கோம்" என்றார் எரிச்சலாக.

"அதில்லே, இது குருக்ஷேத்ரம்தானே. பின் எதற்கு எல்லா இடங்களிலும் 'தானேஷ்வர்'னு எழுதியிருக்காங்க?" என்றான் ஜருகண்டி.

நானும் இதைக் கவனித்திருந்தேன். இரயில்வே நிலையத்திலிருந்து வெளியே வந்தால், கடைகளில் உள்ள பெயர்ப்பலகைகளில் 'தானேஷ்வர்' என்றுதான் இருந்தது.

ராமநாதனின் முகத்தில் ஆசுவாசம். "ஓ, அதைச் சொல்றியா? இப்போதைய குருக்ஷேத்ரம் என்பது இரண்டரை ஜில்லாக்களைக் கொண்டது. இப்போது நாம் இருப்பது தானேஷ்வர். இன்னொன்று கர்னால். தவிர, ஜிண்ட் என்கிற ஜில்லாவில் பாதிப் பகுதி குருக்ஷேத்ரத்தைச் சேர்ந்ததுதான்.

கார் தானேஷ்வரிலிருந்து நகர்ந்து சென்றது. ஏழெட்டு கிலோமீட்டருக்குப் பிறகு வடக்குப்புறமாகப் பிரிந்து சென்ற ஒரு சாலைக்குள் நுழைந்தது.

தூரத்திலிருந்தே தெரிந்த அந்தத் திருவுருவம், இருபத்தைந்து அடி ஆஞ்நேயர்.

கார் நின்றது. "இந்த இடத்தின் பெயர் நார்காதாரி" என்றபடி இறங்கிய ராமநாதன் ஆஞ்சநேயரிலிருந்து சற்றுத் தள்ளியிருந்த ஒரு பகுதியை நோக்கி நடந்தார். "இப்போது நாம் பீஷ்மர் அம்புப் படுக்கையில் இருந்த இடத்தை நோக்கிப் போகிறோம்" என்றார்.

அப்படிக் கூறும்போதே அவர் கண்களில் ஒரு பரவசம், தொன்மையான துவாபர யுகத்துக்கு அவர் பயணம் செய்துகொண்டிருந்ததை அறிய முடிந்தது.

மகாபாரதப் போரில் பீஷ்மரின் பங்கு மகத்தானது. துரியோதனனுக்கு அவரது ஆற்றல் தெரிந்திருந்தது. கௌரவர்கள் அணியின் முதல் தானைத் தலைவர் பீஷ்மர்தான்.

பதினெட்டு நாட்கள் நடைபெற்ற மகா



குருக்ஷேத்ரம்

3


அம்புப் படுக்கை!

அருண் சரண்யா

பாரதப் போரில் பாதிக்கும் மேற்பட்ட நாட்களில் கௌரவ சேனைக்குத் தலைமை தாங்கியவர் பீஷ்மர்.

பாரதப்போர் தொடங்கிய பத்தாவது நாள். கண்ணனின் திட்டப்படி வித்தியாசமான ஒருவர், பாண்டவர் சேனைக்குத் தலைமை தாங்கினார். பீமனும் அர்ஜுனனும் அவருக்குப் பாதுகாவலர்களாக வந்தனர்.

அவர்தான் சிகண்டி.



அர்ஜுனனைவிட சிகண்டி வில்வித்தையில் சிறந்தவன் இல்லை. ஆனாலும் பீஷ்மரை சிகண்டி எதிர்கொள்ளும்போது, பாண்டவர் தரப்பில் வெற்றி ஏற்படும் வாய்ப்பு அதிகம் என்பது கிருஷ்ணருக்குப் புரிந்திருந்தது. காரணம், சிகண்டி பீஷ்மரின் பார்வையில் ஒரு பெண்.

சிகண்டி முன்னால் இருக்க, அவரைக் கேடயமாகக் கொண்டு பீஷ்மரை நோக்கி அம்புமழை பொழியத் தொடங்கினான் அர்ஜுனன். பீஷ்மரால் இதைச் சமாளிக்க முடியவில்லை. எதிர்புறம் செலுத்த அவரிடம் அம்புகளுக்குப் பஞ்சம் இல்லை. ஆனால், எதிரில் தென்படுவதோ சிகண்டி! ஒரு பெண்ணின் மீது அம்பு எய்துவது யுத்த தர்மம் இல்லையே. அந்தப் பரபரப்பான சூழலிலும் சிகண்டியின் முற்பிறவியில் தன்னையும் அறியாமல் தான் சிகண்டிக்கு இழைத்த அநீதி வந்துபோனது.

வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சரியம் காப்பதாக சபதம் செய்தவர் பீஷ்மர். தன் தம்பி விசித்ரவீர்யனுக்கு மணமுடிப்பதற்காகக் காசி நாட்டுக் குமாரிகளைச் சிறையெடுத்தார். ஆனால், அவர்களில் மூத்த பெண்ணான அம்பை, ''என்னை விட்டுவிடுங்கள். நானும் சுலப நாட்டு அரசனான சால்வனும் ஒருவரையொருவர் விரும்புகிறோம்'' என்று கூறினாள். பீஷ்மர் அவளை விடுதலை செய்தார். ''பலர் அறிய பீஷ்மரால் கடத்திச் செல்லப்பட்ட அவளைத் திருமணம் செய்வது இயலாது'' என்று சால்வன் அம்பையை மணக்க மறுத்தான். மீண்டும் பீஷ்மரை அடைந்த அம்பை, அவர் தம்பியை மணமுடிக்க சம்மதித்தாள். ஆனால், விசித்ரவீர்யனோ, ''வேறொருவனை விரும்பியவளை நான் மணக்க மாட்டேன்'' என்றான். இருபுறமும் அவமானப்பட்ட அம்பை ''பீஷ்மரே, நீங்களே என்னை மணமுடியுங்கள்'' என்றாள். பிரம்மச்சரிய விரதம் பூண்டிருந்த பீஷ்மர் மறுத்தார்.

பழி உணர்ச்சி அம்பையின் மனத்தை நிரப்பியது. சிவனை நோக்கித் தவமிருந்தாள். ''பீஷ்மரின் இறப்புக்கு நானே காரணமாக வேண்டும்'' என்று வரம் கேட்டாள். அளிக்கப்பட்டது. பாஞ்சால மன்னனின் மகளாகப் பிறந்தும் வேறொரு வரத்தின் விளைவாக ஆணாக மாறினாள். சிகண்டி என்ற புதிய பெயர் கொண்ட அவள், பீஷ்மரின் முடிவுக்குக் காத்திருக்கத் தொடங்கினாள்.

இப்போது போர்க்களத்தில் சிகண்டியின் பின்னால் நின்றபடி அர்ஜுனன் அம்புகளை பீஷ்மரின்மீது பொழியத் தொடங்க, பீஷ்மர் துரியோதனின் தம்பிகளில் ஒருவனான துச்சாதனனிடம், ''இந்த அம்புகள் சிகண்டியினுடையவையல்ல; அர்ஜுனனுடையவைதான். நண்டின் குஞ்சுகள் தன் தாயின் உடலை எப்படிக் கிழிக்குமோ

அதுபோலத்தான் இந்த அம்புகள் என் உடலைக் கிழிக்கின்றன'' என்று மகிழ்ந்தார்.

''பரசுராமரையே வென்றவர். கங்கா தேவியின் தவப்புதல்வர். தந்தைக்காக வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சரிய விரதம் பூண்டவர். அவர் முக்தி அடைந்த இடத்தைத்தான் நெருங்கிக் கொண்டிருக்கிறோம்'' என்று ராமநாதன் கூறினார்.

''மூணு பேரைக் குறிப்பிட்டீங்களே அதிலே யாரு இங்கே இறந்தாங்க?'' என்று அப்பாவித்தனமாகக் கேட்டான் ஜருகண்டி.

''நீ என்ன பாரதம் படிக்காத பாரதப் பிரஜையா? நான் வர்ணித்த மூன்று வாக்கியங்களுமே ஒருவருக்கானவைதான். அவர்தான் பீஷ்மர்'' என்றார்.

தன் உடல் முழுவதும் அர்ஜுனனின் அம்புகள் சல்லடையாய்த் துளைக்க, பீஷ்மர் தேரிலிருந்து கீழே விழுந்தார். ஆனால், அவரது உடல் தரையைத் தீண்டவில்லை. செங்குத்தான நிலையில் அம்புகள் அவர் உடலைத் தாங்கி இருந்தன.

அனைவரும் பீஷ்மர் இருக்கும் பகுதியை நோக்கி குவியத் தொடங்கினார்கள். பாண்டவர்கள், கௌரவர்கள் இரு தரப்பினருக்கும் பீஷ்மர் பாட்டனார். துரியோதன், அர்ஜுனன் இருவருமே அவர் மடியில் தவழ்ந்தவர்கள். ஓர் ஆசானாக பார்த்தனுக்கு வில்வித்தையைக் கற்றுக் கொடுத்தவர். துரியோதனன் மட்டுமல்ல பாண்டவர்களும் கலங்கிப் போய்க் கண்களில் நீர் பெருக நின்றார்கள். பீஷ்மர் உள்ளவரை போரில் பங்கேற்க மாட்டேன் என்ற கர்ணன்கூட அந்த இடத்தை நோக்கி விரைந்தான்.

அத்தனைபேரும் அருகில் இருக்க, அர்ஜுனனைத்தான் அருகில் அழைத்தார் பீஷ்மர். ''நீ செலுத்திய அம்புகள் எதுவும் என் தலையில் படவில்லை'' தலை தொங்குகிறது. அதனால் ஏற்படும் வலிதான் அம்புகளினால் ஏற்படும் வலியை விட அதிகமானதாக இருக்கிறது'' என்றார்.

துரியோதனனும் பிறரும் தகுந்த தலையணை எடுத்து வரும் முயற்சியில் ஈடுபடத் தொடங்க, பாட்டன் மனமறிந்து செயல்பட்டான் அன்புப் பேரன். தொங்கிக் கொண்டிருந்த பீஷ்மரின் தலைக்குக் கீழே மூன்று அம்புகளை அர்ஜுனன் செலுத்த, அவை செங்குத்தாக பீஷ்மரின் தலையை ஆதரவாகத் தாங்கிப் பிடித்து நின்றன.

அங்கே இருந்த பீஷ்மர் சிலை அதை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது. அம்புப் படுக்கையில் பீஷ்மர் கிடக்க அருகில் மகா பாரதப் பாத்திரங்கள்.

'இந்துக்களின் மனதில் நீங்கா இடம் பெற்ற ஒரு புனித சரித்திரத் தலத்தில் - அதுவும் திருப்புமுனை சம்பவம் ஒன்று நடைபெற்ற இடத்தில் நின்றுகொண்டு இருக்கிறோம்' என்ற எண்ணமே ஒரு பரவசத்தைத் தந்தது.

''தொடக்கத்திலே இந்தச் சிலை இங்கே கிடையாது. காஞ்சி மகாமுனிவர்தான் இதற்கு ஏற்பாடு செய்தார். 'உருவ வழிபாடு நம் மக்களின் மனதில் பதிந்த ஒன்று. எனவே, குருக்ஷேத்திரத்தின் இந்தப் பகுதியில் பீஷ்மர், அர்ஜுனன் போன்றோரின் சிலைகள் அவசியம்' என்று அபிப்ராயப் பட்டார்.

''இந்தச் சிலை இங்கே நிறுவப்படுவதற்கு முன்னாலே இதுதான் பீஷ்மர் உயிரை விட்ட இடம் என்பதற்கு என்ன சாட்சி இருக்கிறது?'' என்று கேட்டான் ஜருகண்டி. கேட்டு முடித்தவுடனேயே இதற்காக ராமநாதன் தன்னைத் திட்டுவாரோ என்ற கவலை அவன் முகத்தில் வெளிப்பட்டது. ஆனால், ராமநாதன் கோபிக்கவில்லை. ''அதுதான் சாட்சி'' என்றார். அவர் விரல்காட்டிய இடத்தில் ஒரு கிணறு காணப்பட்டது.


(பயணிப்போம்)



அர்ஜுனனைப் பார்த்து, "நீ செலுத்திய அம்புகள் எதுவும் என் தலையில் படவில்லை" என்றார் பீஷ்மர்!


ஒரு கட்டடத்தின் உச்சியிலிருந்து கொலை நடந்த இடத்தைப் பார்த்தார் விஷ்வா.
மிகக் குழப்பமான ஒரு ஸ்பாட்தான் இது!
சி.ஐ.டி. விஷ்வா துப்பறியும்
இறந்தவனைத் தேடு!
அங்கே தெரியும் அந்தக் குறுக்குச் சந்துக்குள் போய்ப் பார்க்கவேண்டும்...
கீழே வந்து, அந்தக் குறுகலான சந்துக்குள் நுழைந்த விஷ்வா...
அந்த 'ஸ்பாட்'டுக்கு மிகப் பக்கமாகவே இந்த சந்து இருக்கே...!
இந்த வழியை போலீஸ் ஆராய்ந்திருக்க வேண்டும்!
சரி நம்ம நாடகத்தை நடத்திப் பார்த்துவிட வேண்டியதுதான்!


அலுவலகத்தில் சகாக்களை அழைத்து...
சந்தானம், நீங்கதான் கொலை பண்ணப்படும் நபர்...
துரை, நீங்கதான் அந்த மூணாம் மனிதர். இந்தச் சந்திலிருந்து வர்றீங்க...
எஸ் சார்!
பொதுமக்கள் பயந்து ஓடற அளவுக்கு உங்க நடிப்பு பயங்கரமாக இருக்கணும்...
மறுநாள் அந்த ஸ்பாட்டில்...
ஐயோ என்னைக் காப்பாத்துங்க!
நீ குளோஸ் இன்னிக்கு?
!
?



பொதுமக்கள்...
என்ன இது? இதே இடத்தில் ஏற்கனவே ஒரு கொலை விழுந்ததே...
இந்த ஏரியாவுக்கு ராசியே இல்லை!
மூன்றாம் நபர் பாய்ந்து லாரிக்கு அருகே வர...
ஒருவர் லாரியில் அடிபட்டது போல் நடிக்க, விஷ்வா குறித்துக் கொண்டார்.
கமிஷனர் அறை...
தற்செயலாய் ஆள் மாறாட்டம் நடக்க முப்பது சதவிகித வாய்ப்புத்தான்...
அவனைக் கண்டுபிடிக்க என்ன வேணுமோ கேளுங்க...
கொலைக்குப் பயன்பட்ட கத்தியைப் பத்திரப்படுத்தி வைத்துவிட்டேன்...
(தொடரும்)

டைட்டானியம் தொழிற்சாலை அமைப்பது குறித்து பொதுமக்களிடமே கருத்துக் கேட்கப்படுமென பல்வேறு கட்சிகள், தனியார் அமைப்புகள் தனித்தனியாக அறிவித்துள்ளன!

-செய்தி

இம்பிட்டாங்கய்யா

மாயாண்டி, அப்பாசாமி, மூனீஸ்வரன் மூவரும் ஒரு டீக்கடையின் பெஞ்சை தேய்த்துக் கொண்டிருந்தபோது, ஒரு வேன் வந்து நிற்கிறது. அதிலிருந்து இறங்குகிறது ஒரு கோஷ்டி.

கோஷ்டி 1: வணக்கங்க! நாங்க ஒ.ஒ.ஔ கட்சியில இருந்து வர்றோம். புதுசா வரப்போற 'டைட்டானியம்' பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க?

மாயாண்டி: அந்தப் படம்தான் ஏற்கனவே வந்துட்டுப் போயிடிச்சேங்க.

அப்பாசாமி: டேய், இது அடுத்த பார்ட்டா இருக்கும்டா.

மூனீஸ்வரன்: அப்படியா? ஹீரோயின் யாரு? அந்தப் படத்துல



ஜொம்பிட்டாங்க...

நடிச்ச ஹீரோயின் மாதிரி சோக்கா இருக்குமா?

மாயாண்டி: அது என்னடா பெரிய ஹீரோயின்? நம்ம 'சிவாஜி' ஸ்ரேயாவுக்கு கால் தூசி ஆவுமா? என்ன தான் சொல்லு, நம்ம ஊரு பொண்ணுங்க மாதிரி அழகு யாருக்குமே வராதுடா.

கோஷ்டி 1: ஹலோ, நீங்க சொல்றது 'டைட்டானிக்' படம். நாங்க சொல்றது தொழிற்சாலை. அது வந்தா விவசாய நிலமெல்லாம் பாழாயிடும். அதை நீங்க ஆதரிக்கறீங்களா, எதிர்க்கறீங்களா?

அப்பாசாமி: அலுமினியம் தெரியும். அது என்னங்க டைட்டானியம்? அது என்ன மாதிரி பாத்திரம்?

கோஷ்டி:1 ஆக, நீங்க அதை எதிர்க் கறீங்க இல்லியா?

முனீஸ்வரன்: நாங்க எங்கேங்க எதிர்த் தோம்?

கோஷ்டி 1: சோறு போடற நிலத்துல தோண்டிப் போட்டா சும்மா இருப்பீங் களா?

மாயாண்டி: அது எப்படிங்க?

கோஷ்டி 1: அப்ப, எதிர்க்கறீங்கதானே? ரொம்ப நன்றிங்க. உங்க பேருங்களைச் சொல்லுங்க குறிச்சுக்குறோம்.

(பெயர்களைக் குறித்துக்கொண்டு வேன் புழுதியை வாரி இறைத்துவிட்டுச் செல்கிறது)

அப்பாசாமி: என்ன மாயாண்டி, வந் தாங்க என்னமோ கேட்டாங்க, டைட் டானியம்னா என்னடா?

முனீஸ்வரன்: ஏதாவது அணுகுண்டா இருக்கும்டா.

மாயாண்டி: அந்தப் படம்கூட ரெண்டு பார்ட் வந்துடுச்சே பெரிய பாம்பு வருமே அதானே?

முனீஸ்வரன்: அது அனகோண்டா, நான் சொல்றது அணுகுண் டுப்பா.

மாயாண்டி: அதோ பாருடா, இன்னொரு வேன் வருது வாங்க! வாங்க! என்ன வேணும்?

கோஷ்டி 2 : நாங்க எ.ஏ.ஐ கட்சியில் இருந்து வர்றோம். இந்த டைட்டானியம் தொழிற்சாலை வர்றதைப் பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க?

முனீஸ்வரன்: என்னமோ விவசாய நிலத்துல கட்டப் போறதாச் சொன்னாங் களே...

கோஷ்டி 2: நிலத்துலதானே கட்டடத் தைக் கட்டமுடியும். அந்தரத்துல எப்ப டிங்க கட்டறது?

அப்பாசாமி: நீங்க சொல்றது நியாய மாதான் இருக்கு.

கோஷ்டி 2: ஆக, நீங்க இதை வர வேற்கறீங்க இல்லையா?

மாயாண்டி: நாங்க எப்பங்க வரவேற் றோம். முதல்ல அது என்ன தொழிற் சாலைன்னு சொல்லுங்க?

கோஷ்டி 2 : அந்தத் தொழிற்சாலை வந்தா எத்தனைப் பேருக்கு வேலை கிடைக்கும் தெரியுங்களா? இது நல்ல விஷயம்தானே?

முனீஸ்வரன்: வேலை கிடைக்கறது நல்ல விஷயம்தான்.

கோஷ்டி 2 : உங்கப் பேரைச் சொல் லுங்க?

முனீஸ்வரன்: வேலை கொடுக்கப் போறீங்களா?

கோஷ்டி 2: இந்தத் திட்டத்தை ஆதரிக் கறீங்க இல்லியா, அதுதான் உங்கப் பேரைக் குறிச்சுக்கறோம். போய்ட்டு வர்றோம்ங்க.

மாயாண்டி: ஏம்ப்பா, உங்களுக்கு ஏதா வது புரியுதா?

அப்பாசாமி: இல்லையேப்பா, டீ சாப்பிட வெளியே வந்தது குத்தமா போச்சு.

மாயாண்டி: ஒருவேளை நம்மளை வெச்சு ஏதாவது காமெடி கிமெடி பண்றாங் களோ?

முனீஸ்வரன்: ஐயையோ! இன்னொரு வண்டி வருதுப்பா, வாங்க ஓடிடலாம்.

(மூவரும் பின்னங் கால் பிடறியில் பட, ஓட்டமெடுக்கிறார்கள்)

ஜாலி ஸ்டோர்ஸ்

வட்டமேஜை

ஆகஸ்ட் ஆண்டு மலரில் மீண்டும் தொடரும் என்று அறிவிப்புச் செய்திருந்த சுதாசேஷயனின் ஸஹஸ்ரநாமம் எதிர்பார்த்த படி வரவில்லையே, ஏன்?

செகந்திராபாத், வி.வெங்கட்ராமன்

ஸ்ரீ லலிதா பகுதி-II 16.9.2007 இதழில் ஆரம்பமாகிறது. தாமதத்துக்கு மன்னிப்புக் கோருகிறோம். - ஆர்.

பார்த்திபன் கனவைப் பலமுறை படித்திருந்தும், இன்றுதான் புதிதாகப் படிப் பதைப் போல ஆர்வத் துடன் படிக்க முடிகிறதே, அதுதான் கல்கியின் காலத் தைக் கடந்து நிற்கும் நடை!

திருநெல்வேலி, வெ.கல்யாணி

'**கா**வ(த)ல் தேவதை'யின் கால் கட்டைவிரல் தொடங்கி, கபால உச்சிவரை குடிகொண்டுள்ள சாமுத்ரிகா லட்சணத்தைக் கண்முன் காட்சியளிக்கச் செய்கிறது பழநி பாரதியின் கவிதை.

கு.கழுகாசலபுரம், எஸ்.ஏ.கேசவன்

திருப்பூர் நகரம், தீவிரவாதிகளின் பிடியில் சிக்குவதற்கு முன்பாக அரசு விழித்துக்கொள்ள வேண் டும்.

உறையூர், சொ.சுப்பராமன்


விஷம கூடில் அளித்திருந் தாலும் விசால மனதோடு விஷால் அளித்த பேட்டி செம அசத்தல்!

அயன்புரம், த.சத்தியநாராயணன்

அனுபவங்களின் தொகுப்பாக வெளி வரத் துவங்கியிருக்கும் 'இளைச்சாலை' தொடரில் சுவாரஸ்யத்துக்குக் குறைவிருக் காது என்று நம்புகிறோம்.

மதுரை, என்.பாலகிருஷ்ணன்

காலத்தைக் கடந்து நிற்கும் நடை!



‘தூரத்தும் நிழல்’ கதை... செவிட்டில் அறைந்தால் ஏற்படும் வலியை மனத்தில் ஏற்படுத்தியது.

திருப்பரங்குன்றம், எஸ்.சங்கர்

பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகள் ஓர் இன்ச்கூட குறையவில்லை என்பதை உள்ளும்-புறமும் பகுதியில் படிக்கையில் நெஞ்சை உருக்கியது!

நாகர்கோவில், இந்திரன்

இதிகாசத்தை இதுவரை செவி வழிச் செய்தியாகவே கேட்டுவந்த எங்களைக் கைபிடித்து யுத்த பூமிக்கே அழைத்துச் செல்வதுபோல் உள்ளது குருக்ஷேத்ரம்!

நல்லாலூர், வி.கௌரி சங்கர்



நிதர்சன உண்மை!



ஒரு பத்திரிகை தவறு செய்கிறபோது அதைத் தைரியத்துடன் சுட்டிக்காட்டும் கல்கியின் பொறுப்புணர்ச்சி, ‘பாதகம் செய்வோரைக் கண்டால் நீ பயங் கொள்ளல் ஆகாது பாப்பா’ என்ற மகாகவியின் பாடலை நினைவுறுத்துகிறது.

திருப்பூர்-4, பா.சு.மணிவண்ணன்

மணிபுதுநகர், என்.சந்தானம்

‘அறிந்தும் அறியாமலும்’ தொடர் ஒரு வாழ்வியல் மருத்துவக் கட்டுரை என்று நினையாமல் ஏன் அதனை ஒரு பாலியல் கட்டுரையாக நினைக்கின்றீர்கள்?

லால்குடி, ஆனந்தி

‘ஏற்கெனவே பேதலித்துப் போயிருக்கும் இந்தச் சமுதாயம், குழந்தைகளையே பாலியல் சின்னங்களாகப் பார்க்கத் தூண்டப்படும்’ என்ற தங்களின் வரிகள் நிதர்சன உண்மை.

திருச்சி, டி.தேசிகன்

‘திருத்தங்கள் இந்த பாதகத்தை’ படித்ததும் நெஞ்சு பதறுகிறது. அது பெற்றோர்களுக்கு ஓர் எச்சரிக்கைமணி!

சென்னை-17, ஆர். விஜயலக்ஷ்மி

ஸ்பீடு போஸ்ட்



வாக்காளர் அடையாள அட்டையின் அவசியத்தை உணர்த்தி, அதனைப் பெறுவது எப்படி என்று கூறியது பயனுள்ள செய்தி!

நாகர்கோவில், ஏ.பி.எஸ்.ரவீந்திரன்

கனிமொழி கருணாநிதியின் பேட்டி முதிர்ச்சியுடன் அளிக்கப்பட்டதாக அமைந்தது.

கூத்தப்பாக்கம், சு.மூர்த்தி

‘முரட்டு ஆட்சி; முட்டுக்கட்டை அரசியல்’ எனும் தலையங்கம் வோட்டுப் போடும் மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பதாக இருந்தது.

பாளையங்கோட்டை, கே.மோகன சுந்தரம்





அடுத்த மாதம் ஒளிபரப்பாக இருக்கும் கலைஞர் தொலைக்காட்சி, அரசு கேபிள் வழியாக ஒளிபரப்பப் படுமா?- இதுதான் கேபிள் தொலைக்காட்சி வட்டாரத்தில் இன்று பரபரப்பாகப் பேசப்படும் விஷயம். தினகரன் பத்திரிகை சர்வே, அதைத் தொடர்ந்து தினகரன் பத்திரிகை மீது தாக்குதல், அதனால் மூன்று பேர் மரணம், மத்திய அமைச்சர் பொறுப்பிலிருந்து தயாநிதிமாறன் விலகல் என்று அதிரடியான அரசியல் நிகழ்வுகளைத் தொடர்ந்து விஸ்வரூப மெடுத்தது கேபிள் தொலைக்காட்சி பிரச்னை.

''இன்று கேபிள் விநியோகஸ்தராக ஒருவர் வெற்றிகர மாகச் செயல்பட வேண்டுமென்றால் ஆள் பலமும், அதிகார பின்னணியும் தேவை'' என்று சொல்கிறார் முன்னணி கேபிள் தொலைக்காட்சி நிறுவனத்திடமிருந்து ஒளிபரப் பைப் பெற்று விநியோகிக்கும் டீலர் ஒருவர். தமிழகத்தில் இந்தக் கேபிள் தொலைக்காட்சி விநியோகத்தில் மட்டும் வருடத்துக்கு 500 கோடி ரூபாய் புரள்கிறதாம். தயாநிதி மாறனுடன் உரசல் காரணமாக கேபிள் விநியோகத்தை அவர் கையிலிருந்து பிடுங்கிவிட முயற்சிகள் முனைப் போடு நடக்கின்றன. அதே சமயம் மக்கள் தொலைக்காட்சி யினை நடத்திக் கொண்டிருக்கும் மருத்துவர் ராமதாஸ், எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு கேபிள் தொலைக்காட்சியை மாநில அரசே ஏற்று நடத்த வேண்டுமென வற்புறுத்துகிறார். கேபிள் டி.வி.யை அரசு எடுத்துக் கொள்ளுமா அல்லது எடுக் காதா? என்பது ஒரு தனிப்பட்ட குடும்

தமிழகத்தில் கேபிள் தொலைக்காட்சி விநியோகத்தில் மட்டும் ரூபாய் 500 கோடி புரள்கிறது!



கேபிள் பிடி

பத்தில் எடுக்கப்படும் ஒருசில முடிவுகளைப் பொறுத்துதான் தெரிய வரும்.

தமிழகத்தில் இன்றுள்ள ஒன்றேமுக்கால் கோடி கேபிள் இணைப்புகளில், ஒரு கோடி இணைப்புகள் ஆறு மாநகராட்சிகள் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில்தான் இருக்கின்றன. இந்த மாநகராட்சிகளில் கேபிள் விநியோகத்தை வெற்றிகரமாக நடத்தி வருவது மாறன் சகோதரர்களின் சுமங்கலி கேபிள் விஷன்தான் (எஸ்.சி.வி.). இவர்கள் எப்படி கேபிள் தொலைக்காட்சி ஏரியாவில் நுழைந்தார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள சற்றுப் பின்னோக்கிப் போகவேண்டும்.

1993-இல் சன் தொலைக்காட்சி துவக்கப்பட்டபோது அதன் போட்டியாளர் தூர்தர்ஷன் மட்டுமே. தூர்தர்ஷனின் உப்புச்சப்பற்ற நிகழ்ச்சிகளால் சன் டீ.வி. விரைவில் பிரபலமடைந்தது. 1998 - 99-இல் ரஹேஜா என்ற மும்பை நிறுவனம், ஹாத்வே என்ற பெயரில் சென்னையில் கேபிள் தொழிலில் கால் பதித்தது. ஆங்காங்கே இருந்த சிறுசிறு ஆப்பரேட்டர்களை ஒருங்கிணைத்து, நவீன உபகரணங்கள் மூலம், நிறைய சேனல்களை ஒளிபரப்பியது ஹாத்வே. சென்னை மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட எழுபது சதவிகிதம் ஹாத்வே வசம் வந்து விட்டது. அந்தக் காலகட்டத்தில் தி.மு.க. ஆட்சி நடைபெற்றது. சில காலம் வெற்றிகரமாக இயங்கிய ஹாத்வே, தொடர்ந்து செயல்பட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு, ஒரு சமயத்தில் ஃபீல்டு அவுட் ஆகிப் போனது. இதே ரஹேஜா நிறுவனம் கேரளாவிலும், மும்பையிலும் இன்றும் வெற்றிகரமாகக் கேபிள் விநியோகம் நடத்தி வருகிறது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

ஹாத்வே விட்டுப்போன காலியிடத்தை ஆக்கிரமித்து எஸ்.சி.வி. ஆக்டோபஸ்ஸாகப் பரவி, வருடத்துக்கு இரண்டு சேனல்கள் துவக்கியது. பொதுவாகவே பே- சேனல்களை நடத்துபவர்களுக்கும், கேபிள் விநியோகஸ்தர்களுக்கும் உறவு முறை என்றைக்குமே சுமுகமாக இருக்காது. காரணம், கேபிள் நடத்துபவர்கள் தங்களிடமுள்ள இணைப்புகளின் எண்ணிக்கையைக் குறைத்துச் சொல்வது தான். 2001-ல் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா உடனடியாக கேபிள் தொலைக்காட்சி விவகாரத்தைக் கண்டுகொள்ளவில்லை. ஆனால், கலைஞர் கைதின்போது சன் தொலைக்காட்சிக்கு சீல் வைக்கும் முயற்சி நடந்தது. ஜெயா தொலைக்காட்சி முதல் பத்து அலைவரிசைக்குள் போடப்பட்டது. தமிழன் டி.வி., விண் டி.வி. ஆகியவை மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டன. விஜய் டீ.வி., ராஜ் டீ.வி.க்கள் செயற்கைக் கோள் தொடர்பு அனுமதி கிடைக்காததால் செய்திகளை ஒளிபரப்ப முடியவில்லை.



தற்போது தொலைக் காட்சித் துவங்க இருக்கும் தங்கபாலுவும், வசந்த குமாரும் எஸ்.சி.வி.



சண்டை!

வைரவிழா சிந்தனை

முதல் சத்தியாகிரஹி



தனி நபர் சத்தியாகிரஹத்தில் முதன்முதலாகச் சிறை சென்றவர் வினோபா பாவேதான். ஒற்றுமையை நிலைநாட்டுவதற்காக வாழ்நாள் முழுதும், நாடெங்கும் சுற்றுப்பயணம் செய்தவர். பூதான இயக்கத்தின் மூலம் நிலம் தானம் பெற்று, ஏழைகளின் உபயோகத்துக்குப் பயன்படுத்தினார். தலித் முன்னேற்றம், பெண்கள் நலன், போன்றவற்றுக்கு அரும்பாடுபட்டவர் வினோபாஜி. தன்னலமற்ற தீவிர தேசியவாதி.

தங்கள் சேனலை எங்கே தள்ளிவிடுமோ என்று விழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜெயா தொலைக்காட்சி, இருபத்தி நான்கு மணிநேர செய்தி சேனலை கொண்டு வருவதில் முட்டுக் கட்டைப் போடப்படவே கடுப்பானார் ஜெயலலிதா. 2006 சட்டமன்ற தேர்தலுக்கு முன்னர் கேபிள் தொலைக்காட்சியை அரசே ஏற்று நடத்தும் என்று சட்டமன்றத்தில் மசோதா கொண்டு வந்து கவர்னருக்கு அனுப்பி வைத்தார். அதைத் தொடர்ந்து 'மரியாதை(?)' நிமித்தமாக கலைஞரும், தயாநிதியும் கவர்னரைப் பார்த்தார்கள். மசோதா கிடப்பில் போடப்பட்டது. இப்போது மாநில அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்பவர்கள் அன்று 'இந்தச் சட்டம் போடுவது மத்திய அரசின் வரம்புக்குள் வருகிறது. இந்த விஷயத்தில் மாநில அரசுக்கு அதிகாரம் கிடையாது'' என்று சொன்னதும் குறிப்பிடத்தக்கது.

''கேபிள் தொலைக்காட்சி நடத்த வேண்டுமென்றால் போஸ்ட் ஆபீஸில் பணத்தைக் கட்டிவிட்டு நடத்த வேண்டியதுதான். என்ன, லோக்கலில் கொஞ்சம் பந்தாவான ஆசாமியாக இருக்கணும். தொலைக்காட்சிகளும், கேபிள் விநியோகமும் தனிநபர் கையில் ஏகபோகமாக இருக்கக் கூடாது'' என்று கேபிள் ஆப்பரேட்டர்கள் சொல்கிறார்கள். ''அரசே எடுத்துக்கொண்டால், குறைந்தபட்சம் சட்டமன்றத்தில் குறைகளைப் பற்றி பேச முடியும். குழுக்கள் மூலம் சேனல் வரிசை முறையைத் தேர்ந்தெடுக்கலாம்'' என்கிறார்கள் பா.ம.க. பிரமுகர்கள். ஆனால், கேபிள் விவகாரம் அரசின் கைக்குப் போகுமானால் ஊழலும், பாரபட்சமும் தாண்டவமாடும் என்பதையும் சொல்ல வேண்டியதில்லை.

''தனது தொலைக்காட்சி வரப்போவதால் அதற்கு வசதியாகத்தான் கருணாநிதி, அரசே கேபிள் விநியோகத்தை எடுத்துக் கொள்ளும் என்று சொல்கிறார்!'' என்று அறிக்கை விடுகிறார் ஜெயலலிதா. கட்சி இதழ் என்ற பிரசார சாதனம் கட்சி தொலைக்காட்சி என்கிற பரிணாமத்தை எட்டியிருக்கிறது. கேபிள் விநியோகம் அரசுடைமையானாலும், அது கட்சி சாயம் பெறத்தான் செய்யும். வாக்காளர்கள்தான் விழிப்புடன் இருக்கவேண்டும்.

– ஸ்ரீநி

''தனது தொலைக்காட்சி வரப் போவதால்தான் கருணாநிதி, அரசே கேபிள் விநியோகத்தை ஏற்று நடத்தும் என அறிவித்திருக்கிறார் என்கிறார் ஜெயலலிதா!



ஸ்ரீ நாத்தும் சாந்த்தும்!

ச.ந. கண்ணன்

● தினேஷ் கார்த்திக் இந்திய அணியில் சேர்க்கப்பட்டபோது ஊரே அலறியது. ஆனால், கார்த்திக்குக் கொடுக்கப்பட்ட எல்லா வாய்ப்புகளையும் பொன்னாக்கினார். ஜாபருடன் மூன்று செஞ்சுரி பார்ட்னர்ஷிப்கள். ஐந்து ஃபிஃப்டிக்கள். ஆனால், வேடிக்கை பாருங்கள். நான் தவறாமல் சி.என்.என், ஐ.பி.என். சேனலில் தினேஷ் கார்த்திக்கை மட்டம் தட்டிக்கொண்டிருக்கிறார் வர்ணனையாளரும் முன்னாள் வேகப்பந்து வீச்சாளருமான ஜவகல் ஸ்ரீநாத். அவருக்குக் கார்த்திக்கிடம் பிடிக்காதது - அடித்து ஆடுகிறாராம்.

அன்னாருக்குச் சில விளக்கங்கள். தொடக்க ஆட்டக்காரர் என்றால் நாள் முழுக்க 'டொக்' வைத்து ஆட வேண்டும் என்பது குகைவாசிகளின் சிந்தனை. கிரிக்கெட் இன்றைக்கு எவ்வளவோ மாற்றம் கண்டுவிட்டது. ஆஸ்திரேலிய ஒப்பனர்கள் ஓர் ஓவருக்கு நான்கு ரன்கள் குறையாமல் அடிக்கக் கூடியவர்கள். பந்து வீசுபவரை நிலைகுலையச் செய்ய அதிரடி ஆட்டம்தான் வலுவான ஆயுதம். கார்த்திக் தமிழ்நாடு அணியின் விசேஷமான தொடக்க ஆட்டக்காரர். தமிழ்நாட்டிலிருந்து சில நூறு மைல் தொலைவில் உள்ள ஸ்ரீநாத்துக்கு எப்படித் தெரியாமல் போனது? தினேஷ் கார்த்திக் வரவால் கர்நாடகத்தைச் சேர்ந்த உத்தப்பாவுக்கு வாய்ப்புகள் திசை திரும்பியிருக்கின்றன. அதனால்தான் என்னவோ ஸ்ரீநாத் இப்படியெல்லாம் பேசுகிறாரோ என்றும் தோன்றுகிறது.



● தோற்பதையே வாடிக்கையாகக் கொண்டிருந்த சானியாவுக்கு யாரோ வரம் கொடுத்திருக்கிறார்கள். கடந்த மூன்று வாரங்களாக அவர் கொண்டுவந்த வெற்றிகளும், கௌரவமான தோல்விகளும் அவரை மீண்டும் தலைப்புச் செய்திகளில் அலங்கரித்திருக்கின்றன. இரண்டு டோர்னமெண்டுகளிலும் சானியாவுக்குத் தார்மீக ஆதரவு கொடுக்க இந்திய ரசிகர்கள் திரண்டு வந்திருந்தனர்.

சானியா ரசிகர்கள் பக்கம் திரும்பிய போதெல்லாம் உற்சாகமாகச் சிட்டியடித்தார்கள். ஒவ்வொரு பாயிண்ட்களும் ஆரவாரமிட்டார்கள்.

நிற்க. சர்ச்சைகள் கிளம்பும்போதெல்லாம் ரோஷம் பொத்துக்கொண்டு பதில் சொல்லிக்கொண்டிருந்த சானியா கடந்த சில மாதங்களாக வாயில் பிளாஸ்திரி போட்டிருக்கிறார். சினிமாவிலும் அரசியலிலும்தான் உணர்ச்சிகள் செல்லுபடியாகும். சினிமா என்றால் கூடுதலான ஓட்டங்கள். அரசியல் என்றால் சில ஆயிரம் வோட்டுகள். விளையாட்டில் உணர்ச்சிகளுக்கு அடிமையாகிறவர்களை வரலாறு கண்டுகொள்ளவே கொள்ளாது. நாள் இறுதியில் யார் வெற்றி யார் தோல்வி என்பதுதான் முக்கியக் கேள்வியாக இருக்கும்.

● டி.வி. தொழில்நுட்பம் ஏகமாக வளர்ந்துவிட்ட பிறகு ரெண்டு தும்மல் அதிகமாகப் போட்டால்கூட அவை காமிராவில் பதிந்துவிடுகின்றன. இரண்டாவது டெஸ்ட்டின் போது திடீரென்று இந்திய இங்கிலாந்து வீரர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டது மீடியாவுக்கு நிறைய தீனி கொடுத்தது. அரசு அலுவலங்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் மெமோ வாங்கியவரை எண்ணெயில் வறுத்தெடுப்பதற்குச் சமமான டிரான்ஸ்பர், சஸ்பென்ஷன் இத்யாதி தண்டனைகள் கொடுக்கப்படும். கிரிக்கெட்டிலும் இந்த





ஏசியன் கேம்ஸில் வெள்ளிப் பதக்கம் வென்ற சாந்தியின் வாழ்க்கை இந்த அளவுக்கு திசைமாறி இருக்க வேண்டாம்.

நடைமுறைகளைப் பின்பற்ற ஆரம்பித்துவிட்டார்கள். ஜாக்கிரதை ஸ்ரீசாந்த்.

● அத்லெடிக் செய்திகள் காதில் விழும்போதெல்லாம் ஓர் உருவம் கண்முன் வந்து நிழலாடுகிறது. ஆம், புதுக்கோட்டை சாந்தியை நினைக்காமல் இருக்கமுடியவில்லை. ஏசியன் கேம்ஸில் வெள்ளிப் பதக்கம் வாங்கிய ஓர் ஏழைப் பெண்ணின் வாழ்க்கை இந்த அளவுக்கு திசைமாறியிருக்கவேண்டாம். சாந்தி அடுத்து என்ன செய்யப்போகிறார்? சாந்திக்கு ஏற்பட்ட நூதனமான பிரச்னைக்கு இந்திய விளையாட்டு அமைப்புகள் கண்ட தீர்வுதான் என்ன? விடை சொல்வார் யாரோ?

● நீச்சல் குளம் பற்றாக்குறை தொடர்பான ஆதாரச் செய்தி. தூத்துக்குடியைச் சேர்ந்தவர் நீச்சல் வீராங்கனை வெண்பா (அட, அழகான தமிழ்ப் பெயர்!). இவர் இஸ்லாமாபாத்தில் நடக்கவிருக்கிற ஆசிய நீச்சல் போட்டியில் கலந்துகொள்ளவிருக்கிறார். இது குறித்து அவர் சன் நியூஸில் பேட்டியளித்தபோது சொன்ன தகவல்: ''எங்க தூத்துக்குடியில் பயிற்சிகள் செய்ய ஒரு நீச்சல் குளம் கூட கிடையாது. ரொம்பக் கஷ்டமா இருக்கு.''

இரண்டு லட்சம் மக்கள் தொகை உள்ள தூத்துக்குடியில் பத்துக்கும் மேற்பட்ட திரையரங்குகள் உள்ளன என்பது எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தி!

சொன்னபடி செய்வாரா முதல்வர்?

தராசு

நீங்கள் கேட்டவை


* நடவாத நடவடிக்கை!


* கேட்காத மன்னிப்பு!


* 'அடங்காத' ஆற்றல்!

● எஸ்.மீனா, ஸ்ரீரங்கம்

? ஒருபுறம் விஞ்ஞான - மருத்துவத் துறையில் நவீனமாகிறோம். மறுபுறம் சனிப்பெயர்ச்சி கடவுள் ஆராதனை போன்றவற்றில் படுவேகம்... எது நம்முடைய முகம்?

! விஞ்ஞான முன்னேற்றத்தைப் பயன்படுத்திக்கொண்டு மருத்துவம் மூலம் ஆரோக்கியம் தேடும்போதே, அவனின்றி ஓரணுவும் அசையாது என்பதையும் ஏற்றுக்கொண்ட முகம்.

● லெ.நா.சிவகுமார், சென்னை - 33

? இந்தியாவில் வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் ஒரே மாநிலம் தமிழகம்தான் என்று உள்ளாட்சித்துறை அமைச்சர் மு.க. ஸ்டாலின் பெருமிதத்துடன் சொல்கிறாரே?

! பெருமிதப்பட எதுவுமில்லை. வேலையில்லா இளைஞர்களே இல்லாத மாநிலமாக மாற்ற என்ன செய்யலாம் என்று சிந்திப்பதும், அதற்குச் செலவிடுவதும் பெருமிதத்துக்குரியவை.

● அ.ராஜா ரஹ்மான், கம்பம்

? கலைஞர் ஆட்சியும் காமராஜர் ஆட்சிதான் என்று கனிமொழி கூறியிருப்பது பற்றி...?

! கனிமொழி கவிதையும், வாலி கவிதையும் ஒன்றுதான் என்று சொன்னால் ஏற்பாரா?!

● ஆர்.ராமசுப்ரமணி, திருவாரூர்

? ஒரு நல்ல சமுதாயத்துக்குச் சாதி - சமயம் அவசியமா?

! அவசியமில்லைதான். வள்ளலாரின் மனப் பக்குவம் வந்துவிடுமேயானால் ஜாதி - சமய

சழக்கை விட்டேன் - அருள் ஜோதியைக் கண்டேனடி'' என்று பாடினாரே! இந்த மனப் பக்குவம் இன்று மக்களை விடவும் அரசியல்வாதிகளுக்கே அதிகம் தேவைப் படுகிறது.

● எச்.டி.ஆன்ட்டனி தமிழரசன்,
முமபை - 17 ☐

? "தீவிரவாதி என்று கூறி, இந்திய டாக்டரைச் சிறையில் அடைத்த விவகாரத்தில் மன்னிப்புக் கேட்கத் தேவையில்லை'' என்று ஆஸ்திரேலிய பிரதமர் கூறியது சரியா?

! மன்னிப்புக் கேட்டால் உடனடியாக 'விசா'வைத் திரும்ப வழங்க நேரிடும். இப்போது ஹைகோர்ட் போராடித் தான் 'விசா' பெறவேண்டும். சுலபமல்ல. தலைதப்பியது தம்பிரான் புண்ணியம்தான் போங்க. We will be judged by the company we keep- மறக்கலாமோ!

● கே.எல்.சுந்தரூபி,
மேலகிருஷ்ணன்புதூர்

? தென்பெண்ணையின் குறுக்கே கர்நாடக அரசு அணை கட்ட முயற்சி செய்கிறது என்கிறாரே ஜெயலலிதா?

! துரைமுருகன் இதை மறுத்திருக்கிறார். ஆனால், இந்த விஷயத்தில் ஜெ. ஆதாரமின்றிப் பேச முகாந்திரமோ, அவசியமோ இல்லை. ஆகவே, தமிழக அரசு விழிப்புடன் இருப்பது நல்லது. காவேரி விஷயத்தில் ஏமாந்ததுபோல் ஆகிவிடக் கூடாது. முதல்வர், நதிகள் இணைப்புக்கு மத்திய அரசை முடுக்கிவிட முயன்றிருக்கிறார். அதை நடைமுறைப்படுத்துவதே, விவசாயத்துக்கு மட்டுமல்ல, வெள்ளத் தவிர்ப்புக்கும் சரியான தீர்வு.



● அ.யாழினி பார்வதம்,
சென்னை - 78

? லாலு, ராணுவ விமானத்தை நடுரோட்டில் இறக்கியது பற்றி...?

! விமானமென்ன, விட்டால் நாட்டையே நடுத்தெருவில் இறக்கி நிற்கவைக்கக் கூடியவர் தான்!

● ஜி.எஸ்.ராஜன்,
சென்னை - 42 ★

? வல்லரசான அமெரிக்காவில்கூட பாலம் உடைந்து ஏழு பேர் மரணம்...! உங்கள் கருத்து...?

! யானைக்கும் அடி சறுக்கும். இந்த விபரீதத்தையொட்டி எல்லாப் பாலங்களிலும் வலிமைச் சோதனை நடத்தி, முன் னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புவோம். பட்ட காலிலேயே படாமலிருந்தால் சரி.

● கே.எஸ்.கோவர்த்தனன்,
சென்னை - 42

? சென்னை மாநகராட்சியின் சமுதாய நலக்கூடங்கள் பராமரிப்புப் பணிகளைத் தனியாரிடம் தரும் ஒப்பந்தத்தை, கூட்டணி கட்சிகள் எதிர்த்து, ஆர்ப்பாட்டம் செய்கின்றனவே?

! நம்மால் சரியாகச் செய்யமுடியாததை, பிறரைக்கொண்டு செய்து முடிப்பதே புத்திசாலித்தனம். தனியார்வசம் பராமரிப்பு என்பது சுத்தமாகவும்

☐ ரூ.100/- பரிசு பெறுபவர்:
எச்.டி.ஆன்ட்டனி தமிழரசன், மும்பை-17

★ ரூ.50/- பரிசு பெறுபவர்:
ஜி.எஸ்.ராஜன், சென்னை - 42

ஊழலின்றியும் உதவிகரமாகவும் இருந்தால், மக்கள் கொஞ்சம் கூடுதலாக வாடகை தரவும் தயங்க மாட்டார்கள். எப்படியும் அதிகபட்ச வாடகையை நிர்ணயம் செய்யப் போவது நகராட்சிதானே.



● **க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்**

? ***மணல் திருட்டுக்குத் துணை போனால் அதிகாரிகள் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளாரே - சொன்னபடி செய்வாரா?***

! செய்யலாம். மதுரை தினகரன் அலுவலக தாக்குதல் வழக்கில்கூட, காவல்துறை டி.எஸ்.பி. குற்றம்சாட்டப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளாரே! அதிகாரிகளை ஆட்டிப் படைக்கும் ஆதிக்க சக்திகள் மீது, நடவடிக்கை எடுப்பதுதான் நடக்காமலே போய்விடும்.

● **என்.சண்முகம், திருவண்ணாமலை**

? ***"அடக்குமுறைக்கும் அராஜகத்துக்கும் அஞ்சாத சிங்கங்கள்தான் அ.தி.மு.க.வினர்" என்கிறாரே ஜெயலலிதா?***

! ஆமாமாம், அதன் தலைமை, அடக்குமுறை செய்ய அஞ்சாது; தூண்டப்பட்டால், தொண்டர்கள் அராஜகத்தில் ஈடுபட அஞ்சமாட்டார்கள்.

● **ஜி.பாபு, திருச்சி - 4**

? ***செல்வந்தர்களின் ஆக்கிரமிப்பிலுள்ள நிலங்களைப் பறிமுதல் செய்து, நிலமற்றவர்களுக்கு வழங்கவேண்டும் என்கிறாரே மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் என்.வரதராஜன்?***

? நில உச்சவரம்புச் சட்டத்தை ஏற்கெனவே அமல்படுத்தி, உபரி நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்குக் கொடுத்தாச்சு. உச்சவரம்பை மேலும் குறைச்சா விவசாயம் விளைச்சல் பாதிக்கப்படும். சிலர் பினாமியா நிலம் வைத்திருந்தால் தப்புதான். ஆனால், அதை எப்படி நிரூபிக்கிறது? காம்ரேடுக்குத் தெரியாதது இல்லே. அரசியல் நிர்பந்தங்கள் கம்யூனிஸ்டுகளையும் விட்டு வைக்கிறதில்லே.

● **டி.கே.சுப்பிரமணியன், திருப்பரங்குன்றம்**

? ***சஞ்சய் தத்துக்குத் தண்டனையும் வழங்கிவிட்டு, 'நம்பிக்கை இழக்க வேண்டாம்' என்று அறிவுரையும் வழங்கியுள்ளாரே நீதிபதி?***

! சஞ்சய் தத்தாவது நம்பிக்கை இழப்பதாவது! சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறாரே..! நன்நடத்தை ஜாமீன் என்று ஒன்று இருக்கில்லே... 'பரோல்' வேற!

● **பி.தர்ஷினி, குடந்தை**

? ***ஜீவஜோதியின் பல்டியால் அண்ணாச்சி தப்பிவிட்டாரே?***

! இது இப்படியிருக்க, மன்சூர் அலிகான் வழக்கிலோ அவர் குற்றத்தை ஒப்புக்கொண்ட பிறகும், தண்டனை ரத்தாகி இருக்கிறது. பின்னணியில் என்ன நடந்தது? 'சட்டம் ஒரு கழுதை'யென்பது சரியாகத்தான் இருக்கிறது!

● **எல்.எம்.மங்கை, திருவண்ணாமலை**

? ***நடிகர்-நடிகையர் கல்யாணச் செய்திகள் பொது மக்களுக்கு அவசியமா?***

! பொது மக்களுக்கு வசியம்; அதை வைத்து சம்பாத்தியம் பண்ணும் மீடியாவுக்கு அவசியம்!

● **டி.ஜி.எஸ். சென்னை - 5**


? ***சிவாஜி வெற்றிப் படமா?***

! ஆமாம்! வெற்றிபெற்ற வெற்றுப் படம்! ●

ஆசிரியர் பக்கம்

அம்மா, பெண்களுக்குச் சம உரிமை எப்போ கிடைக்கும்?

யார் சொன்னது இன்னும் கிடைக்கலைன்னு...? சில பெண்களுக்கு அதை எப்படிப் பயன்படுத்திக்கிறதுன்னு தெரியலை... அவ்வளவுதான்!'



– இது ஒரு மேலைநாட்டு கார்டூன் சித்திரம்! - ஜோக் என்கிற ரீதியில் இது பெண்களைக்கூட சிரிக்க வைக்கும்.

ஆனால், கொஞ்சம் சிந்தித்தால், 'உரிமை' என்றாலே 'வன்முறையுடன் கூடிய எதிர்ப்பு' என்பதைத்தான் இந்த கார்டூன் பதிவு செய்கிறது.

பெண்களுக்குச் சம உரிமை பெற்றுத் தரும் நோக்கில் நாம் இயற்றும் சட்டங்கள் தோற்றுப் போகின்றன!

பெண்ணுக்குச் சொத்தில் பங்கு பெற்றுத் தர சட்டம், கல்வியில் சம உரிமை வழங்க சட்டம், வரதட்சணைக் கொடுமையை எதிர்க்க சட்டம், எல்லாமே வந்துவிட்டன. எனினும், வரதட்சணையை நம்மால் ஒழிக்க முடியவில்லை. பெண் கல்வி இன்னமும் பல இலட்சம் குடும்பங்களில் வீண் செலவாகவே கருதப்படுகிறது.

ஆனால், ஆண்கள் உரிமை காக்கும் சங்கம் தொடங்கப்படுகிறது! பெண்களின் கொடுமையிலிருந்து ஆண்களைக் காக்க வேண்டுமாம்! வரதட்சணை சட்டமும் பாலியல் கொடுமைக்கு எதிரான சட்டமும் ஆண்களைப் பழிவாங்க பெண்களால் துஷ்பிரயோகம் செய்யப் படுகின்றனவாம்!

உரிமை என்பது கடமையுடன் இணைந்த சுதந்திரம். இந்தச் சூத்திரத்தை 'உரிமை என்பது வன்முறையுடன் கூடிய எதிர்ப்பு' என்று மாற்றி எழுதி விட்டோம்! அதனால்தான் பெண்களுக்கு உரிமை என்று பேச்செடுத்தாலே ஆண்கள் அஞ்சுகிறார்கள். உரிமை கைவந்த கிறுகிறுப்பில் பல பெண்களும் அகந்தை கொள்கிறார்கள்.

ஆழ்ந்த மனித நேயத்தைப் பகிர்ந்து கொள்ளும் ஓர் ஆணும் பெண்ணும் பாலின பேதத்தைக் கடந்து ஒருவரையொருவர் மதித்துப் போற்றுவார்கள். இந்த உயரிய மனவளம் எல்லோருக்கும் கைவராதுதான். ஆனால், சமுதாயம் முன்னேறவும் மனித குலம் தழைக்கவும் ஆணும் பெண்ணும் சினேகமாக இருப்பது அத்தியாவசியம். அதற்காக வேணும் ஆணும் - பெண்ணும் வெறும் சகிப்புத்தன்மையைக் கடந்து சினேகம் பாராட்ட வேண்டும்; பரஸ்பரம் மதிக்க வேண்டும்; மதிப்பைப் பெற உழைக்கவும் வேண்டும். மனவளப் பெருக்கத்தின் அரும்பு இந்த உழைப்பு என்பதால்தான் திருமண பந்தத்தை வாழ்நாளுக்குமானதாக விதித்தது இந்திய பண்பாடு.

பண்பாட்டைக் காப்பாற்றி மனவளத்தைப் பெருக்க சட்டமும், நீதியும் உதவ மாட்டா... அதை ஆணும், பெண்ணும் தோளோடுதோள் உரச நின்றுதான் சாதித்தாக வேண்டும். ○

சுதந்திர தின சிந்தனைகள்!

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57 "Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.